KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 16 October 2026 இதழ்:- 30

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த நவி பிள்ளை யார்? அமைதிக்கான நோபல் பரிசும் பின்புலமும்!

சர்வதேச சட்டத்தின் வழியே உலகளாவிய அமைதியை நிலை நாட்டவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர், தென்னாப் பிரிக்கச் சட்ட வல்லுநர், சர்வதேச நீதிமன்றங்களில் நீதிபதியாக இருந்து அலங்கரித் தவர், மனித உரிமைக் காவலாளி என்று போற்றப்பட்ட இந்தியரான, தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவருமான நவநீதம் பிள்ளைக்கு (நவி பிள்ளை), 2026ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது (19ம் பக்கம் பார்க்க)



## நவநீதம்பிள்ளைக்கு நோபல் பரிசு! ட்ரம்ப் வெளியிட்ட செய்தி என்ன?



போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த தென்னாப்பிரிக்க நீதிபதியும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவருமான நவநீதம் பிள்ளைக்கு 2026 ஆம் ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசு அறிவிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் அதனை விமர்சித் துள்ளார். இந்த முடிவு அவமானகரமானது மற்றும் வெட்கக்கேடானது என அவர் (5ம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி செயலகம் நோக்கி வந்த பிக்குகள் பேரணி!



## நீதிமன்றத் தடை உத்தரவையும் சிறைச்சாலை வாகனத்தையும் பார்த்த 24 மணி நேரத்திற்குள் கூடாரங்களை அகற்றிக் கொண்டு ஓட்டம்!

முழு விபரங்கள் 25ம் பக்கத்தில்!

# ஞானசார தேரருக்காக தண்டனை குறித்து சர்ச்சையைக் கிளப்பும் இனவெறியரான முன்னாள் பிரதம நீதியரசர் சரத்சில்வா!

தேசப்பற்றுடைய சிங்களத் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைக்கும் சதித் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். பௌத்த தேரர்களுக்கு நெருக்குதல் கொடுக்கும் செயல் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



பௌத்த சாசனத்தை பாதுகாத்து போஷிக்கும் பொறுப்பு மற்றும் பௌத்த உரிமைகளை பாதுகாக்கும் தேசிய மாநாடு 12 ஒக்டோபர் 2026 நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்ற போது சரத் என் சில்வா இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஞானசார தேரருக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை முற்று முழுதாகவே சட்டவிரோதமானது என அவர் குறிப்பிட்டுள்ளார். நீதவான் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைவரான பிரிதி பத்மன் சூரசேனவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். தனது நீதிமன்றிலும் இவ்வாறான ஓர் சம்பவம் இடம் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார். எனக்கு தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் குறைவு என்ற காரணத்தினால் கடுமையான தண்டனை வழங்குமாறு உங்களுடைய நீதிமன்றிற்கு முன்னிலைப்படுத்துகின்றேன் என நீதவான் கடிதம் எழுதியுள்ளதாக சரத் என் சில்வா குறிப்பிடுகின்றார்.

இதில் ஓர் பிரச்சினை உள்ளதாகவும் இதில் சட்ட ரீதியான தன்மை என்ன எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். நீதிமன்ற அவமதிப்பிற்காக 18 மாதங்கள் சிறைத்தண்டனையே விதிக்கப்பட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் நீதியரசர் பிரிதி பத்தமன் சூரசேன, ஞானசார தேரருக்கு ஆறு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளதாகவும் சட்டத்தின் பிரகாரம் 18 மாத கால தண்டனையே விதிக்கப்பட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை டத்தே ஞானசார தேரரின் காவி உடை பலவந்தமாக அகற்றப்பட்டதாக பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஞானசார தேரரின் உடை அகற்றப்படும் நிகழ்வை வேறொரு இடத்தில் இருந்த ஒருவர் அலைபேசி மூலம் பார்க்கும் வகையில் அதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர் 8 ஆம் திகதி ஞானசார தேரரின் வேண்டுகோளின் பேரில் தான் வெலிக்கடை சிறைக்குச் சென்றதாகவும், அப்போது தனது காவி உடையை அகற்றிவிட்டு சிறைக் கைதிக்குரிய உடையை அணிவிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்து அவர் தன்னிடம் விளக்கினார் என்றும் கம்மன்பில கூறியுள்ளார்.

2018 ஆம் ஆண்டிலும் இதே போன்றதொரு சம்பவம் இடம் பெற்றதாகவும், அப்போது ஞானசார தேரர் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து அதிகாரிகள் அந்த முயற்சியைக் கைவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இம்முறை, சிறைக்கைதிக்குரிய உடையை அவருக்குப் பலவந்தமாக அணிவிக்க அதிகாரிகள் குழுவொன்று முயன்றதாக கம்மன்பில தெரிவித்துள்ளார். அந்தச் சமயத்தில், வேறொரு இடத்தில் இருந்த ஒருவர் இந்நிகழ்வைப் பார்க்கும் வகையில் சிறை அதிகாரி ஒருவர் தனது அலைபேசி கெமராவை இயக்கியதாக ஞானசார தேரர் தன்னிடம் கூறியதாகவும் கம்மன்பில கூறியுள்ளார்.

இதன் விளைவாக தேரர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்த போதிலும், தேசிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட தலைவர்கள் விடுத்த அழுத்தத்தின் காரணமாகவே ஞானசார தேரர் சிறைச்சாலையின் சீருடையை அணிய நேரிட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க கலகொட அத்தே ஞானசார தேரர் சிறையில் இருந்த போது அவரது அங்கி அகற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்த கூற்றுகள் மீது விசாரணை தொடங்கப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டியுள்ளார். இது குறித்து 13 ஒக் 2026 ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர் ஒரு ஊடக மாநாட்டைக் கூட்டி ஞானசார தேரரின் அங்கிகளையப்படுவதை ஒரு அரசாங் கத் தலைவர் தனது கைபேசியில் பார்ப்பதற்கு சிறை அதிகாரி ஒருவர் அனுமதி அளித்ததாகத் தெரிவித்தார்.

இந்த கருத்து சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாத ஒன்று என்பதால், அது தொடர்பான அறிக்கை குறித்து விசாரணை தொடங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# சவுதியில் அனோஜனின் மரண தண்டனை ரத்து!



இலங்கையைச் சேர்ந்த சிவராசா அனோ ஜனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை சௌதி அரேபிய உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளதாக இலங்கை துணை வெளியுறவு அமைச் சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்து ள்ளார்.

இலங்கை அரசாங்கம் தொடர்ந்து மேற் கொண்ட தூதரக மற்றும் சட்டரீதியான முயற்சிகளின் விளைவாக இந்த முடிவு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார்.

இதற்காக சௌதி அரேபிய அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கும் இலங்கைத் தூதர் வெளியுறவு அமைச்சகத்தின் செயலர் மற்றும் அதிகாரிகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக த்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், இலங்கை மற்றும் சௌதி அரேபிய சட்டக் குழுவினர் ஆகியோருக்கு நன்றி யைத் தெரிவித்துள்ளார். தனது அதிகார பூர்வ ஃபேஸ்புக் பக்கத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

அனோஜனுக்காக இலங்கை சார்பில் சௌதி அரேபியாவுக்குச் சென்ற சட்டக் குழுவில் இடம்பெற்றிருந்த நாடாளு மன்ற உறுப்பினரும் வழக்கறிஞருமான ஃபைசர் முஸ்தபா சௌதி அரேபிய மேல் முறையீட்டு நீதிமன்றம் முன்னர் விதித் திருந்த மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளதாக தெரி வித்தார். தற்போது நீதிமன்றத் தீர்ப்பைத் தங்கள் குழுவினர் ஆய்வு செய்து வருவதாகவும் அவர் கூறினார். மகனு க்கு மரண தண்டனை ரத்து செய்யப் பட்டமைக்கு கடவுளுக்கு தான் நன்றி சொல்ல வேண்டும். உதவிய அனைவரு க்கும் நன்றி என அனோஜனின் தந்தை சிவராசா தெரிவித்தார்.

27 வயதான கல்முனையைச் சேர்ந்த சிவராசா அனோஜன், வேலைக்காக 2025 செப்டம்பர் 4ஆம் தேதி சௌதி அரேபியாவுக்குச் சென்றார். சில மாதங் களுக்கு முன்பு இலங்கையின் பிரபல முருகன் ஆலயமாக விளங்கும் கதிர்காம த்திற்கு, நாட்டின் வடக்கு பகுதியிலிரு ந்து குழுவொன்று பாத யாத்திரை சென்றிருந்தது. இந்த பாத யாத்திரை குழுவுடன் சுப்ரமணியம் என்றழைக்க ப்படும் நாய் ஒன்றையும், பாத யாத்திரை யில் ஈடுபட்டவர்கள் அழைத்து சென்றி ருந்தார்கள்.

கல்முனை பகுதி ஊடாக பாத யாத்திரை பயணித்துக் கொண்டிருந்த தருணத் தில் சுப்ரமணியம் என்றழைக்கப்படும் நாயின் மீது இஸ்லாமிய இளைஞர் ஒருவர் தாக்குதல் நடாத்தியிருந்தார்.

இந்த இளைஞன் நாயின் மீது தாக்குதல் நடாத்தும் புகைப்படமொன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதை தொடர்ந்து இந்த விடயம் நாட்டில் பாரிய பேசுப்பொருளாகியது. இந்த நிலையில் குறித்த இளைஞன் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, போலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட முறைப் பாடுகளின் அடிப்படையில் குறித்த முஸ்லிம் இளைஞன் கைது செய்யப் பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார். நாயின் மீது தான் அறியாமல் தாக்குதல் நடாத்தியதாக தெரிவித்த இளைஞன், பொதுமக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரியிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பிலான விவாதம் சமூக வலைத்தளங்களில் தொடர்ச்சியாக பேசுப் பொருளாகி, பல்வேறு பதிவுகள் பகிரப்பட்டு வந்திருந்தன.

இந்தநிலையில் ஜீலை 27-ஆம் தேதி ஃபேஸ்புக்கில் அனோஜன் நபிகள் நாயகம் குறித்த வெளியிட்ட ஒரு கரு த்து மதநிந்தனையாகக் கருதப்பட்ட தைத் தொடர்ந்து சௌதி அரேபியக் காவல்துறையினர் அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

முதலில் அல்-அஹ்சா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அனோஜனுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை யும் 30 லட்சம் சௌதி ரியால் அபராத மும் விதிக்கப்பட்டது. எனினும் இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய் யப்பட்டதைத் தொடர்ந்து, அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்டதை தொடர்ந்து சிவராசா அனோஜனின் குடும்பத்தினர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தி த்து தங்களது மகனை மீட்க கோரி க்கை வைத்தனர்

அனோஜனுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை ரத்து செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தான் எடுப்பதாக ஜனாதிபதி இதன்போது உறுதி வழங்கியிருந்தார். இதன்படி இலங்கை சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழுவொன்றை கடந்த வாரம் சௌதி அரேபியாவிற்கு அனுப்பிய இலங்கை அரசாங்கம், அங்குள்ள சட்ட வல்லுநர் களுடன் இணைந்து உச்ச நீதிமன்றத் தில் தாக்கல் செய்வதற்கான மேன்முறை யீட்டு மனுவை தயாரித்திருந்தது.

இந்த மேன்முறையீட்டு மனு 12 மூஉவ 2026 அந்த நாட்டு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 13 மூஉவ 2026 அனோஜனுக்கு வழங்கப் பட்ட மரண தண்டனை ரத்து செய்யப் பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜையான சிவராசா அனோ ஜனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்ட னையை சவுதி அரேபிய உயர் நீதிமன் றம் இரத்துச் செய்துள்ள தீர்மானத்தை வரவேற்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். வாழ் வாதாரத்தைத்தேடி இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் எந்த வொரு இலங்கையரும் தாங்கள் தனி த்துவிடப்பட்டுள்ளதாக உணரக்கூடாது என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544**


# ஜே.வி.பி. குண்டு வீசவில்லை! சஜித் குழுவினருக்கு மகாநாயகர் பதில்!



கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மீது மக்கள் விடுதலை முன்னணி (JVP) குண்டு வீசியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு பொய்யானது என மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் திப்போட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர், 12.10.2026 கண்டி மல்வத்து மகா விகாரைக்குச் சென்று மகாநாயக்க தேரரைச் சந்தித்தபோது அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

சீனாவில் தற்போது சமூக ஊடகங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நமது நாட்டிலும் அதுபோன்று கட்டுப்படுத்துவதற்கான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். துறவிகளுக்கு எதிரான அவமதிப்புகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதை யார் செய்தாலும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

சிலர் அரசாங்கம் தொடர்பாகவும் பொய்களைப் பரப்புகிறார்கள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர், விகாரைகள் அழிந்துவிடும், பௌத்த மதம் அழிந்துவிடும், பெரஹரா ஒன்றைக் கூட நடத்த முடியாது என இவர்கள் தெரிவித்தார்கள்.

ஆனால் இவ்வருடம் கண்டி பெரஹரா மிகவும் சிறப்பாக நடத்தப்பட்டது தானே. ஜனதா விமுக்தி பெரமுன தலதா மாளிகையின் மீது குண்டுவீசியதாக சிலர் பொய் கூறுகின்றனர். அப்படி எதுவும் நடக்கவில்லை. விடுதலைப் புலிகள் குண்டுவீசியதே உண்மை.

இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட குழுவினர், தற்போதைய அரசாங்கம் இந்நாட்டை மதச்சார்பற்ற நாடாக மாற்றுவதற்கான ஆரம்ப கட்ட அடித்தளமிட்டு வருவதாக மகாநாயக்க தேரரிடம் தெரிவித்தனர்.

மேலும்மகாநாயக்க தேரர் முன்னிலையில் பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, 'கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மீது குண்டு வீசினார்கள், கதிர்காம தேவாலயத்தின் மீது குண்டு வீசியது அவர்கள்தான்' என்று குறிப்பிட்டார்.

மகாநாயக்க தேரர் (மல்வத்து பீடம்): அவர்கள் தான் குண்டுகளை வீசினார்கள் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்?

மத்தும பண்டார: அப்படித் தான் சொல்லப்படுகிறது, வணக்கத்திற்குரிய தேரரே.

மகாநாயக்க தேரர்: இல்லை, இல்லை – மற்றவர்கள் என்ன சொன்னாலும், உண்மைகள் எங்களுக்குத் தெரியும். அவர்கள் துப்பாக்கிகளைக் கைப்பற்றினார்கள் முன்னணி பணியில் இருந்த பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து துப்பாக்கிகளைப் பறித்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் செய்தது போல அவர்கள் குண்டுகளை வீசவில்லை என திப்போட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் என கூறியுள்ளார்.

# சிறுபான்மை மக்களைப் பிளவுபடுத்தும் கருத்துக்களை ஏற்க முடியாது -மனோ



அரசாங்கம், தமிழ் பேசும் மக்களை சந்தோஷப்படுத்த ஞானசாரர் விவகாரத்தை பயன் படுத்துகிறது என்ற பொருள் படும் கிரியல்லவின் கருத்து அதிக பிரசங்கிதனமானதாகும்.

மேலும் சிறுபான்மை மக்களை சுலு ஜாதி பெரும்பான்மை மக்களை மகா ஜாதி என அடையாள படுத்துகின்றமை தவறாகும். இந்த வார்த்தையாடல்களை நாம் இப்போது கடந்து வந்து விட்டோம்.

ஞானசாரர் என்ற சிறை கைதி தேரரின் சீருடை தொடர்பில் ஜனாதிபதி குழு இரண்டு வாரங்களில் முடிவு எடுக்கட்டும்.

அதேபோல்.கடந்த ஜனாதிபதி அளித்த பொது மன்னிப்பு முறைப்படி இல்லை என சட்டம் கூறுகிறது. அதையும் முறைப்படி மாற்றி ஞானசாரருக்கு இன்றைய ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினாலும், நான் ஆட்சேபிக்க போவதில்லை.

இதை எல்லாம் அரசாங்கமும், பௌத்த பீடங்களும் பார்த்து கொள்ளட்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கும், இவை தொடர்பில் பொது வெளிகளில் பேச வேண்டாம் என நான் ஏற்கனவே பொறுப்புடன் கோரி உள்ளேன். இவை இறுதியில் எங்கே போய் முடியும் என என் பட்டறிவுக்கு தெரியும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பில், மனோ கணேசன் எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேம தாசவுக்கு எழுதியுள்ள கடிதத்திலும், அவரிடம் நேரிலும் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# தாய்க்கும் மூத்த மகனுக்கும் தொடர்ந்து விளக்கமறியல்! இளையமகனுக்கு வழக்கு ஒத்தி வைப்பு!






முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியும் முன்னாள் முதற் பெண்மணியுமான ஷிரந்தி ராஜபக்ஷவை 16 ஒக்டோபர் 2026 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ். போதரகம உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் முதற்பெண்மணி தொடர்பான வழக்கு 13 ஒக் 2026 செவ்வாய்க்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவரது மூத்த மகன் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு எயார்பஸ் ரக விமானங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையின் போது இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் நாமல் ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களைப் பரிசீலித்த கொழும்பு தலைமை நீதிவான் அசங்க எஸ். போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானக் கொள்வனவு ஒப்பந்தத்தின் போது, இடைத்தரகர்கள் மூலம் பல கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கடந்த செப்டெம்பர் 4ஆம் திகதி நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

வழக்கின் விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், சந்தேகநபருக்குப் பிணை வழங்க மறுத்த நீதிமன்றம், அவரை 27 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

இது இவ்வாறிருக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி



வசந்த கரன்னகோடா ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் வழக்கு தொடர்பில் கொழும்பு உயர் நீதிமன்றம் முக்கிய உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

யோஷித ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகோடா ஆகியோருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் இலஞ்ச ஆணைக்குழு தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணைக்காக யோஷித ராஜபக்ஷ 13 ஒக் 2026 செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்திற்கு வருகை தந்து ஆஜராகியிருந்தார்.

இதன்போது கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரு தரப்புச் சமர்ப்பணங்களையும் பரிசீலித்த நீதிபதி, வழக்கின் மேலதிக நடவடிக்கைகளை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்த வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நவநீதம்பிள்ளைக்கு நோபல் பரிசு! ட்ரம்ப் வெளியிட்ட செய்தி என்ன?





போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த தென்னாப்பிரிக்க நீதிபதியும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவருமான நவநீதம் பிள்ளைக்கு 2026 ஆம் ஆண்டுக்கான நோபல் அமைதிப் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் அதனை விமர்சித்துள்ளார். இந்த முடிவு அவமானகரமானது மற்றும் வெட்கக்கேடானது என அவர் தெரிவித்துள்ளார்.

நோர்வே நோபல் குழு 9ஆம் திகதி ஆஸ்லோவில் அமைதிப் பரிசு வெற்றியாளரை அறிவித்த போது, நவநீதம் பிள்ளையைப் பாராட்டி அங்கு கூடியிருந்தவர்கள் கைதட்டினர். அப்போது நகைச்சுவையாகப் பேசிய அவர், இன்னும் கொஞ்சம் கைதட்டினால், இந்தப் பரிசை ட்ரம்புடன் பகிர்ந்து கொள்வேன் என்று குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு நோபல் அமைதிப் பரிசைப் பெற்ற வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ, தனது தங்கப் பதக்கத்தை ட்ரம்புக்கு வழங்கிய நிகழ்வைக் குறிப்பிட்டே நவநீதம் பிள்ளை இவ்வாறு கூறியதாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் அதே நாளில் நியுயோர்க்கில் நடைபெற்ற ஆதரவாளர்கள் பேரணியில் பேசிய ட்ரம்ப், இந்த நபரைப் பற்றி நான் கேள்விப் பட்டதே இல்லை. இருந்தாலும் வாழ்த்துகள் என்று தெரிவித்தார். மேலும், என்னால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அமெரிக்காவுக்கே அமைதிப் பரிசு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அது கிடைக்கவில்லை என்றும் கூறினார்.

நவநீதம் பிள்ளையைத் தேர்ந்தெடுத்த முடிவு நார்வே நாட்டுக்கு அழியாத களங்கம் எனக் குறிப்பிட்ட ட்ரம்ப், சில தீவிர சித்தாந்தவாதிகளால் நோபல் அமைதிப் பரிசின் மதிப்பு நிரந்தரமாகக் குறைந்துவிட்டதாகவும் விமர்சித்தார்.

2025 ஜனவரியில் மீண்டும் வெள்ளை மாளிகைக்குத் திரும்பியதிலிருந்து, நோபல் அமைதிப் பரிசைப் பெற வேண்டும் என்ற தனது விருப்பத்தை ட்ரம்ப் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்துள்ளார்.

எனினும், ஈரானுக்கு எதிரான போர், கிரீன்லாந்து உள்ளிட்ட பகுதிகளை இணைப்பது தொடர்பான அவரது விருப்பம், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச அமைப்புகள், ஊடகங்கள் மீதான விமர்சனங்கள் ஆகியவை அவரைப் பரிசுக்குத் தகுதியற்றவராக்குவதாக, விருது அறிவிப்புக்கு முன்னர் ஆஸ்லோவில் கருத்துத் தெரிவித்த நிபுணர்கள் குறிப்பிட்டிருந்ததாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செய்யறிவு யுகத்தில் செம்மொழித் தமிழும் தமிழர்களும்! ரொறன்ரோவில் ஒக்டோபர் 15 - 18 வரை மாநாடு!




செய்யறிவு யுகத்தில் செம்மொழித் தமிழும் தமிழர்களும்'' (Classical Tamil and Tamils in the Era of Artificial Intelligence) என்ற கருப்பொருளில் உலகத் தமிழ் ஆய்வுக் கருத்தரங்கு 2026 கனடாவின் ரொறன்ரோ மாநகரில் ஐப்பசி 15 முதல் 18 வரை நடைபெறவுள்ளது. உலகத் தமிழ்க் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கருத்தரங்கின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளராக நிமல் விநாயகமூர்த்தி அவர்கள் செயற்படுகின்றார்.

தமிழின் தொன்மையான அறிவு மரபுகளையும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியையும் இணைக்கும் நோக்கில் நடைபெறும் இக்கருத்தரங்கில் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்று, தமிழின் எதிர்கால வளர்ச்சி குறித்துப் பல்வேறு தளங்களில் ஆராயவுள்ளனர்.

தமிழர்களின் மெய்யியல், பண்பாடு, வரலாறு, புலம்பெயர் வாழ்வு மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுடன், செயற்கை நுண்ணறிவின் ஊடாகத் தமிழ்மொழியைப் பாதுகாத்து வளர்ப்பதற்கான வாய்ப்புகளும் இக்கருத்தரங்கில் முக்கியத்துவம் பெறவுள்ளன. தமிழின் தொன்மையை நவீன அறிவியலுடன் இணைத்து, உலகளாவிய அறிவுத் தளத்தில் தமிழின் இருப்பை வலுப்படுத்தும் முயற்சியாக இக்கருத்தரங்கு அமைகின்றது.

இக்கருத்தரங்கு தமிழ்மொழி ஆய்வுடன் மட்டும் நின்று விடாமல், தமிழர்களின் மெய்யியல், பண்பாடு, புலம்பெயர் வாழ்வு, வரலாறு, உலகமயமாக்கல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகிய துறைகளையும் ஆராய்வதற்கான அனைத்துலகத் தளமாக அமைகின்றது.

உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஒன்றுகூடி, தமிழின் தொன்மையையும் எதிர்கால வாய்ப்புகளையும் விவாதிக்கவுள்ளனர். குறிப்பாக, புலம்பெயர் நாடுகளில் வாழும் இளைய தலைமுறையினரிடம் தமிழைக் கொண்டு செல்லவும், கல்வி, ஆய்வு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தமிழ் பயன்பாட்டை விரிவுபடுத்தவும் இத்தகைய கருத்தரங்குகள் உதவக்கூடும்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் மொழி என்பது வெறுமனே தொடர்பாடலுக்கான கருவியல்ல. அது எமது இன அடையாளத்தின் உயிர்நாடியாகும். எனவே, தமிழுக்கான மின்னணு வளங்களை உருவாக்குதல், இளம் ஆய்வாளர்களை ஊக்குவித்தல், உலகத் தமிழறிஞர்களிடையே ஆய்வுத் தொடர்புகளை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ரொறன்ரோவில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் ஆய்வுக் கருத்தரங்கு 2026, தமிழின் கடந்தகாலப் பெருமையையும் எதிர்காலச் சாத்தியங்களையும் இணைக்கும் முக்கியமான அறிவியல் முயற்சியாக அமையட்டும்.

தொன்மை எமது வேர் தொழில் நுட்பம் புதிய சிறகுகள். இந்த இரண்டையும் இணைத்துக்கொண்டு தமிழ் உலக அரங்கில் உயர்ந்து பறக்க வேண்டும். அந்த உயரிய இலக்கை நோக்கிய அறிவியல் உரையாடலுக்கான வாய்ப்பாக, ரொறன்ரோவில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் ஆய்வுக் கருத்தரங்கு 2026 அமையட்டும்! அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிப்போம்! வாரீர்!

# ஞானசாரரின் காவியுடை நீண்ட காலத்திற்கு முன்பே களையப்பட வேண்டியது!





மதுபோதையில் வாகனம் செலுத்தியுள்ளார். அவருக்கு ஒரு மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிரான்சில் இருக்கின்றார்கள். ஆக காவியுடை களையப்படுவதற்கு இவ்வாறான தீய செயல்களே போதுமானது.

ஞானசாரரின் காவியுடை நீண்ட காலத்துக்கு முன்னரே களையப்பட்டிருக்க வேண்டும். அவருக்கு மீண்டும் காவியுடை அணிவிக்க பௌத்த தேரர்களில் சிலர் இன்று பாதயாத்திரை தொடங்கியுள்ளனர்.

ஆனால் பௌத்த தர்மத்தின்படி பராஜிகா எனப்படும் காவியுடை களையப்படுவதற்கான தீய காரியங்கள் பலவற்றைச் செய்தவர் தான் இந்த ஞானசாரர். அவர் மதுபோதையில் வாகனம் செலுத்தி நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளார். அவருக்கு ஒரு மனைவி மற்றும் மகள் ஆகியோர் பிரான்சில் இருக்கின்றார்கள். ஆக காவியுடை களையப்படுவதற்கு இவ்வாறான தீய செயல்களே போதுமானது.

அப்போதெல்லாம் இந்த மகாநாயக்கர்களும், ஏனைய தேரர்களும் எங்கிருந்தார்கள்? மகாநாயக்கர்கள் மற்றும் மகாசங்கத்தினர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டு தான் ஜே.ஆர் ஜயவர்த்தனவுக்கு முன்பிருந்தவர்கள், அவருக்குப் பின் வந்த பிரேமதாச, சந்திரிக்கா, மகிந்த, மைத்திரி மற்றும் ரணில் எல்லோரும் இந்த நாட்டை ஆட்சி செய்தார்கள்.

அப்போதெல்லாம் இந்த தேரர்களில் யாரும் மக்களுக்காக வீதிக்கு இறங்க வில்லை. இந்த அரசாங்கம் நாட்டை முன்னேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படு கின்றது. இன்னும் கொஞ்ச காலம் அவர்களுக்கு வாய்ப்பளித்து பொறுமை யாக இருந்தால் இந்த நாடு அபிவிரு த்தியைப் பெறும். (ராஜாங்கனே சத்தாரத்ன தேரர்)

# பிரம்டன் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு அபராதம்!



கனடாவில் விதிமுறைகளை மீறி செயற்பட்ட ஆலயம் ஒன்றுக்கு 10,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பிராம்ப்டன் நகரிலுள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தி ற்கே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. தற்காலிக வெளிநாட்டு ஊழியர் திட்டத்தின் விதிகளை மீறியதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆய்வு நடவடிக்கையின் போது ஆலயம் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கடந்த செப்டம்பர் 28 அன்று எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானம், அண்மையில் கனடா அரசின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அபராதம் விதிக்கப்பட்ட போதிலும், குறித்த ஆலயத்தின் தகுதிநிலை தொடர்ந்தும் செயற்பாட்டில் உள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. கனடாவில் விதிமுறைகளை மீறும் நிறுவனங்களின் விவரங்கள் அரசினால் பகிரங்கப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மண்ணில் வாழும் உலகின் முன்னணி விஞ்ஞானி



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியல் துறையை சேர்ந்த பேராசிரியர் நவரட்ணராஜா சதிபரன், 2026 ஆம் ஆண்டுக்கான உலகின் முன்னணி விஞ்ஞானிகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் புகழ் பெற்ற Stanford University ஆய்வாளர்களின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டு, சர்வதேச கல்வி வெளியீட்டாளரான Elsevier நிறுவனத்தின் Scopus தரவுகளை அடிப்படையாக கொண்டு வெளியிடப்படும் இந்த பட்டியல், உலகெங்கிலும் உள்ள விஞ்ஞானிகளின் ஆய்வு பங்களிப்புகள் மற்றும் பங்குகளை மதிப்பிடுகிறது.

2026ஆம் ஆண்டுக்கான தரவுகளின்படி, கட்டிடங்கள் மற்றும் கட்டுமானம் (Building & Construction) என்ற துறையில் உலகளவில் 56,454 ஆராய்ச்சியாளர்களில் 162ஆவது இடத்தை பேராசிரியர் சதிபரன் பெற்றுள்ளார்.

நில நடுக்கங்களை தாங்கும் கட்டிடங்கள், கட்டமைப்புகளின் உறுதி தன்மை மற்றும் நிலையான கட்டுமான பொருட்கள் தொடர்பான அவரது ஆராய்ச்சிகள் பொறியியல் துறையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையின் வட பகுதியில் உள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஒரு தமிழ் பேராசிரியரின் ஆராய்ச்சி பங்களிப்பு சர்வதேச அளவில் கவனம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக்கும் இலங்கைக்கும் பெருமை சேர்க்கும் இந்த ஆராய்ச்சியாளருக்கு வாழ்த்துகள்!

இதே நேரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய பேராசிரியர் ரஞ்சன் ராமசாமி, மருத்துவ ஆராய்ச்சி துறையில் பங்களித்துள்ளவர். வெப்பமண்டல மருத்துவம், பூஞ்சையியல் மற்றும் ஒட்டுண்ணியியல் ஆகிய துறைகளுடன் அவரது ஆராய்ச்சி பணிகள் தொடர்புபட்டுள்ளன.

2026ஆம் ஆண்டுக்கான உலகின் முன்னணி விஞ்ஞானிகள் பட்டியலில், அவரது உலகளாவிய தர வரிசை 201,129 என பதிவாகியுள்ளது.

அதே போல சிவில் பொறியியல் துறையுடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளரான டாக்டர் அருளானந்தம் அன்புருவேல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஆராய்ச்சியாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

கட்டுமானம் மற்றும் கட்டடக் கட்டமைப்புகள் தொடர்பான ஆராய்ச்சி துறையில் அவரது பெயர் பதிவாகியுள்ளது. 2026ஆம் ஆண்டுக்கான பட்டியலில், அவரது உலகளாவிய தர வரிசை 118,857 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தரவுகள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு துறைகளில் சர்வதேச ஆராய்ச்சி தர வரிசையில் இடம் பெற்றுள்ளதை எடுத்து காட்டுகின்றன.

## அமெரிக்க இடைத்தேர்தல்:- எலான்மஸ்க் செலவிட்டது 366 மில்லியன் டொலர்கள்!

அமெரிக்காவில் நடைபெறவுள்ள 2026 இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சி (Republican Party) தனது காங்கிரஸின் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள உதவும் வகையில் உலகின் முன்னணிப் பணக்காரரான எலான் மஸ்க் இதுவரை சுமார் 366 மில்லியன் அமெரிக்க டொலர்களை (அமெரிக்க நிதியுதவி) செலவிட்டுள்ளதாக 'ராய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



இதில் 276 மில்லியன் டொலர்கள் கடந்த ஜீலை மாதத்திற்குப் பிந்தைய குறுகிய காலத்திற்குள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அமெரிக்க பிரதிநிதிகள் சபை (House of Representatives) மற்றும் செனட் (Senate) சபை ஆகிய இரண்டிலும் ஜனநாயகக் கட்சி (Democratic Party) மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையிலும், எலான் மஸ்க் இந்த பெருந்தொகையைச் செலவிட்டு வருகிறார்.

தேர்தல் நிதி அறிக்கைகளின்படி, 'நியூ யார்க் டைம்ஸ் செய்தித்தாள் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல, இந்த பிரம்மாண்ட நன்கொடைகளின் மூலம் நடப்பாண்டு தேர்தல் களத்தில் மிகப்பெரிய தனிநபர் அரசியல் நன்கொடையாளராக எலான் மஸ்க் உருவெடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# தென்னிந்திய தொலைக்காட்சிகள் ஈழத்துக் கலைஞர்களின் கண்ணீரை வியாபாரமாக்காது திறமைக்கு மதிப்பளிக்க வேண்டும்

தென்னிந்திய தொலைக்காட்சி இசை நிகழ்ச்சிகள் குறித்து சமூக அக்கறையின் பதிவு இது




தென்னிந்தியத் தொலைக்காட்சி இசைப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஈழத்துத் தமிழ் இளைஞர் யுவதிகளின் கலைத்திறனை விட, அவர்களின் வறுமை, குடும்பப் பின்னணி, வாழ்க்கைத் துயரங்கள் ஆகியவை முன்னிறுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இசைப் போட்டி மேடைகள் கலைஞர்களின் குரல்வளம், இசை நுட்பம், தாள அறிவு, மேடை ஆளுமை ஆகியவற்றை மதிப்பிடும் தளங்களாக அமைய வேண்டும். போட்டியாளர்களின் வாழ்க்கைப் போராட்டங்களை வெளிப்படுத்துவதில் தவறில்லை என்றாலும், அவர்களின் துயரங்களை உணர்ச்சிகரமாகச் சித்தரித்து பார்வையாளர்களின் அனுதாபத்தைப் பெறுவது கலைக்கும் வணிகத்திற்கும் இடையிலான எல்லையை மங்கச் செய்து விடும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் போரும் இடப்பெயர்வும் பேரிழப்புகளும் முக்கியமானவை. எனினும், ஈழத்துக் கலைஞர்களைத் துயரங்களின் அடையாளங்களாக மட்டுமே சித்தரிக்காமல், அவர்களின் பன்முகத் திறமைகளுக்கும் கலை வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கும் உரிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

ஜீ தமிழ், விஜய் தொலைக்காட்சி உள்ளிட்ட நிறுவனங்கள், போட்டியாளர்களின் பிறப்பிடம் அல்லது குடும்பப் பின்னணியைப் பொருட்படுத்தாமல், அனைவருக்கும் ஒரே கலை மதிப்பீட்டு அளவுகோல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

மேலும் தற்காலிக அனுதாபத்தை ஏற்படுத்துவதுடன் நின்றுவிடாமல், இளம் கலைஞர்களின் திறமையை வளர்ப்பதற்கான பயிற்சி, வழிகாட்டுதல், எதிர்காலக் கலைப் பயணத்திற்கான ஆதரவு ஆகியவற்றிலும் ஊடகங்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

போரின் காயங்கள் பொழுதுபோக்குக்கான அலங்காரப் பொருட்களல்ல் அவை மனிதர்களின் வாழ்வில் பதிந்த உண்மைகள். அந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு மனிதநேயத்துடன் அணுகுவது ஒரு விடயம். அவற்றை உணர்ச்சிகரமான காட்சிகளாக மாற்றி, பார்வையாளர்களின் கண்ணீரையும் நிகழ்ச்சியின் வரவேற்பையும் அதிகரிப்பதே முதன்மை நோக்கமாக மாறுவது இன்னொரு விடயம். இவ்விரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை ஊடகங்கள் உணர வேண்டும். அனுதாபம் தற்காலிகம் திறமை நிரந்தரம்!

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் விளம்பர வருவாயையும் பார்வையாளர்களின் ஈர்ப்பையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. உணர்ச்சிகரமான கதைகள் பார்வையாளர்களை ஈர்க்கக்கூடும் என்பதும் இயல்பானதே.

தமிழகத்தைச் சேர்ந்த போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் கலை சார்ந்த மதிப்பீட்டு அளவுகோல்களே ஈழத்துப் போட்டியாளர்களுக்கும் பொருந்த வேண்டும்.

குரல் வளம், சுருதி, தாளம், இசை நுட்பம், பயிற்சி, பாடலின் கடினத் தன்மையைக் கையாளும் திறன், மேடை ஆளுமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அவர்களின் திறமை மதிப்பிடப்பட வேண்டும்.

ஈழத்துக் கலைஞர்களின் கண்ணீரை விட அவர்களின் குரலுக்கும் திறமைக்கும் மதிப்பளிக்க வேண்டும் கலை மேடைகள் கண்ணீரை விற்பனை செய்யும் அரங்குகளாக அல்லாமல், திறமைகளை வளர்க்கும் தளங்களாக அமைய வேண்டும் என்பதே இந்தச் சமூக அக்கறையின் மையக் கருத்தாகும். **T.K.P**

# மகாசங்கத் தூதுக்குழுவிடம் ஜனாதிபதி கூறிய கருத்துக்கள்!



இலங்கையின் சிறைச்சாலைத் திணைக்கள விதிமுறைகளின்படி, பொதுபல சேனா பொதுச்செயலாளர் ஞானசார தேரரின் காவி உடை களையப்பட்டு சாதாரண உடையில் அவர் சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சம்பவம், அண்மைய நாட்களாக மத உணர்வுகளுடனும் நாட்டின் சட்ட ஒழுங்குடனும் பிணைக்கப்பட்ட பெரும் விவாதப் பொருளாக உருவெடுத்துள்ளது.

இது தொடர்பாக மகா சங்கத்தினருடன் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற உயர்நிலைச் சந்திப்பில் ஜனாதிபதி அநுர குமாரதிசநாயக்க தெரிவித்த கருத்துகள், நாட்டின் 'சட்டத்தின் ஆட்சி' குறித்த முக்கியமான ஒரு உரையாடலைத் திறந்து விட்டுள்ளன.

ஒரு புறத்தில், தனி நபர் ஒருவருக்காகவோ அல்லது அமைப்பொன்றின் அழுத்தத்துக்காகவோ சட்டத்திற்குப் புறம்பாக நான் உத்தரவு பிறப்பிக்க மாட்டேன் என்றும், எனது தனிப்பட்ட விருப்பங்கள் நாட்டின் சட்டமாக முடியாது என்றும் ஜனாதிபதி திசநாயக்க உறுதியாகக் கூறியிருப்பது பாராட்டுக்குரிய துணிச்சலான நிலைப்பாடாகும்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவர், மகா சங்கத்தின் முன் நின்று சட்டம் அனைவருக்கும் சமமானது் அதை மீறும் அதிகாரம் ஜனாதிபதிக்கும் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தியமை, நிர்வாக ரீதியான முதிர்ச்சியையும் ஜனநாயக விதிமுறைகள் மீதான அவரது அர்ப்பணிப்பையுமே காட்டுகிறது.

அதேவேளை, ஞானசார தொடர்பிலான இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பிக்குகள் தொடர்பில் நடைமுறையிலுள்ள சிறைச்சாலைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை மறுபரிசீலனை செய்ய இரு வாரங்களில் குழுவொன்று நியமிக்கப்படும் என்ற அறிவிப்பு, அவர் மகா சங்கத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து விட்டார் என்ற விமர்சனத்தையும் மறுபுறத்தில் கிளப்பியுள்ளது.

எனினும், இந்த இரண்டு பார்வைகளையும் நடுநிலையோடு ஆராய வேண்டியது அவசியமாகும். தற்போதுள்ள சட்டத்தை மீறித் தன்னிச்சையாக ஓர் உத்தரவைப் பிறப்பிப்பதே அடிபணிதல் அல்லது அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகும். அதைத் தவிர்த்து 1877ஆம் ஆண்டின் பழமையான சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தை காலத்தின் தேவைகளுக்கேற்பவும், மத சாசன மரபுகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் சட்டபூர்வமாகத் திருத்துவதற்கு முற்படுவது ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் இயல்பான செயல்முறையே தவிர, அது அடிபணிதல் அல்ல.

புதிய திருத்தங்கள் அல்லது ஒழுங்குவிதிகள் எந்தவொரு குறிப்பிட்ட பிக்குவையும் இலக்காகக் கொண்டோ அல்லது சலுகை அளிக்கும் வகையிலோ அமையக் கூடாது என்பதில் ஜனாதிபதி தெளிவாக உள்ளார். இது ஒட்டுமொத்த சிறைமுறைமைக்கும் பொதுவானதாகவே உருவாக்கப்படும் என்ற அவரது கூற்று, தனிநபர் அரசியல் இலாபங்களுக்கான சலுகைகளை நிராகரிக்கிறது. பிக்குகள் நாட்டின் சிவில் சட்டங்களுக்கு உட்பட்டவர்களே என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அதேநேரம், பல தசாப்தங்களாக மக்கள் வணங்கி கௌரவிக்கும் ஒரு மதத் தலைவரைப் பகிரங்க வெளியில் கொண்டு வரும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து தெளிவின்மை நிலவுவதும் உண்மையே. அதிகாரிகளின் கடமை உணர்வைப் பாதுகாக்கும் அதேவேளையில், தேவையற்ற சமூகக் கொந்தளிப்புகளைத் தவிர்க்க தெளிவான சட்ட வழிமுறைகளை வகுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

அரசியல் இலாபங்களுக்காகச் சட்டத்தை வளைக்கும் கலாச்சாரம் நீண்ட காலமாக நிலவி வந்த ஒரு நாட்டில், சட்டத்தின் பாரம்பரிய வரம்புகளை மீறாமல், அதேநேரம் எழுந்துள்ள சமூக வினாக்களுக்குச் சட்டபூர்வ ஜனநாயக அமைப்புகளின் வழியே தீர்வு காண முனைவது வரவேற்புக்குரிய அணுகுமுறையாகும்.

ஜனாதிபதி நியமிக்க முன்வரும் குழு சட்டத்தின் முன் அனைவரும் சமம்என்ற அடிப்படை அரசியலமைப்பு உரிமையைப் பாதுகாக்கும் அதேவேளையில், மத நிறுவனங்களின் மரபுகளுக்கும் மதிப்பளிக்கும் ஒரு சமநிலையான வரைவை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உணர்ச்சிவசப்பட்ட விமர்சனங்களைக் கடந்து, சட்டத்தின் ஆட்சியைப் பலப்படுத்தும் ஒரு சீர்திருத்தமாகஇ து அமைய வேண்டும் என்பதே பொதுவில் சமூகத்தின் எதிர்பார்ப்பாகும்.

# தீபச்செல்வனின் தடுத்து வைக்கப்பட்ட 2 நூல்களையும் விடுவிக்க உத்தரவு!

கிளிநொச்சியைச் சேர்ந்த எழுத்தாளர் பி. பிரதீபனால் இந்தியாவில் அச்சடிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட இரு தமிழ் நூல்களை இலங்கை சுங்கத் திணைக்களத்தினர் தொடர்ந்து தடுத்து வைத்திருப்பது அவரின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்தியாவின் சென்னையில் அச்சிடப்பட்டு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட 288 நூல்கள் அடங்கிய தொகுதி, 'தேசிய நல்லிணக்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்' எனக் கூறி இலங்கை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. இத்தொகுதியில் 'இப்போதும் இங்கே இரண்டு தேசங்கள்தான்', 'எழுத்தால் நான் யுத்தம் செய்கிறேன்', 'பயங்கரவாதி' மற்றும் 'சைனைட்' ஆகிய நான்கு தலைப்பிலான புத்தகங்கள் அடங்கியிருந்தன. இவற்றுள் 'பயங்கரவாதி' மற்றும் 'சைனைட்' ஆகிய நூல்கள் புனைகதைகள் என இலங்கை கலைக் குழுவினால் சான்றளிக்கப்பட்டதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட போதிலும், 'இப்போதும் இங்கே இரண்டு தேசங்கள்தான்' நூலின் 75 பிரதிகளையும் 'எழுத்தால் நான் யுத்தம் செய்கிறேன்' நூலின் 147 பிரதிகளையும் சுங்கத் திணைக்களத்தினர் தொடர்ந்து தடுத்து வைத்திரு ந்தனர்

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் எல்.டி.பி. தெஹிதெனிய தலைமையிலான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணையின் போது, சுங்கத் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சு மற்றும் புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகார அமைச்சு உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் அதிகார வரம்புகள் இன்றி பொறுப்புகளை ஒன்றன் மீது ஒன்று சாட்டி வந்தமை தெரியவந்தது. அரச நிறுவனங்களுக்குள் தமிழ் மொழிப் புலமை இன்மையும், புத்தக அட்டையில் சித்தரிக்கப்பட்டிருந்த பிரிக்கப்பட்ட இலங்கை வரைபடம் குறித்த பயமுமே இந்த முதற்கட்டக் கைப்பற்றலுக்கு முக்கிய காரணம் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கமைய, தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு புத்தகங்களின் அனைத்துப் பிரதி களையும் உடனடியாக விடுவிக்குமாறும், இது தொடர்பான இணக்கப்பாட்டு அறிக்கையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 02 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறும் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. இவ்விசாரணையில் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணிகளான நடராஜா காண்டீபன், கலாநிதி விராஞ்சன் ஹேரத் மற்றும் எச். தமிழவள் காண்டீபன் ஆகியோர் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் திருமணமானவுடன் தூக்கிலடப்பட்ட மணமகன்! நெஞ்சைப் பதற வைக்கும் துயரச் சம்பவம்!



ஈரானில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 25 வயது இளைஞரான அலிதா ரெசா செபாஹி தனக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு சிறையில் இருந்த தனது வருங்கால மனைவியை தொலைபேசி வாயிலாகத் திருமணம் செய்து கொண்டார். எனினும் திருமணம் முடிந்து சில மணி நேரங்களிலேயே அவர் தூக்கி லிடப்பட்டதாக கூறப்படுகின்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானின் இஸ்பஹான் நகரில் உள்ள வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த அலிதா ரெசா செபாஹி மற்றும் 22 வயதான மஹ்ஷாத் கேஷானி ஆகியோருக்கு இடையேயான திருமணச் சடங்கு, மனித உரிமைகள் வழக்கறிஞர் மற்றும் இருவரின் பெற்றோர்களின் உதவியுடன் தொலைபேசி வாயிலாக உறுதியேற்று நடத்தப்பட்டது.

அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் பங்கேற்றதாகக் கூறி கடந்த ஜனவரி மாதம் கைது செய்யப்பட்ட இவர்களுக்கு நீதிமன்றம் தண்டனை வழங்கியிருந்தது. முன்னதாக ஜீலை மாதத்தில் பொதுமடியில் தூக்கிலிடப்பட இருந்த செபாஹி, அப்போது ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதால் தண்டனை தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு மனுவும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் கடந்த திங்கள் கிழமை அதிகாலையில் அவர் இஸ்பஹான் மத்திய சிறைச் சாலையில் தூக்கிலிடப்பட்டார். இந்த நிலையில் திருமணமான ஒரேநாளில் 25 வயது இளைஞரான அலிதா ரெசா செபாஹி கொல்லப்பட்டிருப்பது உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## மதுபானக் கடைகளைத் தடுப்பதால் மட்டும்...

(12ம் பக்கத் தொடர்ச்சி) இவை தான் மதுநுகர்வு தொடர்பான இன்றைய யதார்த்தநிலை. இந்த யதார்த்த நிலைகளைப் புறந்தள்ளிவிட்டு ஒருசில தலைகள் கொடிபிடிப்பதால் மட்டும் பெரிதாக ஒன்றும் நிகழப்போவதில்லை. மதுநுகர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது. தனிமனித மற்றும் சமூக ரீதியாக மட்டுமன்றிப் பொருளாதார ரீதியாகவும் அது எமக்குப் பாதகமானது. முன்னர் சமூகத்தில் நுகரப்பட்ட மதுவகைகளில் கள்ளு பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. விசேட சந்தர்ப்பங்களில் மட்டுமே சாராயம் போன்றவை பயன்படுத்தப்பட்டன. அதனால் எமது பிரதேச வருமானம் எமது பிரதேசத்துக்குள்ளேயே சுழன்றது. அத்துடன் பல பேருக்குத் தொழில் வாய்ப்புகளும் கிடைத்தது. இதனால் எமது பிரதேசத்தின் பொருளாதாரம் வளம் பெற்றது. ஆனால் இன்று அதன் பங்கு 10% -15% மட்டுமே. அதுவும் வயது முதிர்ந்தவர்களாலேயே நுகரப்படுகிறது. மிகுதி தென்பகுதியிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் வரும் மதுபானங்களாகும். இதனால் வடக்கிலிருந்து பெருந்தொகைப் பணம் வெளியேறிவருகிறது.

மதுக்கடைகள் அருகில் இருப்பதால் மதுநுகர்வு அதிகரிக்கும் என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதே. அதனை உலக சுகாதார நிறுவனமும் சுட்டிக் காட்டியுள்ளது. எனினும் அவ்வதிகரிப்பு மட்டுப்பாடுடையது. எனவே மதுநுகர்வை சமூகத்திலிருந்து முற்றாக நீக்க அல்லது இயன்றவரை குறைப்பதற்கு நீண்ட காலத் திட்டமிடலும் தொடர்செயற்பாடுகளும் அவசியம். இதுதொடர்பான விழிப்புணர்வு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் உருவாக்கப்பட வேண்டும். வெறும் போதனைகள் மட்டுமன்றி முன்னுதாரணமாகவும் நடந்துகொள்ள வேண்டும். மதுவருந்தும் தந்தையால் மகனை அதைத் தவிர்க்குமாறு கூறுவது சாத்தான் வேதமோதுவது போலத்தான். பாடாசாலை இதில் பெரும் பங்கு ஆற்ற வேண்டும். அதேபோல ஏனைய சமூக நிறுவனங்களும் தலைவர்களும் இதற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும். அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இவை தொடர்பான செயற்றிட்டங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும். மது ஒழிப்பு முயற்சிகளைவிட மதுநுகர்வை ஊக்குவிக்கும் வெளிப்புறக் காரணிகள் தாக்கம் பலமானவை என்பதைக் கருத்திற்கொண்டு செயற்பாடுகள் திட்டமிடப்படவேண்டும். அவற்றின்மூலம் ஒவ்வொருவரும் மதுவைத் தொடுவதில்லை என்று உறுதி எடுக்கும் நிலைக்குக் கொண்டு வருவதற்கு அடிமட்டத்திலிருந்தான செயற்பாடுகளே அவசியமான

யாழ்ப்பாணத்தில் இருந்து -க. அருந்தவபாலன் -


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# பண்டாரநாயக்கா கொலை வழக்கில் கண்ணுக்குப் புலப்படாத காவியுடை இப்போது ஏன் கிளர்ந்துள்ளது?

இலங்கை அரசியலில் சும்மா வாய் சப்பிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகளுக்கு கடந்த சில மாதங்களாக அடுத்தடுத்து நல்ல அவல் கிடைத்து வருகிறது. இதனால் இவர்களின் பெயர் பலவடிவங்களில் பிரகாசிக்கிறது.

நீதியரசர்களின் வயதெல்லையை அதிகரிக்கும் சட்டமூலத்தை தனித்தும் கூட்டாகவும் இவர்கள் வன்மையாக எதிர்த்து வந்தனர். 22வது அரசியல் திருத்தம் என்ற இச்சட்டத்துக்கு எதிராக ஐம்பதுக்கும் அதிகமான மனுக்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. நீதிமன்ற தீர்ப்பு எதுவோ அதனை ஆட்சித்தரப்பு ஏற்றுக் கொள்ளும் என்று ஜனாதிபதி அநுரகுமரவும் அமைச்சர்களும் உறுதி வழங்கியும் எதிர்க்கட்சிகள் அமைதி காக்கவில்லை.

நீதிமன்றத் தீர்ப்பு 22ம் திருத்தத்துக்கு ஆதரவாக கிடைத்ததாலும், தனக்கிருந்த 158 வாக்குகளை சிதறாமல் ஒன்றுகூட்டியதாலும் 22ம் திருத்தம் சட்டமாகி விட்டது. இதனைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மனைவி க்ஷிரந்தியின் நிதி மோசடி விசாரணை பரபரப்பானது. மருத்துவ சிகிச்சைக்காக அவர் சிங்கப்பூர் பறந்ததும், அங்கு சொப்பிங் செய்ததும் பல்வேறு ஊடகங்களிலும் படங்களாக வந்தன.

ஏற்கனவே கைதாகி தடுப்புக்காவலில் இருக்கும் மகன் நாமலையும், இப்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் க்ஷிரந்தியையும் சிறைச்சாலைக்குச் சென்று பார்க்கும் நிலைமை தமக்கு ஏற்படுமென்ற மகிந்த எள்ளளவும் நினைத்திருக்க மாட்டார். இவரது ஆட்சிக் காலத்தில் எத்தனை பெற்றோர் இன்று இவர் சுமக்கும் இதே வலியுடன் சிறைச்சாலைகளுக்குச் சென்று வந்தனர் என்பதை நாடு அறியும்.

இன்றைய நாட்களில் நீதிமன்றத்துக்கு வரும் அனேகமான விசாரணைகள், பல பிரபலங்கள் தாங்கள் கைது செய்யப்படுவதை தடுப்பதற்காக சமர்ப்பிக்கும் முற்கூட்டிய மனுக்கள். உயர் கதிரைகளில் அமர்ந்திருந்த போது தாங்கள் என்னென்னவெல்லாம் செய்தோம் என்பதை நெஞ்சுக்கூட்டுக்குள் பொத்தி வைத்து உணர்பவர்கள், தாங்கள் கைதாகலாம் என்ற அச்சத்தால் தள்ளப்பட்டு முற்கூட்டிய மனுக்களைதாக்கல் செய்து வருகின்றனர்.

ஜி.ஆர் என அழைக்கப்படும் கோதபாய ராஜபக்ச ஏற்கனவே தாக்கல் செய்த கைது தடைமனு நிராகரிக்கப்பட்டது. இப்போது இதற்கு மேன்முறையீடு செய்துள்ளார். க்ஷிரந்தி ராஜபக்சவும் இவ்வாறு முன் மனுதாக்கல் செய்தவர்தான். ஆனால் தீர்ப்பு சாதகமாகவில்லை.

முன்னைய ஆட்சிக் காலங்களில் ஊழல் மோசடி, லஞ்சம், அரசசொத்தை சூறையாடுதல் என்ற வகைப்படுத்தப்பட்ட மாகுற்றங்களை புரிந்த ஐம்பது பேரின் (அரசியல் பிரமுகர்கள்) பட்டியலை அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் சமர்ப்பித்தார். இவர்கள் நாட்டை விட்டு செல்ல முடியாதவாறு இரும்புவலை போடப்பட்டிருப்பதாக பிரதி அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த ஐம்பது பேரில் எத்தனை பேர் முன்பிணை மனுதாக்கல் செய்வார்களோ தெரியாது.

இவைகள் ஒருபுறம் இடம் பெற்றுக் கொண்டிருக்கையில் தலகொடஅத்தே ஞானசார தேரர் இப்பொழுது பெரும் புள்ளியாக மாறியுள்ளார். பொதுபலசேனவின் செயலாளரான இவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றில் 2018ம்ஆண்டு ஆறு வருட சிறைத்தண்டனை பெற்றவர். 2015ல் ஜனாதிபதியான மைத்திரிபாலசிறிசேன 2019 மே மாதம் 22ம்திகதி இவருக்கு ஜனாதிபதி அதிகார மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த மூன்று நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன மன்னிப்பு வழங்கியதை 2026ம் ஆண்டு செப்டம்பர் 10ம் திகதி நிராகரித்து அவருக்கான சிறைத் தண்டனையை மீள உறுதி செய்தது. இதனைத் தொடர்ந்து தேரர் தலைமறைவானார். கடந்த வாரம் கைது செய்யப்பட்ட இவர் சிறைத் தண்டனையின் மீதிக் காலத்தை சிறைக்குள் கழிக்க வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

தற்போது எதிர்க்கட்சிகளும் சில சொரியல் அணிகளும் தனியார் அமைப்பு



களும் ஞானசார தேரர் விடயத்தை தங்களுக்கான பலமான ஆயுதமாக கைகளில் தூக்கியுள்ளன. பௌத்த துறவிகள் அணியும் காவிஉடை நீக்கப்பட்டதும் சிறைச்சாலையில் கைதிகளுக்கு வழங்கப்படும் வெள்ளை நிறஉடையில் தேரரை நீதிமன்றம் அழைத்துச் சென்றதும் பௌத்தத்தையும் பௌத்த துறவிகளையும் அவமதிக்கும் செயலென இவர்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, சிறையில் இருக்கும் நாமல் ராஜபக்ச ஆகிய மூவரும் தங்கள் கட்சிகளின் சார்பில் அநுர அரசுக்கு எதிரான குரலை வெளிப்படுத்த வருகின்றனர். இந்த விடயத்தை பூதாகரமாக்கி பௌத்த மகாசங்கத்தினர் ஊடாக அநுரகுமர ஆட்சிக்கு அழுத்தம் கொடுத்து நாடளாவிய ரீதியில் இன்னொரு அறகலையை உருவாக்கும் மறைதிட்டம் இவர்களிடம் இருப்பதும் தெரிய வந்துள்ளது. மகாசங்கத்தினர் ஆட்சித் தரப்புக்கு எதிராக குரல் கொடுப்பார்களானால் அதனைப் பரவலாக்கி கூர்மையாக்கலாமெனவும் இவர்கள் எதிர்பார்த்தனர்.

பௌத்த துறவியின் காவி உடையை அகற்றிய விடயத்தை ஆட்சேபிக்கும் கடிதம் ஒன்றை மகாசங்கத்தினர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர். அவர் இதனை ஆறப்போட விரும்பவில்லை. தாமதமின்றி மகாசங்கத்தினரை அழைத்து உரையாடினார். பௌத்தசாசன விவகார அமைச்சரும், நீதி மற்றும் நல்லிணக்க அமைச்சரும் இச்சந்திப்பில் அநுரகுமரவுக்கு இடமும் வலமுமாக அமர்ந்திருந்தனர்.

சிறைச்சாலைச் சட்டத்தை மீறி காவி உடை அணிய அனுமதிப்பது அல்லது விடுதலை செய்வது போன்ற எதற்கும் தம்மால் உத்தரவிடமுடியாதென்பதை எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதி மகாசங்கத்தினருக்கு தெரிவித்தார். மூன்று வருடங்களுக்கு மேலாக சிறைத்தண்டனை தீர்ப்பு பெற்ற ஒருவர் சிறைச்சாலை உடையையே அணிய வேண்டுமென்பது அதன் நியமங்களுக்கு உட்பட்டது என்று சிறைச்சாலை ஆணையாளர் ஏற்கனவே ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார். இதனையே அநுரகுமரவும் மகாசங்கத்தினருக்கு எடுத்துச் சொன்னார்.

தனி ஒருவருக்காக (ஞானசார தேரர்) பொதுவான சட்டமொன்றை மாற்ற முடியாதென்று விளக்கிக் கூறிய ஜனாதிபதி பொதுவான நிலையில் சிறைச்சாலை சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமெனில் அதனை ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்றும், அப்போது மகாசங்கத்தினரின் ஆலோசனை பெறப்படுமென்றும் அவர்களுக்கு நோகாமல் எடுத்துக் கூறி அவர்களின் சம்மதத்தை இலகுவாகப் பெற்றுக் கொண்டார்.

இது, மகாசங்கத்தினர் ஊடாக அநுரகுமர ஆட்சித் தரப்புக்கு அரசியல்

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

நெருக்கடியை உருவாக்க திட்டம் தீட்டியவர்களின் முகத்தில் மட்டுமன்றி அவர்களின் உடல் எங்கும் கரிபூசியதாகி விட்டது.

சிறைச்சாலை சீர்திருத்தம் எப்போது தயாராகும், அதனைச் சட்டமாக்கும் பொழுது ஏற்படும் பிரச்சனைகள் எவ்வகையானவை, திருத்தம் சட்டமாகும்போது ஞானசாரதேரர் எத்தனை வருடங்களை சிறையில் கழித்திருப்பார் என்பவைகளை முற்கூட்டியே சொல்லமுடியாது. இதனை ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வாவிடம்தான் கேட்டறியவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் 1959ம் ஆண்டு செப்டம்பர் 25ம் திகதி இலங்கையின் நான்காவது பிரதமரான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க அவரது கொழும்பு றோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் நினைவுக்கு வருகிறது. பிரதமருக்கு நன்கு பரிச்சயமானவரும் அவரது தேர்தல் வெற்றிக்கு கடுமையாக உழைத்தவருமான தல்துவ சோமராம தேரரே இவரைச் சுட்டுக் கொன்றார் என்பது நீதிமன்றத்தில் நிரூபணமாகி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பிரதமர் பண்டாரநாயக்கவை சுட்டுக் கொலை செய்த சோமராம தேரரை பொலிசார் அந்த இடத்தில் வைத்தே கைது செய்தனர். இன்னொரு பௌத்த துறவியான மப்பிடகம புத்தரகித்த தேரரின் தூண்டுதலால் இக்கொலை இடம்பெற்றதும், பிரபல கேடியான ஓசிகொரியாவிடமிருந்து பெறப்பட்ட துப்பாக்கியே இக்கொலைக்கு பயன்படுத்தப்பட்டதும் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நடைபெற்ற வேளைகளில் இரண்டு பௌத்த துறவிகளும் காவிஉடை களையப்பட்டு சிறைச்சாலை உடையில் கைவிலங்குடன் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். பண்டாரநாயக்க கொலையில் தூக்கிலிடப்பட்ட சோமரத்தின தேரோ விசாரணைக் காலத்தில் கைவிலங்குடன் சிறைச்சாலை உடையில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட படம் இக்கட்டுரையின் நடுவில் இடம் பெற்றுள்ளது. பௌத்ததுறவிகள் காவிஉடை நீக்கப்பட்டு சிறைக்கூட உடைகளில் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டதை அப்போது எந்தவொரு அரசியல்வாதியோ, மகாசங்கத்தினரோ ஆட்சேபிக்கவில்லை. எதிர்த்து அறிக்கைகளும் விடவில்லை.

அறுபத்தைந்து ஆண்டுகளாக இது விடயத்தில் மௌனமாக (மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்பர்) இருந்து வந்த அரசியல்வாதிகளும் மகாசங்கத்தினரும் இப்போது ஞானசாரதேரரை முன்னிறுத்தி குரல் கொடுப்பதன் உள் நோக்கம் என்ன? ஜே.வி.பி.யின் நிழலான தேசிய மக்கள் சக்தி அரசை பௌத்தத்துக்கு எதிரானது என்று படம் காட்டி ஆட்சியைக் கவிழ்க்கவா? பௌத்தம் பௌத்தத்துக்குள்ளேயே தேடும் மதவாதம் என்று இதனைச் சொல்லலாமா?

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

10 ஒக்டோபர் 2026 2026 முதல் 16 ஒக்டோபர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர் களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கணபதிப்பிள்ளை பத்மாவதி

வேலணை முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களது 11வதுஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பத்மாவதி கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைஞ்சலி



### திருமதி பாக்கியம் தனிநாயகம்

அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, செஞ்சோலை பாரதி ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு, செஞ்சோலை, பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



### திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை

வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் முல்கைம் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்டிருந்த பாலா என்று அன்பாக அழைக்கப்படும் திருபாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களது ஆத்மசாந்திக்காக 28 செப்டம்பர் 2026 திங்கட்கிழமை அன்னாரது குடும்பத்தினர் சார்பாக கனடாவில் வசிக்கும் அவரது சஆகோதரி ராணி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார் திரு பாலசுப்பிரமணியம் ஐயாத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்



### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்

மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 09 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




03 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை அனலைதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் தனிநாயகம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




05 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி மதன் துஷாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி உருத்திரசாயி மதனின் ஆறாவது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி உருத்திரசாயி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




08 ஒக்டோபர் 2026 வியாழக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




09 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை ஊரெழுவைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது 56வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் மஹாலய விரத உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




09 ஒக்டோபர் 2026 வெள்ளிக்கிழமை மஹாலய விரத உபயமாக மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




10 ஒக்டோபர் 2026 சனிக்கிழமை யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா இணையர்களின் செல்வப்புதல்வன் துவாரகனின் 30வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் துவாரகன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




11 ஒக்டோபர் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்.திருநெல்வேலியைச் சேர்ந்த திரு துரையப்பா அழகரத்தினம் அவர்களதும் வேலணையைச் சேர்ந்த திரு இரத்தினம் செல்லத்துரை அவர்களதும் நினைவாக அன்னார்களது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் ராம் சபாரெத்தினம் செல்வன் கிருஷ்ணா சபாரெத்தினம் சகோதரர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன்கள் ராம் கிருஷ்ணா சகோதரர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் ராம் சபாரெத்தினம் செல்வன் கிருஷ்ணா சபாரெத்தினம் சகோதரர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன்கள் ராம் கிருஷ்ணா சகோதரர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




12 ஒக்டோபர் 2026 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் ராம் சபாரெத்தினம் செல்வன் கிருஷ்ணா சபாரெத்தினம் சகோதரர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன்கள் ராம் கிருஷ்ணா சகோதரர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




13 ஒக்டோபர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பிறேம்குமார் கலாஜினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிருஜன் பிறேம்குமாரின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிருஷன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுளக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




15 ஒக்டோபர் 2026 வியாழக்கிழமைகனடாவில் வசிக்கும் திரு திருமதி விஜயகுமார் ரேவதி தம்பதிகளின் அன்பு மகளும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் அன்பு மருமகளும் திரு துவாரகனின் அன்புத் துணைவியாருமான திருமதி சபீனா துவாரகனின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி சபீனா துவாரகம் அவர்கள் தனது குடும்பத்தினர் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிந்தார்

# மதுபானக் கடைகளைத் தடுப்பதால் மட்டும் மது நுகர்வைக் கட்டுப்படுத்த முடியுமா?

யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரதேச செயலர் பிரிவுகளில் புதிதாக மதுக்கடைகள் திறக்கப்படவுள்ளதை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட போராட்டங்கள் தொடர்பான முகநூல் காடசிப் பதிவொன்றின் கீழ் ஒருவர் இவ்வாறு கருத்திட்டிருந்தார். ‘ விற்கிறவனும் தமிழன் வாங்கிறவனும் தமிழன், எதிராகப் போராடுபவனும் தமிழன்.’ இன்னொருவரின் கருத்து பின்வருமாறு இருந்தது. ‘ படத்தில்( போராட்டப்) நிற்பவர்களில் சிலர் குடிப்பது எனக்குத் தெரியும்’. படத்தில் நிற்பவர்களில் குடிக்காத ஒருவரின் வீட்டில் குடிக்கும் இன்னொருவர் இருக்கக் கூடும். வேறொருவர் ‘சீப்பை ஒளித்து




வைத்தால் கல்யாணம் நின்று விடுமா’ என்று கருத்திட்டிருந்தார்.

இப்பதிவுகள் நமக்கு பெறுமதியான ஒரு செய்தியைச் சொல்லுகின்றன. இது சிக்கலான ஒரு சமூகப் பொருளாதாரப் பிரச்சினை என்பதே அது. அதனால் மதுநுகர்வைக் கட்டுப்படுத்துவதற்கு தனியே புதிதாக மதுக்கடைகள் திறக்கப்படுவதைத் தடுப்பது மட்டும் எதிர்பார்க்கும் வெற்றியைத் தரப் போவதில்லை. அதுமட்டுமன்றி அவ்வாறான கடைகள் எல்லாவற்றையும் போராட்டங்கள் மூலம் தடுக்கவும் முடியாதென்பது மற்றொரு உண்மை. அதனால் சமூகத்தில் மது நுகர்வைப் படிப்படியாக அகற்றுவதற்கு பயனுள்ள வேறு வழிமுறைகள் பற்றியும் சிந்திப்பது அவசியமாகிறது.

இதனைச் சிக்கலான ஒரு சமூகப் பிரச்சினை என்று கூறுவதற்கு பல காரணங்கள் உள்ளன. முதலாவது புதிய மதுக்கடைகள் எவ்வாறு இங்கு கொண்டு வரப்படுகின்றன? பெரும்பாலானவை இங்குள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. தமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களே இதனைப் பெற்றுக் கொடுத்தார்கள் என்பது இவற்றுக்கெதிராகப் போராடுகின்ற பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சித் தொண்டர்கள் போன்றவர்களுக்குத் தெரியாததொன்றல்ல. இருந்தும் அவர்கள் இது தொடர்பாகத் தமது கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கேள்வி கேட்கவோ அல்லது அவர்களுக்கெதிராக மக்களைத் திரட்டிப் போராடாவோ தயாரில்லை. பதிலாக உத்தியோகபூர்வமாகவோ அன்றி அரசியல் ரீதியாகவோ தவிர்க்க முடியாதவாறு பணிக்கப்பட்டவற்றை நிறைவேற்ற வேண்டியுள்ள அரச அதிகாரிகளுககெதிராகவே போராடுகின்றனர்.

அந்த அதிகாரிகள் வேறு யாருமல்லர். அவர்களும் இதே சமூகத்தின் உறுப்பினர் தான். மதுக்கடைகள் தொடர்பாக எமக்கு இருக்கும் உணர்வுகள் அவர்களுக்கும் உள்ளன. ஆனால் குறித்த ஒரு எல்லைக்குமேல் அவர்களால் எதுவும் செய்யமுடியாதென்பதே உண்மை.

இந்த உண்மையை விளங்காது பிரதேச செயலரை இடமாற்றக் கோருவதால் எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. ஒரு பிரதேச செயலரை இடமாற்றினால் அந்த இடத்துக்கு இன்னொரு பிரதேச செயலர் தான் வருவார். அவரும் அதே எல்லைக்குள் நின்று தான் செயற்பட வேண்டும். இல்லா விடில் அந்த அதிகாரிகளுக்கு வேறு சிக்கல்கள் ஏற்படக்கூடும். இதற்கு தற்போதைய சங்கானைப் பிரதேச செயலர் சிறந்த எடுத்துக் காட்டு. தானும் இந்தச் சமூகத்தின் உறுப்பினர் என்ற உணர்வு, மக்களின் கோரிக்கை என்பவற்றைக் கருத்திற்கொண்டு தற்றுணிவின் அடிப்படையில் குறித்த பிரதேசத்தில் மதுபானக் கடை திறப்பதற்கான அனுமதியை மறுத்தமைக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்புக்மைய அனுமதி வழங்கப்பட வேண்டி ஏற்பட்டது மட்டுமல்லாமல் நீதிமன்றுக்கு அவரது சொந்தப்பணத்திலிருந்து ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையை அபராதமாகவும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலாக இந்த பத்தியாளர் நன்கறிந்த இன்னொரு எடுத்துக் காட்டையும் இங்கே குறிப்பிட முடியும். அருகில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்று இருந்ததன் காரணமாக மதுபானக் கடையொன்றுக்கான அனுமதியை ஒரு பிரதேச செயலர் மறுத்திருந்தார். அதனை வழங்குமாறு ஒரு கட்சியைச் சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களில் ஒருவர் அப்பிரதேசத்துக்குரிய ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருங் கூட அவர் மீது அழுத்தம் கொடுத்தும் அவர் மசியவில்லை. பின்னர் அவர்கள் அரச அதிபரின் மூலம் அழுத்தம் கொடுத்தார்கள், அதுவும் சரிவரவில்லை.

அதேநேரம் வேறொரு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர், அவர் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர் தனது அல்லக்கை ஒன்றுக்கு விதிகளுக்குப் புறம்பாக மண் அள்ளுவதற்கான அனுமதியை வழங்குமாறு அவருக்கு அழுத்தம் கொடுத்தார். அதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. முடிவு அந்த பிரதேச செயலர் ஒரு சில வாரங்களில் இடமாற்றப்பட்டார். நேர்மையாகச் செயற்பட்ட அவருக்காக்க் குரல் கொடுக்க யாருமில்லை. இதுதான் யதார்த்தம்.

முன்னைய, தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் மதுக்கடைக்கான அனுமதிகளைப் பெற்றுக் கொடுத்து பெரிய தொகைகளைக் கறந்தது மட்டுமன்றி பினாமிகளின் பெயரில் உரிமையாளர்களாகவோ அன்றி பங்குதாரர்களாகவோ இருப்பதான செய்திகளும் உண்டு. இதற்கு மேலாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் யாழ்ப்பாணத்தில் பல மதுக்கடைகள் உள்ளன. ஆனால் தனது பிரதேசத்தில் எதுவும் இல்லை. ஒன்றிரண்டு அவசியம் தேவை என்று முன்னர் வெளிப்படையாகவே கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்த ஒன்று. அவரது கோரிக்கை தவறனாதல்ல.

ஏனெனில் அவர் மது அருந்தாதவர்களுக்கு மட்டுமல்ல மதுநுகர்வோருக்குமான மக்கள் பிரதிநிதி. எனவே அவர்களின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியது அவரது கடமை. அதற்கு மேலாக சட்டரீதியான மதுபானம் பெறமுடியாத காரணத்தால் பலர் கள்ளச்சாராயம் குடிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். அவரது அதிஷ்டமோ அல்லது துரதிஷ்டமோ அவர் ஒன்றிரண்டு கேட்க அது 16 ஆகப் பெருகி விட்டது. அந்த விடயத்திலும் கூட அதனைப் பலர் அரசியலாக்க முனைந்தார்களேயன்றி அதனைத் தடுப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளையோ அல்லது அவற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலுருந்து சமூகத்தைப் பாதுகாப்பதற்கான செயற்றிட்டங்கள் எதனையுமோ முன்னெடுத்திருக்கவில்லை.

தெல்லிப்பளையில் இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டத்தில் வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது தமது பிரதேச எல்லையினுள் இது வரை எந்த மதுக்கடைகளும் இருந்ததில்லை, இனியும் அனுமதி வழங்கப்படமாட்டாது எனக் கருத்துத் தெரிவித்திருந்ததைக் காணமுடிந்தது. அவரது நோக்கம் நல்லது தான்.

ஆனால் இந்தக் கருத்தை எவ்வளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் அல்லது அது சாத்தியமாக அமையும். வலிகாமமும் இலங்கையிலுள்ள ஒரு பிரதேசம். இலங்கையில் மது நுகர்வும் மதுக்கடைகளும் சட்டரீதியானவை. அதற்கான அனுமதிகளை அரசாங்கமே வழங்கி வருகின்றது. அந்த வகையில் ஒரு பெரிய பிரதேசத்தில் மதுக்கடைகளுக்கு அனுமதியில்லை என எவ்வாறு தடுக்கமுடியும்? மதுக்கடை அனுமதிக்கான முன்னிபந்தனைகளின் அடிப்படையில் குறிப்பாகக் கோயில், பாடசாலை மற்றம் அவை போன்ற நிறுவனங்களிலிருக்கும் சூழலில் அமைக்கக்கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்படுமேயன்றி வலி வடக்குப் பிரதேசத்தில் எங்குமே இருக்கமுடியாது என்பது சாத்தியமற்றது மட்டுமன்றி அதனைத் தடுப்பதற்கான அதிகாரமும் உள்ளூராட்சி மன்றங்களுக்கில்லை.

மறுபுறத்தில் இது அடிப்படை உரிமை.களை மீறும் ஒரு செயலாகும். இலங்கையின் சட்டங்களுக்கமைவாக ஒருவர் தான் விரும்பிய தொழில் முயற்சியை தொடங்குவதற்கான அடிப்படை உரிமை அரசியலமைப்பு ரீதியாக அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனைத் தடுப்பது அவரது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும். அதேபோலவே நுகர்வோரின் அடிப்படை உரிமையும். இலங்கையில் மது ஒரு நுகர்வுப்பொருள். மற்றவர்களுக்கு தீங்கிழைக்காத முறையில் அதனை நுகர்வதற்கான அடிப்படை உரிமை அதனை நுகர்வோருக்குண்டு. இலங்கையில் மது அருந்துவோர் 18 வயதும் அதற்குமேலும் 50% அதாவது 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் இருவரில் ஒருவர் மது அருந்தி வருகிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அது 20%. அதாவது ஐவரில் ஒருவர் மது அருந்துகின்றனர். உண்மையான வீதங்கள் இதை விடக் கூடவே இருக்கும். இந்நிலையில் ஒருவரின் உரிமையில் இன்னொருவர் எவ்வாறு தலையிட முடியும்? அவ்வாறெனில் இலங்கையில் முற்றாக மதுவைத் தடை செய்ய வேண்டும். அது எவ்வளவுக்குச் சாத்தியம்?

அரசாங்கத்தின் பிரதான வரி மூலங்களுள் மதுவும் ஒன்று. ஆனால் அதன் மூலமான வருமானத்தை விட கூடுதலான தொகையை அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் செலவழிக்க வேண்டியுள்ளது. 2025 ஆண்டில் அரசு மதுவரியினால் பெற்ற தொகை 254 பில்லியன் ரூபா. ஆனால் அதனால் ஏற்பட்ட சுகாதார மற்றும் பொருளாதார இழப்புகளுக்கான கொடுப்பனவு 335 பில்லியன் ரூபா. அப்படியிருந்தும் மதுவை நாட்டில் தடை செய்ய அரசாங்கம் விரும்புவதில்லை.

திரைப்படத்தில் தொடக்கத்திலும் தொலைக்காட்சியின் ஓரத்திலும் மது உடலுக்குத் தீங்கானது என்றும் சிகரெட் பெட்டியில் புகைத்தல் உடலுக்குக் கேடு விளைவிக்கலாம் என்று கூறுவதன் மூலம் அரசாங்கங்களின் அது தொடர்பான கடமை முடிந்து விடுகிறது. பெரும்பாலான திரைப்படங்களில் மது அருந்தும் காட்சிகளை வலிந்து புகுத்துவதன் மூலம் அது வாழ்க்கையின் தவிர்க்கமுடியாத ஒரு அங்கமென்ற எண்ணம் இளையோர் மத்தியில் உருவாக்கப்படுகிறது. இராஜதந்திரிகளின் ஒன்றுகூடல்களில் எமது பெருந்தலைவர்கள் மதுக்குவளைகளுடன் நிற்பதைப்பார்க்கிறோம். உடல் ஆரோக்கியம் பற்றி உபதேசிக்கும் வைத்தியர்கள் மட்டுமன்றி முதலமைச்சர் கனவில் மிதப்பவர்களின் கைகளிலும் மதுக்குவளைகள் மிதக்கின்றன. மதுக்கடைக்கு எதிராகப் போராடிய சங்கானை மக்களும் உண்மை நிலை அறிந்து பிரதேச செயலருக்குப் பணம் திரட்டிக்கொடுப்பதற்கான அடுத்த வேலையில் இறங்கி விட்டார்கள்.

(8ம் பக்கம் பார்க்க)

# புலம்பெயர் தமிழர்களின் அரசியல் ஈடுபாடும் அது பற்றிய கற்பனைகளும்

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –





அண்மையில் நோர்வேயைச் சேர்ந்த ஈழத் தமிழரான ஹம்சி குணரட்ணம், என்னும் இளம் பெண், போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

வழமை போல் முகநூல் தமிழ்த் தேசியப் பிரியர்கள் அவரைக் கெண்டாடினர். இதே போன்று, ஹரி ஆனந்த சங்கரி கனடாவில் அரசியலில் பிரவேசித்த காலத்திலும் இவ்வாறான கொண்டாட்டங்கள் இருந்தது. பின்னர் பிறிதொரு ஈழத் தமிழ் பெண்ணும் கடனாவில் அரசியலில் பிரவேசித்தார். அவரை முன் வைத்தும் அரசியல் உரையாடல்கள் இடம்பெற்றன. அவர் வந்த வேகத்திலேயே காணாமல் போய் விட்டார். ஹரி ஆனந்தசங்கரி தற்போது கனடாவில் பொதுப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார். ஆனால் அவர் இப்போது தமிழர்கள் தொடர்பில் பேசுவதேயில்லை.

ஒரு வேளை ஆட்சி மாறிய பின்னர் அல்லது பதவி போன பின்னர், அவர் மீண்டும், இனப்படுகொலை போர்க் குற்றங்கள் என்னும் சொற்களுடன் வரக் கூடும். ஏன் அவர் அப்போது பேசுவதில்லை? அவர் அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர், அவருடைய தகுதி தொடர்பில் எதிர்க்கட்சி கேள்வி எழுப்பியிருந்தது.

அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது சட்டவிரோதமாக கனடாவிற்குள் விடுதலைப் புலிகளின் முன்னைநாள் உறுப்பினர்கள் உள் நுழைவதற்கு காரணமாக இருந்தார் – அவ்வாறான ஒருவர் எவ்வாறு பொதுப் பாதுகாப்பு அமைச்சராக இருக்க முடியும் என்று கேள்வி எழுப்பினர். அத்தோடு அவர் அனைத்தையும் கை விட்டார். அதனை எதிர்த்து அரசிலில் இது தான் எனது நிலைப்பாடு – எனக்கு பதவி முக்கியமில்லை என்று ஹரிஆனந்தசங்கரி வாதிடவில்லை. பதவியை புறம்தள்ளி தமிழர்களுக்காகவே நிற்பேன் என்று சூழுரைக்கவில்லைஇ

ஏனெனில் அவருடைய இலக்கு கனடாவில் ஒரு பதவி நிலையில் இருப்பது மட்டும் தான். இவ்வாறான பதவி நிலைகளில், சில தமிழர்கள் இருப்பதை வைத்துக் கொண்டு, அரசியலில் கற்பனை செய்யலாமா? இலங்கையின் உள்நாட்டு யுத்தம் மேற்குலக நாடுகளுக்குள் நுழைவதற்கான வாய்ப்பை தமிழர்களுக்கு வழங்கியது. ஆரம்பத்தில் நுழைந்தவர்களுக்கு உண்மையிலேயே ஒரு காரணம் இருந்ததுஇ பின்னர் புலப்பெயர்ப்பு என்பது படிப்படியாக ஒரு நல்ல வாழ்வை நாடிச் செல்வதற்கான தெரிவானது. தமிழ் மத்தியதர வர்க்கத்தின் கனவானது. ஆகக் குறைந்தது ஒரு பிள்ளையையாவது வெளிநாட்டுக்கு அனுப்பி விட வேண்டும் என்பதே ஈழத் தமிழர் கனவானது. ஒரு காலத்தில் தமிழ் மத்தியதர வர்க்கத்தின் கனவாக இருந்தது முக்கியமாக யாழ்ப்பாணத்து தமிழனின் கனவாக இருந்தது – ஒரு பிள்ளையையாவது, டாக்குத்தராக்கி விட (வைத்தியர்) வேண்டும் அல்லது இஞ்சினியராக்கி விட வேண்டும். இப்போது அந்த இடத்தில் ஒருத்தரையாவது கனடாவிற்கு அல்லது லண்டனுக்கு அனுப்பி விட வேண்டும் என்பதாக மாறி விட்டது.

மஹாகவி என்பவர், அவரது நாடகம் ஒன்றில் கோழி மேய்ச்சாலும் கொர்ணமேந்தில் மேய்க்க வேண்டும் என்று எழுதியிருப்பார் – இப்போது, கழுதை மேய்த்தாலும் பரவாயில்லை ஆனால் அதனை கனடாவிலோ, அல்லது லண்டனிலோ மேய்க்க வேண்டும் என்னும் நிலையில் தான், ஈழத் தமிழர் இருக்கின்றனர். மஹாகவியின் மகன் சேரனும் இப்போது கனடாவில் தான் வாழ்கின்றார்.

இந்த அடிப்படையில் சொந்த மண்ணில் வாழ வழியின்றி அல்லது முற்றிலும் அடித்து துரத்தப்பட்ட ஒரு மக்கள் கூட்டமாக ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்தார்கள் என்று வாதிட முடியாது. அரசபடைகளின் கெடுபிடிகளுக்கு அஞ்சி வெளிநாடு சென்ற ஒரு தலைமுறை இருந்தது உண்மை தான் ஆனால் அதற்காக வெளிநாடு சென்ற, லட்சக்கணக்கானவர்கள் அனைவரும், அவ்வாறான ஒடுக்கு முறையால் வெளிநாடு சென்றவர்கள் என்று வாதிட முடியாது – அப்படி வாதிட்டால் அது தவறானது. ஒடுக்குமுறை எங்களை வெளிநாடு நோக்கிச் செல்லத் தூண்டியது என்னும் வாதத்தை முன் வைத்தால், அவ்வாறாயின் இப்போதும் லட்சக் கணக்கான மக்கள் வடக்கு கிழக்கில் எவ்வாறு வாழ முடிகின்றது என்னும் கேள்விக்கு பதிலளிக்க முடியாது போகும். எனவே எப்போதும் தவறான வாதங்களை முன் வைத்து அரசியல் உரையாடல்களை மேற் கொள்ளக் கூடாது. இந்த இடத்தில் தான் யூதப் புலப்பெயர்வும், ஈழத் தமிழர்களின் புலப்பெயர்வும் அடிப்படையிலேயே வேறுபடுகின்றது.

யூதப் புலம்பெயர்வு என்பது அவர்கள் மீதான மிகவும் மோசமான அமித்தொழிப்பின் விளைவாக நிகழ்ந்தது. உலகின் பல பகுதிகளில் அவர்கள் அடித்துத் துரத்தப்பட்டனர், அழிக்கப்பட்டனர். அதுவே அவர்களை பலமானதொரு அரசியல் புலம்பெயர் சமூகமாக உருமாற்றியது.

பலம் என்பது பொருளாதார ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் இருப்பதாகும். அவ்வாறானதொரு நிலையை நோக்கி ஆரம்ப நிலையில் கூட ஈழத் தமிழ் புலம்பெயர் சமூகத்தால் இன்னும் அடியெடுத்து வைக்க முடியவில்லை. இந்த இடத்தில் தான் புலம்பெயர் ஈழத் தமிழர்களின் மேற்குலக அரசியல் பிரவேசம் நோக்கப்படுகின்றது. இவ்வாறு அரசியலில் பிரவேசிப்பதானது, ஈழத் தமிழர்களை சர்வதேச அரங்கில் உயர்த்துவதற்கு பயன்படுமா என்னும் கேள்வி எழுகின்றது.

கடந்த பதினேழு ஆண்டு கால அரசியலை உற்று நோக்கினால், அதற்கான பதிலை நான் கூற வேண்டியதில்லை நீங்களே அதனை இலகுவாக அறிந்து கொள்ள முடியும்.

அரசியல் ரீதியில், ஆகக் குறைந்தது ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட ஈழத் தமிழர்களால் அடைய முடியவில்லை. இலவு காத்த கிளியாகவே காலம் கழிகிறது. இந்தக் கட்டுரை அரசியல் பற்றியே பேசுகின்றது ஏனைய விடயங்களில் ஒருவர் தனிப்பட்ட ரீதியில் அடைந்திருக்கும் முன்னேற்றங்கள் பற்றிப் பேசவில்லை.

கடந்த ஆண்டு கனடாவிற்கு சென்றிருந்த போது சில நண்பர்களை சந்தித்து கலந்துரையாட முடிந்தது. அப்படிச் சந்தித்த நண்பர்களில் சிலர் மிகவும் நேர்மையாக அங்குள்ள நிலைமைகளை கூறினர். அரசியல் ரீதியில் தங்களால் பெரிதாக எதனையும் செய்ய முடியாது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

மேலும், பொருளாதார ரீதி யிலும் கூட மில்லியன் டொலர்களை வடக்கு கிழக்கில் கொட்டக் கூடிய நிலையில் அங்கு எவரும் இல்லை. ஒரு வேளை ஆளுமையுள்ள தலைமையொன்று தமிழர்கள் மத்தியில் இருந்தால், கூட்டாக சில பணிகளை செய்ய முயற்சிக்கலாம் . உதாரணமாக சில எண்ணிக்கையானவர்களை இணைத்து, பொருளாதரத் திட்டங்களை மேற்கொள்ள முடியும் ஆனால் அதற்கும் தற்போது வாய்பில்லை. கனடாவில் தான் ஒப்பீட்டளவில் அதிகளவான ஈழத் தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்கள் மத்தியிலிருந்தே ஆக்கபூர்வமான விடயங்களை முன்னெடுக்க முடியாமல் இருக்கின்ற போது, ஏனைய நாடுகளிலிருந்து பெரிதாக எதிர்பார்க்க முடியுமா?

கனடாவில் அரசியல் நாட்டமுள்ள ஒரு தலைமுறை வெளித் தெரிகிறது என்பது உண்மை தான். ஆனால் அவற்றால் ஒரு உலக தமிழ் லொபியாக எழுச்சி கொள்ள முடியாது.

ஏனெனில் யூத அனுபவத்தில் நாடுகளின் உள்ளூர் அரசியலில் நுழைவது விடயமல்ல மாறாக, அந்த நாட்டு அரசியல் உயர் குழாமின் முடிவுகள் மீது செல்வாக்குச் செலுத்தும் தரப்பாக மாற வேண்டும்.

யூதர்கள் வாழும் ஒவ்வொரு நாடுகளிலும் அந்த நாட்டு உயர் அடுக்கினர் மீது செல்வாக்குச் செலுத்துவதே, அவர்களின் வெற்றிக்கு காரணம். முக்கியமாக அவர்கள் உலகின் முதன்மையான சக்தியான அமெரிக்காவின் நட்புக்குரியவர்களாக தங்களை ஆக்கிக் கொண்டனர். அது தான் அவர்களுடைய இன்றைய வளர்சிக்கான அடிப்படை.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அந்த நிலையை ஒரு போதும் அடைய முடியாது ஏனெனில் ஈழத் தமிழர்கள் அமெரிக்காவின் நலன்களுக்கு தேவையான ஒரு மக்கள் கூட்டமல்ல. ஒரு வேளை அமெரிக்காவின் உள்நாட்டு அரசியலில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஒரு தரப்பாக ஈழத் தமிழர்கள் இருந்திருந்தால், நிலைமைகள் வேறுவிதமாகருந்திருக்கலாம்.

2003–2006 வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்த ஜெப்ரி லன்ஸ்டட் அமெரிக்காவில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஒரு மக்கள் கூட்டமாக ஈழத் தமிழர்கள் இல்லை என்பதை சுட்டிக்காட்டியிருந்தார்

ஏனென்றால், அதற்கான சனத்தொகை அமெரிக்காவில் இல்லை என்று அவர் குறிப்பிட்டிருந்தார் ஆனால் அப்படி இருந்தாலும் கூட, என்ன செய்வது என்பது தான் கேள்வி. ஒரு வேளை ஈழத் தமிழர் அடியைச் சேர்ந்த சிலர் அமெரிக்க சிலிக்கன் வலி அல்லது வோல்ஸ்ரீட் பணக்கார உலகின் பிரதிநிதிகளாக இருந்து, அவர்கள் அமெரிக்க அரசியல்வாதிகள் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடியவர்களாக இருந்தால், சில விடங்களை எதிர்ப் பார்ப்பதில் தவறில்லை. அடுத்தது, யூத புலம்பெயர் சமூகத்தை மற்றவாகளோடு ஒப்பிட முடியாது.(15ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம்!



'இலங்கையில் எந்தவொரு நேரத்திலும், எதுவும் நிகழலாம்' என்ற நிச்சயமற்ற ஒரு சூழலில் ஆரம்பமாகியிருக்கும் அநுரகுமாரவின் எஞ்சிய மூன்றாண்டு பதவிக் காலம்!

இலங்கை அரசியலும், சமூகமும் கொந்தளிப்புக்கள் சூழ்ந்த ஒரு கால கட்டத்துக்குள் பிரவேசித்திருக்கும் சூழலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பதவியேற்பின் இரண்டாவது ஆண்டு நிறைவு கடந்த வாரம் நினைவு கூரப்பட்டது.

ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் இலக்கு வைத்து இன்று இலங்கையில் பாரம்பரிய அரசியல் கட்சிகளினாலும், அதிலும் பார்க்க முக்கியமாக சிங்கள-பௌத்த தீவிரவாத தரப்புக்களாலும் கட்டமைக்கப்பட்டு வரும் எதிர்ப்பின் பின்னணியில் நோக்கும் பொழுது, அவருடைய எஞ்சியிருக்கும் மூன்று வருட பதவிக் காலம் பல வழிகளில் நிர்ணயகரமானதாகவும், எந்தவொரு நேரத்திலும் வன்முறை வெடிக்கக் கூடிய ஆபத்தைக் கொண்டதாகவும்.

குறிப்பாக, திட்டமிட்ட விதத்தில் சிறுபான்மை சமூகங்களுடன் வலிந்து மோதல்கள் உருவாக்கப்படக் கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்டதாகவும் இருந்து வர முடியும் என்பதை அனுமானிக்கலாம்.

1978 முதல் இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி பதவியை வகித்து வந்திருக்கும் மற்றைய எண்மருடன் ஒப்பிடும் பொழுது பல வழிகளில் அநுரகுமார ஒரு சில தனித்துவப் பண்புகளைக் கொண்டவராக இருந்து வருகின்றார். அவர் சார்ந்திருக்கும் கட்சி மற்றும் அவரது சமூகப் பின்புலம் என்பனவே அதற்கான காரணம்.

ஜனாதிபதி இப்படித் தான் இருக்க வேண்டும்' என்ற விதத்தில் ஒரு சித்திரம் பலருடைய உள்ளங்களில் பதிந்து போயிருக்கிறது. ஜனாதிபதியும், அதே போல அவருடைய அமைச்சரவையைச் சேர்ந்த அமைச்சர்கள் பலரும் பொதுப் புத்தி சார்ந்த அச்சித்திரத்தை குலைத்துப் போட்டுள்ளார்கள் என்பதே இங்குள்ள பிரச்சினை.

ஒரு விதத்தில் அதற்கான ஒரு எதிர் வினையாகவே 'தாழ்ந்த சாதிக்காரன் ராஜாவாக வந்தால் அந்த நாடு ஒரு போதும் உருப்பட முடியாது' (சமந்தபத்த தேரர்), 'இதுவரையில் மன்னர்களின் அனுசரணையுடன் இடம் பெற்று வந்த புனித தலதா வஸ்துக்களின் கண்காட்சி வரலாற்றில் முதல் தடவையாக இப்பொழுது அரசவை கோமாளியின் (அந்தரேயின்) அனுசரணையுடனும் இடம்பெறுகிறது' (கலகொட-அத்தே ஞானசார தேரர், பதவி மிகப் பெரியது, ஆனால், அநுரகுமார மிக மிகச் சிறிய ஆள்' (SJB எம்பி பிரசாத் சிரிவர்தன) போன்ற கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வந்துள்ளன.

ஜேவிபி காரர்கள் தொடர்பாக கிட்டதட்ட ஐம்பது ஆண்டுகளாக சிங்கள சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு மத்தியில் அதாவது, அதீத சாதி மேட்டிமை உணர்வைக் கொண்டிருப்பவர்களுக்கு மத்தியில் நிலவி வரும் பொதுவான அபிப்பிராயத்தையே மேற்படி கூற்றுக்கள் பிரதிபலிக்கின்றன. 'இழி குடிகளில் பிறந்து, சாப்பாட்டுக்கு வழியில்லாமல் திண்டாடியவர்கள். நன்றாக உண்டு உடுத்து வாழ்பவர்களை தீராத வன்மத்துடன் பார்ப்பது சகஜம்' என்கிறார்கள் இவர்கள்.

ஜனாதிபதியையும் உள்ளிட்ட விதத்தில் அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் இருப்பவர்களில் பலருக்கு சரளமாக ஆங்கிலத்தில் உரையாட முடியாதிருப்பதற்கு அவர்களுடைய இந்த சமூகப் பின்புலமே முக்கிய காரணம் என்பது இந்தத் தரப்புக்களின் கருத்து. ஒரு விதத்தில் அது ஒரு கூட்டு தாழ்வுச்சிக்கலின் வெளிப்பாடு என்று சொல்லலாம். வலதுசாரி பிற்போக்கு சக்திகள் அத்தாழ்வுச் சிக்கலை உச்ச மட்டத்தில் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்றன.

'அறகலய சுதந்திரத்திற்கு பிற்பட்ட இலங்கை அரசியலின் ஒரு யுகத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆனால் ஒரு புதிய யுகம் உதயமாகாமலேயே அது நிகழ்ந்திருக்கிறது என்பது தான் இங்குள்ள துரதிர்ஷ்டம்' என்று சொன்னார் விக்டர் ஐவன்.

2024 தொடக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக அநுரகுமார அரசாங்கம் அந்தப் புதிய யுகத்தின் தோற்றத்துக்கான விதைகளை தூவி வந்திருக்கிறது எனச் சொல்வதில் தவறில்லை. பல பின்னடைவுகளையும், தற்காலிக தோல்விகளையும் சந்தித்திருந்தாலும் கூட, ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை எதிர்கொள்வதற்கு இலங்கை மக்களை உளவியல் ரீதியில் தயார்ப்படுத்தும் விதத்திலேயே அதன் பெரும்பாலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

குறிப்பாக சிங்கள பௌத்த மக்களுக்கு மத்தியில் வேரூன்றிக்கும் ராஜபக்ச திருவுரு வழிபாட்டை (Rajapaksa Cult) தகர்த்தெறிவதே அரசாங்கத்தின் முழு முதல் குறிக்கோளாக இருந்து வருகிறது. அதனுடன் இணைந்த விதத்தில் போர் வீரர் வழிபாட்டையும் (Ranawiru Cult) பலவீனப்படுத்துவது அவர்களுடைய நோக்கம்.

2025 மே 18 போர் வீரர் நினைவஞ்சலி நிகழ்வில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி போரில் ஈடுபட்ட இராணுவத்தினரை குறிப்பிடுவதற்காக 'ரணவிரு' என்ற சொல்லை வேண்டுமென்றே தவிர்த்து, 'சிப்பாய்கள்' என்ற சொல்லை பயன்படுத்தியிருந்தார் என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

அச் சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கடுமையான எதிர்ப்பின் போது ' இது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. ஜேவிபி காரர்களின் DNA களிலிருந்து வரும் வன்மம் என்றும், அவர்கள் பெரும்பான்மை சிங்கள சமூகத்தை, சிங்கள பௌத்த ஸ்தாபனத்தை, சீருடையை (சிங்கள இராணுவத்தை) அந்த வன்மத்துடனேயே நோக்குகிறார்கள் என்றும் கூறப்பட்டது.

அதே வேளையில், இந்த அரசாங்கம் தமிழர்களையும், முஸ்லிம்களையும் மித மிஞ்சிய அளவில் அரவணைத்துச் செல்கிறது என்ற குற்றச்சாட்டும் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகின்றது. ராஜபக்சகள் தேச பக்தர்கள் அல்ல. வெறும் ஊழல் மோசடி பேர்வழிகள், பல கோடிக் கணக்கான மக்கள் சொத்துக்களை கொள்ளையடித்தவர்கள்' என்ற செய்தியை குறிப்பாக சிங்கள சமூகத்துக்கு அனுப்பி வைக்கும் விதத்திலேயே அரசாங்கத்தின் அனைத்து முயற்சிகளும் குவிமையப்படுத்தப் பட்டிருக்கின்றன.

'ராஜபக்சக்களை சிங்கள வாக்காளர்கள் நிரந்தரமாக நிராகரித்து, ஒதுக்கும் ஒரு நாள் வர வேண்டும்' என்பதே அரசாங்கத்தின் சார்பில் உத்திகளை வகுப்பவர்களின் அபிலாஷை. அப்படியான ஒரு நிலை தோன்றினால் மட்டுமே அரசியலிலிருந்து இனவாதத்தை அகற்றி, வாக்கு வேட்டைக்காக சிங்கள-பௌத்த கொடியை கையிலெடுக்கும் சந்தர்ப்பவாதிகளை முறியடிக்க முடியும் என்பதை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பரீட்சார்த்தம் வெற்றியீட்ட முடியுமா என்பதை தீர்மானிக்கும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே 2029 ஜனாதிபதி தேர்தல் அமையும்.

2024 தேர்தல்களில் ராஜபக்சக்களை பிரதிநிதித்துவம் செய்த அணி கடும் தோல்வியையும், பின்னடைவையும் சந்தித்த போதிலும், அது மீண்டும் தனது வாக்கு வங்கியை பலப்படுத்தி, ஒரு அலையாக எழுச்சியடைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று எவரும் அறுதியிட்டுக் கூற முடியாது. ஏனெனில் 2024 இல் JVP/NPP வேட்பாளரை நோக்கி வந்த பல இலட்சக் கணக்கான வாக்குகள் ராஜபக்ச அணியிலிருந்து வந்தவை என்பதனை மறந்து விட முடியாது. ஜனாதிபதியையும் உள்ளிட்ட அரசாங்க தரப்பினருக்கு அது தெரியும்.

சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம், நீதித் துறையின் சுயாதீனம் போன்ற சுலோகங்களை SJB யும், ஏனைய எதிர்க்கட்சிகளும் உரத்த குரலில் எழுப்பி வந்தாலும் கூட எதிர்கால தேர்தல்களில் வாக்காளர்களை அணி திரட்டுவதற்கு அந்த உப்புச் சப்பில்லாத சுலோகங்கள் துளியும் உதவப் போவதில்லை என்பதனை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். (ஒரு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலே ஒழிய) விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பொருளாதார காரணிகள் கூட எதிர்க்கட்சிகளுக்கு பயன்படப் போவதில்லை. ஏனெனில், எதிர்கட்சியிலிருக்கும் பொழுது அரசியல்வாதிகள் விலைவாசி உயர்வு குறித்து முதலைக் கண்ணீர் வடிப்பதை இப்பொழுது மக்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

இலங்கை அரசியலை 'அறகலயவுக்கு' முன்னர் (அ மு), அறகலயவுக்கு பின்னர் (அ பி) என ஒன்றுடன் ஒன்று திட்டவட்டமான விதத்திலான வேறுபாடுகளைக் கொண்ட இரு வேறு கால கட்டங்களாக பிரித்து நோக்குவதற்கூடாக மட்டுமே நாட்டில் இன்று நிலவி வரும் பெருமளவுக்கு குழப்பகரமான அரசியல் சூழ்நிலை குறித்த ஒரு தெளிவைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், எதிர்க்கட்சிகளும், சிறுபான்மை கட்சிகள் கூட்டணியும் அ மு அரசியலை, அரசியல் கலாசாரத்தை மட்டுமே கணக்கில் எடுத்து, வியூகங்களை வகுத்து வருவது தான் இங்குள்ள பிரச்சினை.

சரியாக சொல்லப் போனால் 'சிங்கள - பௌத்தர்கள் இன்று எதிர் கொண்டு வரும் கடுமையான அச்சுறுத்தல்கள்' என்ற தலைப்பே இலங்கையில் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் எதிராக கட்டமைக்கப்பட்டு வரும் எதிர்ப்பின் மையப் புள்ளியாக உள்ளது.

சிங்கள பௌத்தர்கள் அல்லாத அனைவரும் கள்ளத்தோணிகள் என்று வகைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அதாவது, இஸ்லாமியர்கள், இந்துக்கள் மற்றும் கத்தோலிக்கர்கள் ஆகியோர் இந்தப் பட்டியலில் வருகிறார்கள். பௌத்த மதத்தின் எதிரிகளாக சித்தரிக்கப்பட்டு வரும் ஜனாதிபதியும் மற்றும் அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளும் இப்பொழுது இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

சிங்கள பௌத்த மதத்தின், 2500 வருட கால சிங்கள நாகரிகத்தின், மகா சங்கத்தினரின் பரம எதிரிகள் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் டயஸ்போரா, இஸ்லாமிய(18ம் பக்கம் பார்க்)

# போராட்டம்:-
# ஒரு திரைப்படமும் அதன் அரசியலும்

போராட்டம் ஓர் அரசியல் திரைப் படம்.அதில் ஓர் அரசியல் இருக்கிறது. அந்தப் படத்துக்கு என்று ஓர் அரசியல் நோக்கம் இருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது, அது பெருமளவுக்கு வணிக சினிமாவின் பண்புகளை அதிகமாகக் கொண்டிருக்கும் ஒரு படம். அதேசமயம் பாத்திர உருவாக்கம், நடிகர் தெரிவு, நடிப்பு போன்றவை களில் அது பெருமளவுக்கு சீரியஸாக இருக்கிறது. இயல்பாக நடித்திருக் கிறார்கள். ஒரு கலைப் படத்துக்கு இருக்கக்கூடிய தகைமை ஒரு தொகுதி நடிகர்களின் நடிப்பில் இருந் தது.

மூன்றாவதாக அதன் இசையும் ஒளி அமைப்பும். அதாவது ஒலி ஒளி அமைப்பு போன்றன பெருமளவுக்கு வணிகப் பண்புமிக்கவை. ஒரு வணிக சினிமாவின் விறுவிறுப்பை நோக்கி ரசிகர்களை ஈர்த்திழுத்து உச்ச கட்டத்தை கிளை மாக்ஸ்ஸை நோக் கிக் கொண்டு போகும் நோக்கத்தைக் கொண்டவை.

நாலாவது, யாழ்நகரப் பகுதியில் உள்ள, மூன்று கத்தோலிக்கக் கரையோரக் கிராமங்களின் கால்பந்து விளை யாட்டுப் பண்பாட்டை வெளிக் கொண்டு வரும் ஒரு படம். கால்பந்து விளையாட்டுக்கூடாக அங்கே அரசியல் சொல்லப்படுகிறது. படத்தின் இறுதிக் கட்டம் வணிகப் பண்போடு இன முரண்பாட்டை வெளியே கொண்டு வருகிறது. எனினும் கால்பந்து விளை யாட்டை முன் வைத்து அரசியல் உரை யாடலும் சமூகச் சீரழிவின் மீதான உரையாடலும் குவிமையப்படு த்தப்படுகின்றன.

இன முரண்பாட்டின் அரசியலை அதன் சமூக விளைவைத் தான் படம் பேசுகிறது. ஒரு தியாகியின் பெயரை அது அந்த நோக்கத்தோடு தான் பயன்படுத்துகிறது. வெளிப்படையாகப் பேச முடியாத அரசியலை அது மறைமுகமாக.குறியீடாகப் பேசுகிறது.

அந்த அடிப்படையில் அது பேசும் அரசியல் சீரியஸ் ஆனது. இன முரண்பாட்டின் அரசியலும் அதன் விளைவுகளில் ஒன்று ஆகிய போதைப் பொருள் வலையமைப்பும் கதையின் மையக் கருக்களாக உள்ளன. போதை ப்பொருள் வலையமைப்பை படம் வெளியே கொண்டு வருகிறது. அதன் பின்னால் இருக்கும் அரசியலை ஓரளவுக்குக் கொண்டு வருகிறது. போதை வலையமைப்பின் உள்ளூர் முகவர் ஒருவரே வில்லன். போதைப் பொருள் பாவனை மீதான, போதைப் பொருள் வலையமைப்பின் மீதான விழிப்பை படம் ஏற்படுகிறது.

ஒளியும் ஒலியும் வணிக சினிமாவுக் குரிய விறுவிறுப்பைக் கட்டி எழுப்பு கின்றன. இறுதிக்கட்டம் அதாவது கிளைமாக்ஸ்ஸை நோக்கி ரசிகர் களைக் கட்டியெழுப்புகின்றன. எனி னும் இடைவேளைக்கு முன்பு விறு விறுப்பு காணாது என்ற விமர்சனமும் உண்டு. வணிக சினிமாவுக்கு வாலாயப்பட்ட ரசிகர்கள் அவ்வாறு கூறுகிறார்கள்.

நடிப்பும் நடிகர் தெரிவும் படத்தின் பிரதான கலை அடைவு எனலாம். பெருமளவுக்கு அலட்டிக் கொள்ளாமல் இயல்பாக நடிக்கும் பாத்திரங்கள். வில்லனாக நடிப்பவர் வளமையான வணிக சினிமாவின் வில்லன் தனங் களை வெளிப்படுத்துகிறார். ஆனால் ஏனைய பெரும்பாலான நடிகர்கள், நடிகைகள் இயல்பாக அசைகிறார்கள் இயல்பாக மனதில் பதிகிறார்கள் நம்பிக்கையூட்டும் நடிகர்கள். நம்பிக்கையூட்டும் நடிப்பு.

கதாநாயகன் ஈழத்தமிழ் வேரில் பிறந்த ஆனால் புலம்பெயர்ந்த தமிழ்ச் சூழலுக்குள் வளர்ந்தவர். தமிழ்ச் சினிமாவின் வணிகப் பண்புகள் அவரிடம் குறைவாக இருப்பதற்கு அதுவும் ஒரு காரணமாக இருக்க லாம்.




பாடல்கள் பெருமளவுக்கு வணிக சினிமாப் பண்புமிக்கவை. ஆடல்களும் அப்படித் தான். இந்த விடயத்தில் கோடம்பாக்கத்து வணிக சினிமாத் தொழில்துறையோடு ஒப்பிட்டு பாரா ட்டுக்களும் விமர்சனங்களும் முன் வைக்கப்படுகின்றன. இக்கட்டுரை அந்த ஒப்பீட்டை ஏற்றுக் கொள்ள வில்லை. ஈழத் தமிழ் சினிமாவை வேறு சினிமா தொழில்துறைகளோடு ஒப்பிட வேண்டிய தேவை இல்லை.

முதலாவதாக அது ஒரு கலை படைப்பாக வெற்றி பெற்றதா என்று பார்க்க வேண்டும்.அது ஒரு கலைப் படமா? அல்லது வணிக மசாலாப் படமா? என்று பார்க்க வேண்டும். இரண்டாவதாக அது ரசிகர்களை எந்த அளவுக்குக் கவர்ந்து இழுக் கிறது என்று பார்க்க வேண்டும். மூன்றாவதாக அது ஈழத்தமிழ் தனித் துவங்களை எந்த அளவுக்கு வெளியே கொண்டு வருகிறது என்று பார்க்க வேண்டும். இங்கே ஒப்பீடு முக்கியம் இல்லை.

இக்கட்டுரையில் தொடக்கத்தில் கூறப் பட்டது போல படம் ஓர் அரசியலைப் பேசுகிறது. அதேசமயம் படத்துக்கு என்று, அதைத் தயாரித்தவருக்கு என்று அரசியல் உள்நோக்கங்கள் உண்டு என்பதையும் அது வெளியே கொண்டு வருகிறது. ஈழத் தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் துருத்திக் கொண்டு தெரியும் ஆளுமைகளில் ஒரு தொகுதி படத்தில் ஒன்றிணை க்கப்படுகின்றன. அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்கள், கலைச் செயற்


**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**

பாட்டாளர்கள்,அதிகாரிகள், அறிவியல் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், ஊடகவிய லாளர்கள்,யூடியூப்பர்கள்… என்றிவ் வாறாக சமூகத்தில் ஏற்கனவே துருத் திக் கொண்டு தெரிகின்ற, முன்னணி யில் நிற்கின்ற, அல்லது மேலெழுந்து வருகின்ற பல்வேறு வகைப்பட்டவர் களையும் தயாரிப்பாளர் அந்த படத்து க்குள் ஒன்றிணைத்து இருக்கிறார்.

அது ஒரு கலைப் படைப்பு என்ற அடிப்படையில்,கலைத்துறை சார்ந்த மூத்த விமர்சகர்களை சீரியஸான படங் களை தமிழ்ச் சமூகத்தில் அறிமுகப் படுத்துபவர்களை அவ்வாறு படத்து க்குள் இணைக்க முடியவில்லை என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். எனினும் ஈழத் தமிழர்கள் மத்தியிலுள்ள குறிப்பாக வெகுசன பரப்பில் உள்ள கணிசமான தரப்பு களை தயாரிப்பாளர் கால்பந்து மைதா னத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒன்றிணைக்கிறார்.

2009க்கு பின்னரான கடந்த 17 ஆண்டு கால தமிழ்த் தேசிய அரசிய லில் அவ்வாறு ஆகக்கூடிய மட்டும் வெவ்வேறு அடுக்குகளைச் செய்தவர் களை ஒன்றிணைக்கும் முயற்சிகள் மிகவும் அரிதாகவே இடம்பெறு கின்றன. அவ்வாறான ஒரு முயற்சியாக இந்தப் படத்தைக் கூறலாம். ஒரு கலப்படைப்பு என்பதற்கும்பால் அரசி யல், கலை,பண்பாடு என்ற தளத்தில் அவ்வாறான ஒரு மையத்தை நோக்கி ஒன்றிணைக்கும் முயற்சி ஆர்வ மூட்டக்கூடியது. ஆழமாக அணுகப் பட வேண்டியது.

## புலம்பெயர் தமிழர்களின் அரசியல் ஈடுபாடும் அது பற்றிய கற்பனைகளும்

ஏனெனில் அவர்கள் உலக அரசியலை தீர்மானிக்கும் சக்தியாகி விட்டனர். இஸ்ரேல் உலக அரசியலை தீர்மானிக் கும் ஒரு சக்தி. மிகச் சிறிய நாடாக இருக்கும் இஸ்ரேல் அதன் ஆற்றலாலும் சாணக்கியத்தாலும் ஒரு அனுவாயுத நாடாகவும், மத்திய கிழக்கின் அரசியல் சமநிலையை தீர்மானிக்கும் நாடாகவும் இருக்கின்றது.

எனவே அதனோடு ஈழத் தமிழரை ஒப்பிடுவதே முதலில் அடி முட்டாள்தனம். இத்தனை விமர்சனங்கள், எதிர்ப்புக்கள் மத்தியிலும் இஸ்ரேல் சிறிதளவு கூட அதன் அடிப்படை யான நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவரவில்லை. ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பேசியிருக்கும் இஸ்ரேலிய பிரதமர் நெத்தன்யாகு, சண்டை என்றால் இஸ் ரேல் வெற்றி பெறும் ஏனெனில் வெற்றி பெறுவதைத் தவிர வேறு எந்தவொரு தெரிவும் எங்களுக்கு இல்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார். இத்தனைக்கு பிறகும் இவ்வாறு அவர்களால் எப்படிக் கூற முடிகின்றது ஏனெனில் அது தான் உண்மை.

தோல்வி அனைத்துக்கும் முற்றுப்புள்ளியிட்டு விடும். அப்படியொரு நிலையில் தான் இறுதி யுத்தத்தை விடுதலைப்புலிகள் எதிர்கொண்டனர். யுத்தத்திற்கு செல்லும் நிலைமை இருந்திருக்கவில்லை ஆனாலும் புலிகளின் தலைமை யுத்தத் தையே தெரிவு செய்தது ஆனால் வெல்லு வதைத் தவிர வேறு தெரிவுகள் அற்றிருந்த நிலையில், அந்த யுத்தத்தில் தோல்வியுற்றது. அதன் பின்னர் எல்லாம் முடிந்து போனது. அதன் பின்னர் புலம்பெயர் சமூகம் தமிழர்களின் பலம் என்னும் மாயமானுக்கு பின்னால் சில வருடங்கள் ஓடியது. இறுதியில் மாகாண சபைத்தேர்தல் கூட நடக்குமா என்னும் கேள்விக்கு பதிலில்லாமல், காலம் நகர்கிறது. அரசாங்கத் திற்கு எந்தவொரு அழுத்தமும் இல்லாமையால் தானே, மாகாண சபைத்தேர்தலைக் கூட நடத்த வேண்டுமென்று, அவர்கள் எண்ணவில்லை.

இப்போதும் சிலர் விளக்கமில்லா மல் புலம்பெயர் சமூகம் ஒரு பலம் என்று கூறுவதைக் காண முடிகின்றது. பலம் என்றால் என்ன அடிப்படையில் அந்தப் பலம் சிறிலங்காவின் ஆட்சியாளரை இறங்கிவரச் செய்வதில் எவ்வாறான வெற்றியை இதுவரையில் நிரூபித் திருக்கின்றது? இதற்கு என்ன பதில்?

உண்மையிலேயே ஒன்றை பலம் என்று உணர்பவன், அதனை கூறிக் கொண்டிருக்க மாட்டான் – பதிலுக்கு அதனை செயலில் காண்பிப்பான். பலம் என்பது மற்றவர் களுக்கு கூறுவது அல்ல – அது மற்றவர்களால் உணர வது. பதினேழு ஆண்டுகளில் அப்படியான ஒன்றை செயலில் எவரும் நிரூபிக்கவில்லையே – ஏன்? புலம்பெயர் சமூகத்திலுள்ள அமைப்புக்கள், தனிநபர்கள் முதலில் தங்களை திரும்பிப் பார்க்க வேண்டும்.

கடந்த பதினேழு ஆண்டுகால செயற்பாடுகள் ஏன் எந்த வொரு மாற்றத்திற்கும் வழி வகுக்கவில்லை என்பதை சுயவிமர்சனத்தோடு ஆராய வேண்டும். தங்களின் ஆற்றலை யும் ஆற்றலின்மையையும் மதிப்பிட வேண்டும்.

அதன் பின்னர் தான், ஈழத் தமிழர்களுக்காக தங்களால் என்ன செய்ய முடியும் என்பது பற்றி அவர்கள் சிந்திக்க முடியும்.

# நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்திற்குள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது அமெரிக்கா தடை!

நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளேயே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) முன்னாள் நீதிபதியும், புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலருமான தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த நவி பிள்ளைக்கு இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

சர்வதேச சட்டங்களை நிலை நிறுத்தவும், மனித உரிமைகளுக்காகவும் அவர் ஆற்றிய தொடர்ச்சியான உழைப்புக்குக் கிடைத்த பெருமைமிக்க அங்கீகாரமாக இது பார்க்கப்படுகிறது. சர்வதேச நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறைகள் மீது பல்வேறு அரசியல் அழுத்தங்கள் அதிகரித்து வரும் சூழலில் இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளேயே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அமெரிக்க மற்றும் இஸ்ரேல் நாட்டு அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றவியல் நீதிமன்றம் மேற் கொள்ளும் விசாரணைகளைக் கண்டிக்கும் விதமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பாதுகாப்புப் பணியாளர்களைப் பாதுகாப்பதற்காக இந்தத் தடைகள் அவசியம் என அமெரிக்கத் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த அதிரடித் தடை சர்வதேச சட்ட அமைப்புகளின் மீதான நேரடித் தாக்குதல் என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தை ஆதரிக்குமாறு அதன் 125 உறுப்பு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த ஏகபோக நடவடிக்கையானது, ஐரோப்பிய நட்பு நாடுகளுடன் கடுமையான ராஜதந்திர உராய்வுகளையும் மோதல்களையும் உருவாக்கும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை நீதிமன்றத்தின் நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் அதற்கு ஆதரவளிக்கும் சில அமைப்புகள் மீது தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. தற்போது நீதிமன்றத்தையே நேரடியாகக் குறி வைத்து அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவுக்கும் அதன் குடிமக்களுக்கும் எதிராகச் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டி, நீதிமன்றத்துடனான சில நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் சேவைகளைத் தடை செய்வதாக ரூபியோ தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறல்கள் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடத்தும் விசாரணைகளையும், காசா தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் ஆகியோருக்கு எதிராகப் பிறப்பிக்க



ப்பட்டுள்ள கைது உத்தரவுகளையும் அமெரிக்கா தனது நடவடிக்கைக்கான காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், உலகின் மிகக் கடுமையான குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி வழக்குத் தொடரும் அமைப்பாகும். இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பது அதன் முக்கிய பணியாகும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இந்த நீதிமன்றத்தை உருவாக்கிய ரோம் சட்டத்தில் உறுப்பினர்களாக இல்லை. இருப்பினும், நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பகுதிகளில் இடம் பெறும் சில குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் பிரஜைகளுக்கு எதிராகவும் விசாரணை நடத்த முடியும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் புதிய தடைகளைக் கண்டித்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், தனது பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதாக அறிவித்துள்ளது. நீதிமன்றத்தின் சுதந்திரமான செயல்பாடுகளைப் பாதுகாக்குமாறு உறுப்பு நாடுகளிடமும் அது கோரிக்கை விடுத்துள்ளது. இந்தத் தடைகள் சர்வதேசச் சட்டத்தையும் சுதந்திரமான நீதித்துறையையும் பாதிக்கக்கூடும் என மனித உரிமை அமைப்புகளும் சட்ட நிபுணர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் அமெரிக்கக் குடிமக்கள் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்வதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அவர்களின் அரசியலமைப்பு உரிமைகளைப் பாதிப்பதாகக் கூறி, சில உரிமை அமைப்புகள் அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்துள்ளன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு உறுப்பு நாடுகளின் ஆதரவு முக்கியமானதாக இருக்கும் என சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நவநீதம் பிள்ளைக்கு நோபல் பரிசு: அடுத்த சில மணி நேரங்களில் அமெரிக்கா பிறப்பித்த அதிரடித் தடையைப் பிறப்பித்துள்து குறிப்பிடத்தக்கது.

## நபி பிள்ளைக்கு நெதன்யாகு கண்டனம்!

026 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு நவநீதம் பிள்ளை தேர்வு செய்யப்பட்டதற்கு, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்



தின் நீதிபதியாகப் பணியாற்றிய தென்னாப்பிரிக்காவின் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த நவீ பிள்ளை எனப்படும் நவநீதம் பிள்ளைக்கு 2026 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காஸாவில் பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேல் இனப்படுகொலையை நிகழ்த்தியதாகத் தீர்மானித்த



ஐ.நா. குழுவுக்கு நவநீதம் பிள்ளை தலைவராகப் பொறுப்பு வகித்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், அமைதிக்கான நோபல் பரிசுக்கு நவநீதம் பிள்ளை தேர்வு செய்யப்பட்டதற்கு இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார். இது பற்றி, அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், ''தார்மிக நெறிமுறைகளை நோபல் பரிசு குழு இழந்து விட்டது.

ஒரேயொரு யூத அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளைக் கண்டு பிடித்து பரப்புவதிலேயே தனது வாழ்க்கையைக் கட்டமைத்த ஒரு மதவெறியருக்கு அது (நோபல் பரிசு குழு) அதன் உயரியவிருதை வழங்குகிறது. பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பித்து விடலாம் எனும் நம்பிக்கையில் இஸ்ரேலுக்கு எதிரான நவி பிள்ளையின் பொய்களைப் (22ம் பக்கம் பார்க்க)



# இரு தலைக் கொள்ளி நிலையில் இலங்கை!



ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே நீடித்து வரும் பிணக்கு, இலங்கையை இருதலைக் கொள்ளி நிலைக்குத் தள்ளியிருக்கிறது. இது நாடுகளுக்கும் இடையே போர் தொடங்கிய சில நாட்களிலேயே, காலி கடற்பரப்புக்கு மிக நெருக்கமாக, ஈரானிய போர்க்கப்பல் ஒன்றை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கடித்தது.

அந்த சம்பவம், சாதாரணமான தனித்த ஒரு சம்பவமாக எடுத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. சர்வதேச மோதல்கள் இலங்கையை நெருங்கி விட்டதன் அபாயத்தை சுட்டிக் காட்டுவதாக இருந்தது.

மூழ்கடிக்கப்பட்ட ஈரானிய கப்பலில் இருந்த மாலுமிகளில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களையும், உயிர் தப்பியவர்களையும், இலங்கை கடற்படை மனிதாபிமான அடிப்படையில் மீட்டு ஈரானிடம் ஒப்படைத்தது.

இன்னொரு கப்பலை பொறுப்பேற்று தற்போது திருகோணமலை துறைமுகத்தில் நிறுத்தி வைத்திருக்கிறது. அதிலிருந்த மாலுமிகள் ஈரானுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சூழலில் கடந்த பல வாரங்களாக இலங்கை கடற்பரப்புக்கு வெளியே– இலங்கையின் பொருளாதார கடல் எல்லைக்குள்ளாக அதிகளவிலான ஈரானிய எண்ணெய் தாங்கி கப்பல்கள் தரித்து நிற்பது பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

கொழும்பு துறைமுகத்திற்கும் காலிக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் தரித்து நிற்கும், ஈரானிய எண்ணெய் தாங்கிக் கப்பல்களின் எண்ணிக்கை தொடர்பாக, மாறுபட்ட தகவல்கள் உள்ளன.

வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் அண்மையில் வெளியிட்ட தகவல்களின்படி, 47 கப்பல்கள் வரை இலங்கை கடற்பரப்புக்கு அண்மையில் தரித்து நிற்பதாகவும், அவற்றில் 19 கப்பல்கள் ஈரானுக்கு சொந்தமானவை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக ஈரான் எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்தது. அந்த தடையை தாண்டி, ஈரான் தனது எண்ணெய் கப்பல்களில் எரிபொருளை எடுத்துச்சென்றுசர்வதேச கடற்பரப்பில் வைத்து சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் கப்பல்களுக்கு விற்பனை செய்து வந்தது.

அவ்வாறு விற்பனைக்கு பயன்படுத்தப்பட்ட நிழல் கப்பல் படையைச் சேர்ந்த கப்பல்கள் தான், இந்திய பெருங்கடலில் தரித்திருக்கின்றன. மலேசியாவுக்கு அருகிலேயும் இலங்கைக்கு அண்மையிலேயும் இவை பெருமளவில் காணப்படுகின்றன

ஹோர்முஸ் நீரிணை வழியாக, ஈரான் எண்ணெய் ஏற்றுமதி செய்வதை அமெரிக்கா தடுத்து வைத்துள்ளது.

அமெரிக்க போர்க்கப்பல்களின் வேலியைக் கடந்து செல்ல முடியாத நிலை இருப்பதால், ஈரானியக் கப்பல்கள் ஹோர்முஸ் நீரிணையை கடந்து செல்ல முடியவில்லை.

அதனால் இந்த கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் குறிப்பாக இலங்கைக்கு அண்மையிலும், மலேசியாவுக்கு அருகிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆழ்கடலில் நிறுத்தப்படுவதை விட, ஒரு நாட்டின் கரைக்கு அண்மையில் நிறுத்தப்படுவது பாதுகாப்பானது.

அது உடனடி உதவியை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்களை உருவாக்கும்.மாதக்கணக்காக இந்த கப்பல்கள் தரித்து நிற்கின்ற நிலையில் இவற்றுக்கான விநியோகம் எப்படி கிடைக்கிறது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இந்த கப்பல்களுக்கு இலங்கையில் இருந்து விநியோகங்களை மேற் கொள்வதற்கு இரண்டு வழிகள் உள்ளன.

ஒன்று, அரசாங்கம் மனிதாபிமான அடிப்படையில் கடற்படை மூலம் வழங்குவது.பெரும் எண்ணிக்கையான கப்பல்களுக்கு அரசாங்கம் இவ்வாறான உதவிகளை வழங்குவது கடினமானது. இன்னொரு வழி, கப்பல் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களை பயன்படுத்தி இந்த கப்பல்களுக்கான விநியோகங்களை மேற்கொள்ள முடியும். அதற்கான வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறான வாய்ப்புகள் இல்லாமல், ஈரானிய கப்பல்களால் மாதக்கணக்கில் குடிநீர் மற்றும் உணவுப் பொருட்கள், மரக்கறிகள் போன்றவை இல்லாமல் கடலில் தரித்து நிற்க முடியாது .

ஈரானிய கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்கு அண்மையில் நிறுத்தப்பட்ட போதே, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் குழப்பத்தை உருவாக்கும் என்ற அச்சம் வெளியிடப்பட்டது. ஏனென்றால் இலங்கையானது அமெரிக்காவுடனும் ஈரானுடனும் பாரம்பரியமான உறவுகளை வைத்திருக்கின்ற நாடு.

ஈரானுடன் நீண்டகால எண்ணெய் மற்றும் தேயிலை வர்த்தக தொடர்புகள் இருக்கின்றன. இலங்கைக்கு சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை கட்டிக் கொடுத்ததும், உமா ஓயா நீர்மின் திட்டத்தை, அமைத்துக் கொடுத்ததும் ஈரான் தான்.

அதேவேளை, இன்று இலங்கையின் பிரதான ஏற்றுமதி நாடுகளில் ஒன்றாக அமெரிக்கா விளங்குகிறது.

இதனால் மாத்திரமன்றி, சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங்கை கடன்களை பெறுவதற்கும், பல்வேறு திட்டங்களை முன்னெடுப்பதற்கும், அமெரிக்காவே உதவியது என்பதால், அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய நிலை உள்ளது. பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் பல்வேறு துறைகளில் இலங்கையின் தற்போதைய அரசாங்கம் அமெரிக்காவுடனான, உறவுகளை வலுப்படுத்தி வருகிறது.

பாரம்பரியமாக அமெரிக்க முதலாளித்துவத்தை எதிர்த்து வந்த ஜே.வி.பி., ஆட்சி அமைத்த பின்னர் அமெரிக்காவுடன் நெருங்கி செயற்படுகிறது என்றால் அதற்கு கொள்கை ரீதியான காரணம் அல்ல.இது ஒரு தந்திரோபாய உறவு.இலங்கையை மீண்டும் பொருளாதார ரீதியாக பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டுமானால், அமெரிக்காவுடன் இந்த உறவு தவிர்க்க முடியாதது.

அந்த அடிப்படையில் தான், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமெரிக்காவுடன் நெருக்கத்தை பேணி வருகிறது.இவ்வாறாக இலங்கையுடன் நெருக்கத்தை பேணிவரும் இரண்டு நாடுகள் தமக்கு இடையே மோதிக் கொள்ளத் தொடங்கிய போது, அதன் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டது. இவ்விரு நாடுகளும் ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்ட போது, இந்த நாடுகளுடன் உறவுகளைப் பேணி வந்த நாடுகள் குழப்பத்திற்கு உள்ளாகின.

ஈரானிடமிருந்து எண்ணெயை இறக்குமதி செய்ய முடியாத நிலையும், அந்த நாட்டுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியாத நிலையும் இலங்கைக்கு ஏற்பட்டது.

ஈரானுடன் வர்த்தக தொடர்புகளைப் பேணிக் கொள்வது, அமெரிக்காவின் தடைகளை மீறும் செயல் என்பதால் அந்த நிலை ஏற்பட்டது.அமெரிக்காவைப் போல, ஈரான் அச்சுறுத்தக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

அதனால் அமெரிக்க உறவுகள், வர்த்தகத்தை தடையின்றி மேற்கொள்ள முடிகிறது. அண்மையில் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியுயோர்க் சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத், ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சியை சந்தித்து பேசினார்.

இந்தச் சந்திப்பும் அமெரிக்காவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியதாக கருதப்படுகிறது. இத்தகைய சூழலில் தான், இரண்டாம் நிலை தடைகள் தொடர்பாகவும், அதனால் இலங்கை எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தல் தொடர்பாகவும் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின.

இந்த இரண்டாவது நிலைத் தடைகள் கடந்த ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் கடந்த செப்டெம்பர் மாதம் அமெரிக்கா இரண்டு கூட்டுப் பயிற்சி அல்லது கருத்தரங்குகளை இலங்கையில் நடத்தியிருக்கிறது.

முதலாவது, அமெரிக்க பாதுகாப்பு நலன்களுக்கும் சட்டபூர்வமான உலகளாவிய வர்த்தகத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடிய, கடல்சார் தடைகளை கண்டறிந்து, அவற்றுக்கு பதிலளிக்கும் திறனை வலுப்படுத்துவதற்கான 3 நாள் பயிற்சித் திட்டமாகும். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் Cooperative Threat Reduction அலுவலகம், Atlantic Council உடன் இணைந்து கொழும்பில் அமெரிக்க தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி, செப்டெம்பர் 9 முதல் 11ஆம் திகதி வரை இடம்பெற்றது.

இந்தியப் பெருங்கடலில் முக்கியமான கப்பல் சரக்கு பரிமாற்ற மையமாக இலங்கை விளங்குவதால், சட்டவிரோத கடல்சார் நடவடிக்கைகளிலிருந்து துறைமுகங்கள் மற்றும் கடற்பரப்புகளை பாதுகாப்பது சட்டபூர்வமான வர்த்தகத்தை உறுதி செய்வதில் முக்கியத்துவம் வாய்ந்தது என அமெரிக்கத் தூதரகம் கூறியிருந்தது. அணுசக்தி ஒழுங்கு முறை சபை, மத்திய வங்கி, கடலோரக் காவல் படை, வணிகக் கப்பல் செயலகம், துறைமுக அதிகாரசபை, பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படை உள்ளிட்ட நிறுவனங்களைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



சட்டவிரோத வலையமைப்புகளை எதிர்கொள்வதற்கும், சட்டபூர்வமான வர்த்தகத்தை பாதுகாப்பதற்கும், முக்கியமான கடற்பரப்புகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் அமெரிக்காவின் நிபுணத்துவத்தை இலங்கைப் பங்காளிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கே இந்த பயிற்சி என அமெரிக்க தூதுவர் எரிக் மேயர் கூறியிருந்தார்.

தடைகளுக்கு உட்பட்ட கப்பல்களுக்கு தெரிந்தோதெரியாமலோ சேவைகளை வழங்கக்கூடிய கப்பல் முகவர்கள், எரிபொருள் வழங்குநர்கள் மற்றும் ஏனைய சேவை வழங்குநர்கள் எதிர்கொள்ளக்கூடிய அபாயங்கள் குறித்தும் இதன்போது இலங்கை அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இரண்டாவதாக, இலங்கை கடற்பரப்பிற்குள் கதிரியக்க மற்றும் அணுசக்தி அவசரநிலைகளுக்குப் பதிலளிப்பதற்கான, நிலையான செயற்பாட்டு நடைமுறைகளை உருவாக்கும், ஐந்து நாள் பயிற்சி முகாம் கொழும்பில் நடத்தப்பட்டது.

கடந்த செப்டெம்பர் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இடம்பெற்ற இந்த நிகழ்வு, அமெரிக்க எரிசக்தித்துறையின் அணுக்கடத்தல் கண்டறிதல் மற்றும் தடுப்பு அலுவலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

கடற்படையின் இரசாயன, உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி பிரிவு, சிறப்புப் படகுப் படைப்பிரிவு மற்றும் கடலோரக் காவல்படை, அணுசக்தி ஒழுங்குமுறை சபை, அணுசக்தி சபை, துறைமுக அதிகார சபை, சுங்கம், பேரிடர் முகாமைத்துவ மையம், வர்த்தக கப்பல் செயலகம், மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றை உள்ளடக்கிய முக்கிய தேசிய நிறுவனங்களின் அதிகாரிகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர் .இந்த இரண்டு பயிற்சிகளின் அடிப்படை நோக்கம், இலங்கை அரசாங்கம் மற்றும் படைகள் அமெரிக்காவின் தடைகளை எவ்வாறு அனுசரித்து நடப்பது, நடைமுறைப்படுத்துவது என்பதை மையப்படுத்தியது. அமெரிக்க (18ம் பக்கம் பார்க்க)

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! பலரா லும் செய்ய முடியாத காரியங் களை வெற்றிகரமாக முடிப்பீர் கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனை களை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செய லாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.




ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரி யங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்க ளுக்கு பல விதத்திலும் உதவிகள் செய் வார்.




மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப் பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடு மாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங் களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர் களிடம் அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங் கள் சென்று வரவேண்டி இருக் கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டு களுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடா மல் அனுசரித்து செல்வது நல்லது. மரு த்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.




சிம்மராசி அன்பர்களே! நண்பர் களுடன் சேர்ந்து செய்யும் காரி யம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங் கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய் வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! எதிர் காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர் கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார் கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண் டாகும். அடுத்தவர்களின் குற்ற ச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இரு க்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்திய மாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.




விருச்சிகராசி அன்பர்களே! நீங் கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப் பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புது மையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப் பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.






தனுசுராசி அன்பர்களே! கடின மான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மன தில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக் கிடையே இருந்த மனவருத்தம் குறை யும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.




மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடை வதுடன் லாபகரமாகவும் இருக் கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவு க்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர் கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலு வையில் உள்ள பணம் கைக்கு கிடைக் கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதை யும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆக லாம். புதிய நண் பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயண ங்கள் சாதகமான பலனை தரும். உத்யோ கஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.




மீனராசி அன்பர்களே! ஆக்க பூர்வமான யோசனைகள் தோன் றும். கடித போக்குவரத்து அனு கூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதக மான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கை யாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத் துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்ப வர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்ப வர்களி டம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# இலங்கையில் எந்நேரத்திலும் எதுவும் நடக்க...

(14ம் பக்கத் தொடர்ச்சி) தீவிரவாதம், NGO கள், கார்டினல் மல்கம் ரஞ்ஜித் அவர்களையும் உள்ளிட்ட திருச்சபை (Church) என இந்த பட்டியலில் பல தரப்புக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தடவை இதிலுள்ள விசேஷம் அநுரகுமார திசாநாயக்கவை உள்ளடக்கிய மாளிமா கோஷ்டியினர் சிங்கள பௌத்தர்களின் முதன்மை எதிரிகளாக சேர்க்கப்பட்டிருப்பதாகும்.

அதே வேளையில், நாமல் ராஜபக்ச, திலித் ஜயவீர, சம்பிக்க ரணவக்க, தயாசிறி ஜயசேகர, விமல் வீரவன்ச, கம்மன்பில போன்ற முன்னணி சிங்களத் தலை வர்கள் அனைவரும் மேற்படி எதிரிகளின் பட்டியலை ஆமோதிப்பவர் களாகவே இருந்து வருகிறார்கள்.

அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கென மக்களை உடனடியாக அணி திரட்டி, பரவலான விதத்திலான ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தக் கூடிய வாய் ப்புக்கள் இப்பொழுது மிகக் குறைவு. வீதியில் இறங்கிப் போராடும் அளவு க்கு மக்களுக்கு அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தி நிலவி வருவதாகவும் தெரியவில்லை. எனவே, சாதாரண மக்களின் உணர்வுகளை எளிதில் தூண் டக் கூடிய இனம் மற்றும் மதம் சார்ந்த சர்ச்சைகளை கிளப்பி, அரசாங்கத் துக்கு நெருக்கடியை ஏற்படுத்துவதே எதிர் தரப்பின் கையில் இப்பொழுது இருந்து வரும் ஒரேயொரு துருப்புச் சீட்டு.

இவ்விதம் இனங்களுக்கிடையில் பதற்ற நிலைமைகளை உருவாக்க முயலும் சக்திகளை குறிப்பாக தீவிரவாத நிலைப்பாட்டில் இருந்து வரும் பிக்குகளை அரசாங்கம் எவ்வாறு கையாளப் போகிறது என்பதை பொறுத்தி ருந்து தான் பார்க்க வேண்டும்.

இத்தாகந்தே சத்தாதிஸ்ஸ, அக்மீமன தயரத்ன, பலங்கொட கசப்ப போன்ற கடும் போக்கு பிக்குகள் மற்றும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்ற அரசியல்வாதிகளை உள்ளிட்ட சிங்கள-பௌத்த தீவிரவாத சக்திகள் ஜனாதி பதிக்கு கடுமையான எச்சரிக்கைகளை விடுத்து வருவதுடன், மிரட்டல் தொனியிலான கோரிக்கைகளையும் அவரிடம் முன்வைத்து வருகிறார்கள்.

இலங்கை அனைத்து இனத்தவர்களையும், அனைத்து மதத்தவர்களையும் அரவணைக்கும் ஒரு ஜனநாயக நாடு (Inclusive Democracy) என்ற நிலைப் பாட்டில் உறுதியாக இருந்து வருகிறார் அநுரகுமார திசாநாயக்க. இந்தப் பின்னணியில், கடும் இனவாதிகளின், மத வெறியர்களின் மிரட்டல்களுக்கு எந்தக் காரணம் கொண்டும் அடிபணிய மறுத்து வரும் அவருக்கு குறிப் பாக சிறுபான்மை சமூகங்களின் வலுவான தார்மீக அதரவு தேவைப்படும் ஒரு நிர்ணயகரமான வரலாற்றுத் தருணமாக இது இருந்து வருகிறது.

# அமெரிக்காவில 100 ஆண்டுகளுக்குப் பிறகு

(23ம் பக்கத் தொடர்சி) அமெரிக்க அரசியலில் நிலவும் துருவமயமாக்கலும் கடுமையான பேச்சுகளும் இத்தகைய அறிவிப்பு வெளியாக வழி வகுத்திருக்க லாம் என்று ஓஹியோ பல்கலைக்கழகத்தின் சமூக உளவியல் பேராசிரியர் கர்ட் கிரே தெரிவித்தார். சில அமெரிக்கர்கள் ரத்தம் சிந்தப்பட வேண்டும் என்று விரும்பலாம். ஆனால், பலர் அப்படி விரும்புவதில்லை. சொல்லப்போனால், இன் னும் பலர் இதுபோன்ற காட்சிகளைக் கண்டு உணர்ச்சியற்றவர்களாக மாறியிரு க்கலாம். அதாவது, அவர்கள் ஒரு பொது மரணதண்டனையைக் கண்டு ஆரவாரம் செய்யவில்லை. மாறாக, 'ஓ, சரி, இப்போது நாம் இருக்கும் நிலை இதுதான் போலிருக்கிறது' என்று நினைக்கிறார்கள்.' என்றார் அவர்.

மற்ற ஆய்வுகளும், அமெரிக்க மக்களின் மனநிலையை அதிபர் டொனால்ட் டிரம்பும் அவரது நிர்வாகமும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. அமெரிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் பெர்க்லி வளாகத்தில் செயல்படும் வன்முறைத் தடுப்பு ஆய்வுத் திட்டத்தின் இயக்குநர் கரென் வின்டெமியூட், அமெரிக்காவில் வன்முறைக்கான ஆதரவு குறைந்து வருவதை ஆய்வுத் தரவுகள் காட்டுகின்றன என்கிறார். அமெரிக்க கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர், இந்த மரணதண்டனையை நேரலையில் ஒளிபரப்பும் அறிவிப்பை 'காட்டுமிராண்டித்தனமானது' என்று குறிப்பிட்டார். அவர் பலரின் கருத்தைப் பிரதிபலிப்பதாகவே நான் நினைக்கிறேன்.' என்றார் அவர். ஒரு பொது மரணதண்டனை என்பது நாம் யார் என்பதைக் காட்டுவ தில்லை. ஒரு நாடாக நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்க விரும்புகிறோம் என்பதையும் அது பிரதிபலிக்கவில்லை.' என்றும் அவர் கூறினார்.

கத்தோலிக்கரான அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், இந்த மரண தண்டனையைத் தான் பார்க்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார். அதிபர் டொனால்ட் டிரம்ப், தாமே அந்த ஒளிபரப்பைப் பார்ப்பாரா என்ற கேள்விக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்தார். இருப்பினும், நிடல் ஹசனின் மரணதண்டனையை நேரலையில் ஒளிபரப்பும் முடிவுக்கு ஒப்புதல் அளித்ததை அவர் உறுதிப்படுத்தி னார். 'அவர் எப்படி இறக்கிறார் என்பது குறித்து எனக்கு உண்மையில் அக்கறையில்லை. அவர் இறந்தால் போதும்.' என்று டிரம்ப் கூறினார். 'அவரு க்கு மரணதண்டனை என்பது மிகவும் பொருத்தமான தண்டனை என்று நான் நினைக்கிறேன்.' என்றும் அவர் தெரிவித்தார்.

# இரு தலைக் கொள்ளி நிலையில் இலங்கை!

(17ம்பக்கத் தொடர்ச்சி) படைகள் செய்ய வேண்டிய வேலைகளை, இலங்கை க்கு பகிர்ந்தளிக்கும் திட்டமே இது. இந்த இரண்டு பயிற்சி முகாம்களினதும் அடிப்படை இலக்கு ஈரானிய கப்பல்கள் தான். அதேவேளை, இலங்கைக்கு அருகே தரித்து நிற்கும் ஈரானிய கப்பல்களுக்கு விநியோகங்களை வழங்கக் கூடாது என அமெரிக்கா அழுத்தம் கொடுத்ததாக கூறப்பட்ட செய்திகளை வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் மறுத்திருக்கிறார் அமெரிக்கா அத்தகைய அழுத்தங்களை கொடுக்கவில்லை என அவர் கூறியிருக்கிறார். அமெரிக்கா அழுத்தங்களை கொடுத்ததோ இல்லையோ அமெரிக்காவை மீறிச் செயற்பட முடியாத நிலையில் இலங்கை இருக்கிறது என்பதே உண்மை. இதனைத் தாண்டி ஈரானிய கப்பல்களுக்கு விநியோகங்களை மேற்கொள்ளக் கூடிய தற்துணிவு இலங்கைக்கு இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

நாய் நன்றியுள்ளது என்பது பெரிய அதிசயம் இல்லை.
இத்தனை காலமும் மனிதர்களோடு இருந்தும்
அது நன்றியோடு இருப்பது தான் அதிசயம்.

# தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த நவி பிள்ளை யார்? அமைதிக்கான நோபல் பரிசும் பின்புலமும்!



சர்வதேச சட்டத்தின் வழியே உலகளாவிய அமைதியை நிலை நாட்டவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் தன் வாழ்நாளையே அர்ப்பணித்தவர், தென்னாப்பிரிக்கச் சட்ட வல்லுநர், சர்வதேச நீதிமன்றங்களில் நீதிபதியாக இருந்து அலங்கரித்தவர், மனித உரிமைக் காவலாளி என்று போற்றப்பட்ட இந்தியரான, தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்டவருமான நவநீதம் பிள்ளைக்கு (நவி பிள்ளை), 2026ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இனவெறி ஆட்சிக் காலத்தின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத்தனது சொந்த மண்ணில் வழக்கறிஞராகத் தொடங்கிய நவநீதத்தின் பயணம், இன்று சர்வதேச நீதியின் குறியீடாக உலகளாவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், வறுமையின் பிடியிலிருந்து தப்பிக்கத் தமிழகத்தின் கிராமங்களிலிருந்து தென்னாப்பிரிக்காவின் கரும்புத் தோட்டங்களுக்கு ஒப்பந்தத் தொழிலாளர்களாக ஏற்றி அனுப்பப்பட்ட எளிய மனிதர்களின் வம்சாவழியில் வந்தவர் நவி பிள்ளை.

அடிமைத்தனத்தின் தடயங்களைச் சுமந்த ஒரு தமிழ்க் குடும்பத்தில் பிறந்த பெண், பிற்காலத்தில் உலகத்தின் மிக உயரிய விருதான அமைதிக்கான நோபல் பரிசை வெல்வார் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆப்பிரிக்க மண்ணில் வேரூன்றி, உலகம் முழுவதும் நீதியின் விதைகளைத் தூவிய ஒரு தமிழினமகளின் வரலாற்றுச் சுவடு இது.

அதிகாரப்பசி, இனவெறி, போர் என மனித உரிமைகள் மிதிக்கப்படும் போது எல்லாம், பாதிக்கப்பட்ட மக்களின் ஒரே நம்பிக்கையாகத் திகழ்ந்தது சர்வதேசச் சட்டம். அந்தச் சட்டத்துக்கு உயிரையும் வலிமையையும் கொடுத்தவர் நீதிபதி நவி பிள்ளை.

தென்னாப்பிரிக்காவின் ராபன் தீவு சிறைச்சாலை முதல் தி ஹேக் (The Hague)சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் வரை, அதிகார வர்க்கத்தின் கண்களை நேருக்கு நேர் பார்த்து, 'மனித உரிமைகள் யாருக்கும் மறுக்கப்படக் கூடாது' என்று முழங்கியவர் நவி பிள்ளை.

### வறுமையான இளமைக் காலமும் கல்வியும்

1890ஆம் ஆண்டு காலக்கட்டத்தில், பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஒப்பந்தத் தொழிலாளர்களாகக் கரும்புத் தோட்ட வேலைகளுக்காக நவி பிள்ளையின் தாத்தாவும் பாட்டியும் இந்தியாவின் தமிழகத்தில் இருந்து தென்னாப்பிரிக்காவின் நடால் (Natal) பகுதிக்குச் சென்றனர். 1941ஆம் ஆண்டு பிறந்த நவநீதத்தின் பெற்றோர் நாராயணசாமி சாந்தம்மாள் இணையராவர். இவர்களுக்கு மொத்தம் 8 குழந்தைகள். அதில் ஐந்தவதாக பிறந்தவர் நவநீதம்.

தந்தை நாராயணசாமி ஓட்டுநராகப் பணியாற்றினார் தாயார் சாந்தம்மாள் இல்லத்தரசி. வறுமை, நிறவெறி மற்றும் வெள்ளையர்களின் ஆதிக்கம் நிலவிய இக்கட்டான சூழலில் தான் நவநீதம் வளர்ந்தார். குடும்பத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்பதை சிறுவயதிலிருந்தே நவநீதத்துக்கு அவரது பெற்றோர் கற்றுக் கொடுத்தனர்.

தென்னாப்பிரிக்காவில் பெரும்பாலான சிறுமிகளுக்குச் சிறுவயதிலேயே திருமணம் செய்து வைக்கப்பட்ட நிலையில், நவநீதமும் அவரது சகோதரிகளும் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்பதில் அவரது பெற்றோர் உறுதியாக இருந்தனர்.

தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் நிதியுதவியால் நவநீதம் 1963 இல் நடால் பல்கலைக்கழகத்தில் இளங்கலைச் சட்டப் பட்டத்தையும், 1965 இல் சட்ட இளங்கலைப் பட்டத்தையும் பெற்றார். பின்னர், 1982ஆம் ஆண்டு ஹார்வர்டு சட்டப் பள்ளியில் பயின்று முதுகலைப் பட்டத்தையும் (LL.M.). 1988இல் சட்ட அறிவியலில் முனைவர் பட்டத்தையும் (S.J.D.) பெற்றார். ஹார்வர்டு சட்டப் பள்ளியில் இருந்து சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் தென்னாப்பிரிக்கப் பெண் நவநீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

1967ஆம் ஆண்டு நடால் மாகாணத்தில் சொந்தமாகச் சட்ட நிறுவனம் தொடங்கிய முதல் வெள்ளையினத்தவர் அல்லாத பெண் வழக்கறிஞர் என்ற பெருமையை நவி பிள்ளை பெற்றார். இனவெறிக்கு எதிரான காலகட்டத்தில் தீவிரமாகச் செயல்பட்டு, ராபன் தீவுச் சிறையிலிருந்த நெல்சன் மண்டேலா உள்ளிட்ட தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். சிறையில் அரசியல் கைதிகளுக்கு நடந்த அநீதிகள், சித்திரவதைகள் மற்றும் மோசமான சூழல்களை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டினார்.

1995ஆம் ஆண்டு நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்து, தென்னாப்பிரிக்காவில் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த போது அதிபர் நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்க உயர் நீதிமன்றத்தின் முதல் கருப்பினப் பெண் நீதிபதியாக நவநீதத்தை நியமித்தார். தென்னாப்பிரிக்க வரலாற்றிலேயே முதல் கருப்பினப் பெண் நீதிபதி என்ற பெருமையை அவர் பெற்றார்.

### வன்புணர்வு இனி போர்க்குற்றம்

1995 முதல் 2003ஆம் ஆண்டு வரை ருவாண்டா சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயத்தில் (ICTR) நவநீதம் பணியாற்றினார். இதில் 1999 முதல் 2003 வரை 4 ஆண்டுகள் தலைமை நீதிபதியாகவும் பொறுப்பு வகித்தார்.

நவநீதம் நீதிபதியாக இருந்த போது, போர்க் காலத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமைகளை 'இனப்படுகொலையின் ஒரு பகுதி' எனக் கருத வேண்டும் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கினார். 'ஜீன்-பால் அகாயேசு' வழக்கில் அவர் வழங்கிய தீர்ப்பு பன்னாட்டுச் சட்ட வரலாற்றில் மிக முக்கிய மைல்கல்லாகும்.

ஒரு நேர்காணலில் நவநீதம் கூறுகையில் தொன்றுதொட்டு, ஒரு பெண்ணைப் பாலியல் வன்புணர்வு செய்வது போரின் கொள்ளைப் பொருளாகக் கருதப்பட்டு வந்தது. இனி அது போர்க்குற்றமாகக் கருதப்படும். வன்புணர்வு என்பது இனி போரின் வெற்றிக் கோப்பை அல்ல என்ற வலுவான செய்தியை உலகிற்குச் சொல்ல விரும்புகிறோம் என்று கம்பீரமாகத் தெரிவித்தார்.

அதன்பின் தி ஹேக்கில் உள்ள பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் (ஐஊஊ) நீதிபதியாகப் பணியாற்றினர். 2008 முதல் 2014 வரை ஐ.நா-வின் மனித உரிமைகளுக்கான முதன்மை ஆணையராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்.

### வரலாற்றுத் தீர்ப்புகளும் சர்வதேச வழக்குகளும்

இலங்கைத் தமிழர் உரிமை: 2009இல் இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாகச் சார்பற்ற சர்வதேச விசாரணைக்கு உறுதியாகக் குரல் கொடுத்தார்.

ஊடக வழக்கு (2003): ICTR ஊடக வழக்கில், ஊடகங்கள் மூலமாக இன வெறுப்பையும் தூண்டுதலையும் பரப்புவது சர்வதேசச் சட்டப்படி போர்க் குற்றத்துக்கு இணையானது எனத் தீர்ப்பளித்தார்.

LGBTQ+ உரிமைகள்: ஐ.நா-வின் வரலாற்றிலேயே முதன் முறையாகப் பாலினச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 'Free & Equal' என்ற உலகளாவிய பிரச்சாரத்தைத் தொடங்கினார்.

பாலஸ்தீன விவகாரம்: ஓய்வுக்குப் பிறகும், 2021-இல் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகள் குறித்து ஐ.நா அமைத்த சுதந்திரமான விசாரணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு ஆய்வுகளை வழிநடத்தி வருகிறார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம், பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் பாதுகாப்பு, போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை ஆகிய கொள்கைகளுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்து 2026 நோபல் அமைதிப் பரிசை வென்ற நவி பிள்ளையின் பயணம் உலகளாவிய மனித உரிமைப் போராட்டங்களுக்கு மிக முக்கிய வழிகாட்டியாகும்.

### 208 தனிநபர்கள்

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உட்பட 208 தனிநபர்கள் மற்றும் சர்வதேச நீதிமன்றம் உட்பட 79 அமைப்புகளின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டன. இந்த பட்டியலை நார்வே நோபல் குழுவின் தலைவர் ஜோர்ஜென் வாட்னே ஃப்ரைட்னெஸ் தலைமையிலான 6 பேர் குழு தீவிரமாக பரிசீலனை செய்தது. பல்வேறு கட்ட ஆய்வுகளுக்குப் பிறகு தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த தமிழ் வம்சாவளி சட்ட நிபுணர் நவநீதம் பிள்ளை அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டார்.

நன்றி:- த இந்து

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் இல்லாத 13வது திருத்தம்! மாகாணசபைகள் இல்லாத ஜே.வி.பி. அரசு!

- கலாநிதி தயான் ஜயதிலக்க -

இலங்கையின் அரசியல் கட்சிகள், குறிப்பாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் மட்டுமன்றி ஞாயிறு பத்திரிகைகள் உள்ளிட்ட பிரதான ஊடகங்களும், வெளிநாட்டுத் தாக்கங்களைக் கொண்ட மிக முக்கியமான, நீண்டகால முக்கியத்துவம் வாய்ந்த செய்தியைத் தவறவிட்டுள்ளன.

இது தமிழ் தேசியப் பிரச்சினை தொடர்பில் ஜேவிபி-என்.பி.பி அரசாங்கத்தின் நிலைப்பாடு, மாகாண சபைகள் குறித்த அதன் முடிவு மற்றும் அதன் பொதுவான அரசியல் திட்டங்கள் பற்றியதாகும்.

1971ஏப்ரல் கிளர்ச்சியின் வீரன் 1970களின் பிற்பகுதியிலும் 1980களின் முற்பகுதியிலும் தமிழ் தேசியப் பிரச்சினை குறித்த கட்சியின் முதன்மை தத்துவார்த்தவாதியும், ஜே.வி.பியின் முதல் பொதுச்செயலாளருமான லயனல் போபகே, கட்சியின் தற்போதைய பொதுச்செயலாளரும் நாட்டின் முதலாவது நபராக இல்லையெனில் இரண்டாவது சக்திவாய்ந்த நபருமான ரில்வின் சில்வாவுடன் தான் நடத்திய உரையாடலை பதிவு செய்துள்ளார்.

அதன் முக்கியமான பகுதி இதோ: ஆனால் அதே நேரத்தில், அது 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தோழர் ரில்வின் சில்வாவுடனான கலந்துரையாடலின் போது, அரசியலமைப்பு மாற்றம் மற்றும் 13ஆவது திருத்தம் குறித்து நான் கேட்டேன். அரசாங்கம் இன்னுமொரு புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதை ஏற்றுக் கொள்ள உழைத்து வருகிறது என்பதே அவரது பதிலாக இருந்தது.

அது 13ஆவது திருத்தத்தை எதிர்மறையான ஒன்றாகப் பார்க்கிறது. அதற்கு மாற்றீடொன்றைக் கண்டறிய முயற்சிக்கிறது. நான் சுருக்கமாகக் கூறினால் தமிழ் மக்களின் குறைகள் உள்ளன என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. மேலும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாண சபைகள் மூலமாக அல்லாமல் அவற்றை நிவர்த்தி செய்ய விரும்புகிறது. அது சொந்த வழிமுறைகளை உருவாக்கி வருகிறது. அனைத்து சமூகங்களும் கண்ணியத்துடன் வாழ்வதற்கு சம வாய்ப்புகளை வழங்க முடிந்தவரை நல்லதென்றால், நான் மகிழ்ச்சியடைவேன்''

இதன் முக்கிய பகுதிகளை உன்னிப்பாகக் கவனிக்கும் போது நமக்கு கிடைக்கும் தெளிவு இதுதான்:

•ஜேவிபி அரசாங்கம் 13ஆவது திருத்தத்தை ஒரு எதிர்மறையான காரணியாக நிராகரிக்கிறது.

•அது 13ஆவது திருத்தத்திற்கு ஒரு மாற்றீடைக் கண்டறிய முயல்கிறது.

•தமிழ் மக்களுக்கு குறைகள் உள்ளன என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. ஆனால் இலங்கை-இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாண சபைகள் மூலமாக அல்லாமல் அவற்றை நிவர்த்தி செய்ய விரும்புகிறது.

• அதற்காக அரசாங்கம் தனது சொந்த வழிமுறைகளை உருவாக்கி வருகிறது.

• இந்த நிலைப்பாடுகளிலிருந்துதுரு நாம் நியாயமாக என்ன முடிவு செய்ய முடியும்?

1980களின் பிற்பகுதியில் தனது வன்முறைப் பிரசாரத்தின் போது இருந்தது போலவே, ஜேவிபி அரசாங்கம் சித்தாந்த ரீதியாக இலங்கை-இலங்கை ஒப்பந்தத்திற்கும் 13ஆவது திருத்தத்திற்கும் எதிராகவே உள்ளது. இந்த எதிர்ப்பு இந்தியாவின் வற்புறுத்தல் இராஜதந்திரத்திற்கு









மட்டும் வரம்பிற்குட்பட்டது அல்ல. ஏனெனில் அப்படி இருந்திருந்தால், அது இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு மட்டுமான எதிர்ப்பாக இருந்திருக்க வேண்டும், 13ஆவது திருத்தத்திற்கான எதிர்ப்பு அல்ல.

ஜே.வி.பியின் பார்வையில் 13ஆவது திருத்தம் குறைபாடுள்ளது மட்டுமே என்றால், அதை எதிர்மறையானது என்று முற்றாக நிராகரித்து மாற்றீட்டைத் தேடுவதற்குப் பதிலாக, அதைத் திருத்தியமைத்திருக்க முடியும். 13ஆவது திருத்தத்தில் உள்ள பிரச்சினை என்ன என்றும், அதை பாராளுமன்ற இணக்கப்பாட்டின் மூலம் கட்டமைப்பு ரீதியான திருத்தம் செய்து ஏன் தீர்க்க முடியாது என்றும் ஜே.வி.பி இன்னும் தெளிவுபடுத்தவில்லை.

அநுரகுமார திசாநாயக்கவின் நிர்வாகத்திற்கு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக வந்த தற்போதைய 13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபை தேர்தல்களை நடத்தும் எண்ணம் இல்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தேர்தல் முறையில் மட்டும் மாற்றங்களுடன் 13ஆவது திருத்தத்தின் கீழ் நிறுவப்பட்ட மாகாண சபைகள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட மாட்டாது.

லயனல் போபகே ஜேவிபி இரகசியங்களை அறிந்தவர்—தற்போதுள்ள மாகாண சபை முறைமை முற்றிலும் மாற்றப்படும். மாகாண சபை முறைமை என்றொன்று இருந்தால், அது புதிய ஒன்றாக இருக்கும். தற்போதைய மாகாண சபைகளின் முறைமை இருக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

13ஆவது திருத்தம் என்பது இந்தியா மற்றும் இலங்கைக்கும் இடையே மற்றும் இலங்கை அரசியல் கட்சிகளுக்கு இடையே (1986) பல ஆண்டுகள் (1984 முதல்) நடந்த பேச்சுவார்த்தைகளின் பலனாகும். ஜே.வி.பி. அதைச் சீர்திருத்துவதை விடுத்து நிராகரிப்பதால், அதன் `சொந்த வழிமுறை' முடிவில்லாத ஆலோசனைகளுக்கும் தாமதங்களுக்கும் வழிவகுக்கும் அல்லது ஆலோசனைகள் மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அமையாமல் தன்னிச்சையான விரைவான ஒன்றாக இருக்குமென நாம் எதிர்பார்க்கலாம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் தேர்தல் அறிக்கையில் ஒரு வருடத்திற்குள் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டதே தவிர, 13ஆவது திருத்தம் மற்றும் தற்போதைய முறைமைக்கு வெளியே அதன் சொந்த புதிய வழிமுறை கொண்டு வரப்படுமென வாக்குறுதியளிக்கப்படவில்லை. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் 13ஆவது திருத்தத்தையும் தன்னிச்சையாக புறக்கணித்து, மீறி, இரத்து செய்வதன் மூலம், ஜே.வி.பி. அரசாங்கம் ஏதேனுமொரு நாளில் இந்தியாவுடன் மீண்டுமொரு சிக்கலில் ஈடுபடப் போகிறது. இப்போது தமிழ்நாட்டில் ஒரு துடிப்பான இளம் முதலமைச்சர் இருக்கிறார் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதேநேரம் இந்தச் சிறிய தீவில் இன்னும் அதிகமான மூலோபாய நிலங்களை இந்தியாவுக்கு விற்று அதன் அழுத்தத்தை ஈடுசெய்யும்.

அனைத்து சமூகங்களுக்கும் சம வாய்ப்புகள்' என்ற லயனல் போபகேயின் சமிக்ஞையிலிருந்து, ஜே.வி.பியின் `சொந்த வழிமுறைகள்' என்பது அதிகாரப்பகிர்வு அல்லது பிராந்திய சுயாட்சி அல்லது அரைச் சுயாட்சி அடிப்படையில் அமையாது என்பதை நாம் ஊகிக்க முடியும்.

சாத்தியமான வகையில், ஜே.வி.பி. தன்னை ஆட்சியில் தக்க வைத்துக் கொள்ளவும், தேசிய தேர்தல்களை பிற்போடவும் சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்ல இலக்கு வைக்கலாம். ஏனெனில் இந்த விவகாரத்தில் சிங்கள தீவிர தேசியவாத வாக்குகளைப் அதனால் பெற முடியும் என்று அது கணக்கிடுகிறது. இந்த சூதாட்டம் இலங்கையை இரண்டு காரணங்களால் ஆபத்தான பாதைக்குக் கொண்டு செல்லும்:

1.மாகாண அளவிலான அலகுகளுக்கு அரசியல்-பிராந்திய சுயாட்சி அல்லது அதிகாரப்பகிர்வை வழங்காத 13ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்கு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாட்டுத் தரப்பிடமிருந்து எதிர்ப்புகள் வெளிப்படாது என்பது நிச்சயம்.

2. `அனைத்து சமூகங்களுக்கும் சம வாய்ப்புகள்' என்பதை எதிர்க்கும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த வாக்காளர்களிடமிருந்தும் எதிர்மறையான எதிர்வினை வர வாய்ப்புள்ளது. ஏனெனில், லோர்ட் சோல்பரி கூறியது போல் ஒரு சிறுபான்மையினரைப் பெரும்பான்மையினராகவோ அல்லது பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினராகவோ மாற்ற முடியாது. பாகுபாடற்ற நிலை சாத்தியமானது மற்றும் விரும்பத்தக்கது என்றாலும், அரசியல் ரீதியாக `அனைத்து சமூகங்களுக்கும் சம வாய்ப்புகள்' என்பது போட்டியிடும் ஜனநாயக முறைமை மற்றும் சமமற்ற அளவிலான சமூகங்களைக் கருத்தில் கொள்ளும்போது சாத்தியமற்றது. மேலும், `அனைத்து சமூகங்களுக்கும் சம வாய்ப்புகள்' என்பது பௌத்த மதத்தின் அரசியலமைப்புச் சலுகை பெற்ற அந்தஸ்துடன் பொருந்தாதது என்றும், தமிழ் தரப்பில் அதுவொரு மதச்சார்பற்ற அரசைத் தேவையாக்குகிறது என்றும் இரு தரப்பாலும் நிரூபணம் செய்யப்படலாம்.

இவ்வாறிருக்கையில் லயனல் போபகேயின் கூற்றுப்படி, ரில்வின் சில்வா `அரசாங்கம் தான் ஏற்றுக் கொள்ளப் போகும் புதிய அரசியலமைப்பை நோக்கி இன்னும் உழைத்து வருகிறது' என்று கூறுகிறார். அப்படியென்றால், அதற்கான பரந்த ஆலோசனை செயன்முறையின் அடையாளம்கூட ஏன் இல்லை?

இந்த செயல்முறை தன்னிச்சையானதாக இருக்குமா? அல்லது அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பைத் தவிர்த்து, 22ஆவது திருத்தத்திற்குப் பிந்தைய இறப்பர் முத்திரையை எதிர்நோக்குகிறதா? அல்லது ஆலோசனைகள் இன்னும் தொடங்கவில்லையா? அல்லது மாகாண சபைகள் அவற்றின் வாரிசு அமைப்புகளுக்கான மாவட்ட சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்ந்து காலவரையின்றி தாமதப்படுத்தப்படுமா?

தமிழ் தேசியவாதத்தின் தீவிரக் கரையை நான் பார்க்கவில்லை என்பதல்ல. திலீபனின் நினைவேந்தலே அதற்கு சான்றாகும். சிங்கள அல்லது இந்திய சிப்பாய்களால் தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதற்காக திலீபன் உண்ணாநோன்பிருந்து இறக்கவில்லை.

பிரபாகரனின் கட்டளையின் பேரிலேயே, இலங்கை பெற்ற அமைதிக்கான முதல் உண்மையான வாய்ப்பையும், தமிழ் மக்கள் பெற்ற சுயாட்சிஅளவிலான முதல் உண்மையான வாய்ப்பையும் (இந்திய-இலங்கை ஒப்பந்தம்) சீர்குலைப்பதற்காகவே அவர் அவ்வாறு செய்தார்.

தேசிய விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில், சண்டை நிறுத்தப்பட்டு, பரிவுணர்வு கொண்ட வெளிநாட்டுச் சக்தியின் மத்தியஸ்தத்துடன் முன்னேற்றத்திற்கான உண்மையான வாய்ப்பு இருக்கும் போது போராட்டங்கள் வெடித்தமை அரிதாகும்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் அவ்விதமான சூழல்களை சீர்குலைத்தது. பிரபாகரனின் உத்தரவின் பேரில் திலீபன் நடத்திய இந்த அமைதிக்கு எதிரான, போருக்கு ஆதரவான உண்ணாநோன்பைத் தான் வடக்கு மாகாணத்திலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள தமிழ் தீவிர தேசியவாதிகள் நினைவு கூருகிறார்கள். இது தமிழ் தேசியவாதத்தின் அடிப்படைவாத, பிரிவினைவாத அம்சத்திற்கு மீண்டும் சான்றாகும். கலாச்சாரம் காண் அப்படியிருந்தும், ஒரு நாட்டில் ஒட்டுமொத்தமாக சிறுபான்மையினராக இருந்தாலும், குறிப்பிட்ட பிரதேசத்தில் செறிவாக வாழ்ந்து பெரும்பான்மையினராக இருக்கும் ஒவ்வொரு இனத்துவ-தேசிய சமூகமும் அப்பிரதேசத்தில் குறிப்பிட்ட அளவிலான அதிகாரப் பகிர்விற்கும் சுய நிர்வாகத்திற்கும் தகுதியுடையது. அது இலங்கையின் தமிழர்களுக்கும் பொருந்தும். அதைத்தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம், 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபைகளின் முறைமையும் உறுதி செய்தன.

# சட்டங்களைக் காவிக்குள் அடைக்க விரும்பும் துறவிகளும் காவியைப் பிடித்து மீண்டெழத் துடிக்கும் அரசியல்வாதிகளும்!

கடுழியச் சிறைத் தண்டனைக்குள் மீண்டும் தள்ளப்பட்ட கலகொட ஞானசார தேரரின் காவியுடை சிறைச்சாலை ஒழுங்குவிதி களுக்கமையக் களையப்பட்டமை தொடர்பாகக் காரசாரமான கருத்தாடல்கள் தெற்கில் தற்போது இடம் பெற்று வருகின்றன. ஏலவே உள்ள சட்டங்களின் அடிப்படையில் இது அமைந்தது என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருக்கும்.

அதேவேளை வழமையாக நாட்டின் சட்டங்களுக்கு மேலானவர்கள் எனத் தம்மைக் கருதிக் கொள்ளும் பௌத்த துறவிகள் இவ்விடயத்திலும் சட்ட விடுபாட்டுரிமையைக் கோரி நிற்கின்றனர். மறுபுறத்தில் அரசியல் சுழிக்குள் அகப்பட்டுத் தத்தளிக்கும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளோ இந்தக் காவியுடையைக் கைப் பிடித்தாவது மேலெழ முடியாதா என முயற்சிப்பதையும் காணமுடிகிறது.

இது அரசாங்கத்துக்கு இன்னொரு புதிய சவாலாக மாறி வருவது போலத் தெரிகிறது. தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதுபோல தற்போதைய ஆட்சியாளர் உட்பட சிங்களத் தலைவர்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், தக்கவைப்பதற்கும் கடந்தகாலத்தில் பௌத்த தீவிரவாத்த்தைத் தாங்களாகவே பாலூட்டி வளர்த்ததன் விளைவே இது என்பதே உண்மை. இந்தச் சவாலை கையாள்வது அரசாங்கத்துக்கு வழமை போல இலகுவானதொன்றாக அமையப் போவதில்லை.

பௌத்த துறவிகளின் காவியுடையும் ஒரு வகையான சீருடை தான் என்றாலும் ஏனைய பல பிரிவினரின் சீருடையை விட அதற்கு வேறு வகையான அர்த்தங்களும் கற்பிக்கப் பட்டுள்ளன. தீயின் நிறத்தை ஒத்தது காவி. உலகியல் ஆசைகளை ஞானமெனும் தீயில் எரித்த ஒருவரின் பற்றற்ற வாழ்க்கையொன்றை அது வெளிப்படுத்தி நிற்கிறது. அரச போகங்களைத் துறந்து ஆன்மீகத் தேடலுக்குள் நுழைந்த சித்தார்த்தன் உடுத்திக் காட்டிய வழியது. அது துறவின் முதற்படி. பற்றறுநிலை, தியாகம்,எளிமை,அடக்கம், ஒழுக்கம், தூய்மை, சமத்துவம் போன்ற ஒப்பற்ற பலபண்புகளின் ஒருமித்த வடிவமே இந்தக்காவி.

உடுத்தும் உடை கூட மற்றவரைக் கவரக்கூடாது என வாழ்ந்து காட்டிய புத்தனின் இன்றைய இலங்கைச் சீடர்களில் எத்தனைபேரின் காவிகள் அந்த ஒப்பற்ற பண்புகளைப் பிரதிபலிக்கின்றன? போகங்களைத் துறந்ததற்கான அடையாளமாகவன்றி போகங்களை மறைப்பதற்கான அடையாளமாகத் தானே காவிகள் பலவிடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அன்பு கருணை, அடக்கம் என்பவற்றுக்குப் பதிலாக வெறுப்பும் துவேசமும் அடக்குமுறையும் தானே காவியுடை தரித்த பலரால் இங்கு மக்களுக்குப் போதிக்கப்படுகின்றன. ஆட்சியதிகாரத்தையும் அரச போகங்களையும் துறந்த வந்து காவி தரித்த புத்தனின் இன்றைய சீடர்கள் பலர் இங்கு அக்காவியை அணிந்துகொண்டு அவ்வகையான போகங்களுக்கும் அரசியல் அதிகாரங்களுக்கும் அலைவதைத் தானே பார்க்க முடிகிறது.

பௌத்தத்தில் பாணாதிபாதா எனப்படும் உயிர்களைக் கொல்லுதல் பாவம் என்பது புத்தனின் பஞ்சசீலக் கொள்கைகளில் முதன்மையானது. ஆனால் தனது நாட்டு மக்களில் ஒரு பகுதியினரைக் கொல்வதற்கென்றே சில் அனுஷ்டித்து அரசபடைகளுக்கு ஆசி வழங்கி அனுப்பிய மகா சங்கத்தினரும் இங்குதானே உள்ளனர்.

ஞானசார தேரரின் காவியுடை களையப்பட்டமை புத்த சாசனத்துக்கு ஏற்பட்ட இழுக்கு என மகாசங்கத்தினரும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளும் இன்று குரலெழுப்பி வருகின்றனர்.



இவர்களுடன் ஸ்ரீயப்பான் நாட்டின் சம்புத்தாகே விகாரையின் பிரதம தேரோவான துன்பிட்டிய தம்மாலோக தேரரும் தற்போது இணைந்துள்ளார். புத்த சாசனம் என்றால் என்ன? கௌதம புத்தரின் போதனைகள், அவற்றின் சாராம்சமான தர்மக் கோட்பாடுகள், வினய எனப்படும் ஒழுக்க விதிமுறைகள் என்பவற்றினை இது குறிக்கும். இலங்கையில் இது பரந்த அடிப்படையில் பௌத்த மதக் கட்டமைப்புகள், விகாரைகள், பௌத்த துறவிகளைக் கொண்ட மகாசங்கத்தினர் மற்றும் புத்த கலாசார விழுமியங்கள் என்பவற்றை உள்ளடக்கும் ஒரு சொல்லாடலாகக் கருதப்படுகிறது. இச்சாசனத்தின் முக்கிய பிரிவான வினய என்பது திரிபிடகத்தின் முதன்மையான பிரிவாகும். இது பௌத்த துறவிகளுக்கான ஒழுக்க நெறிமுறைகள், நடத்தை விதிகளை வரையறுத்துக் கூறுகிறது.

உண்மையில் தற்காலிகமாகக் காவி களையப்படுவதன்றி இந்த வினய குறிப்பிடும் துறவிகளுக்கான ஒழுக்க நெறிகளும் நடத்தைகளும் அவர்களால் மீறப்படுவது தான் புத்த சாசனத்துக்குப் பெரிய இழுக்காகும். ஆனால் கடந்த காலத்தில் ஞானசார தேரர் உட்படப் பல பௌத்த துறவிகள் மோசமான ஒழுக்கப் புரள்வுகளில் ஈடுபட்ட சந்தர்ப்பங்களில் மகாநாயக்கர்களும் ஏனைய பிக்குகளும் தற்போது குரல் எழுப்புவது போல அப்போது குரல் எழுப்பவில்லை.

அண்மையில் அனுராதபுர அட்டமஸ்தான தலைமைத் தேரரான பல்லேகம ஹேமரத்ன நாயக்க தேரரின் மோசமான நடத்தைகள் வெளிவந்த போது கூட மகாநாயக்கர்களும் ஏனைய மகாசங்கத்தினரும் அடக்கியே வாசித்தனர். புத்தசாசனுத்துக்கு இழுக்கு என்று ஒரு சிலரைத் தவிர இன்று குரல் எழுப்பும் அரசியல்வாதிகள், மகா சங்கத்தினர் உட்பட எவரும் குரல் எழுப்பவில்லை.

இன்னுஞ் சில பிக்குகள் அதனை நியாயப்படுத்திப் பேசியதையும் காண முடிந்தது. அவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளும் காவல் துறையும் முன்வராத நிலையையும் மக்கள் எதிர்ப்புக் கிளம்பிய பின்னரே அவர்கள் நடவடிக்கை எடுத்ததையும் காணமுடிந்தது. இதுபோல இன்னும் பல பிக்குகளின் பிறள் நடத்தைகள் தொடர்ந்து மூடி மறைக்கப்பட்டே வந்துள்ளன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வராது இழுக்கு இப்போது மட்டும் எவ்வாறு வரும்? அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் புத்தசாசனத்துக்கு வராத இழுக்கு தற்போது ஞானசாரதேரரின் காவியுடை களையப்பட்ட போது மட்டும் வரும் என்றால் அவர்களின் கூக்குரலின் நோக்கம் தொடர்பில் ஐயமேற்படுவது இயல்பானதே. அது மட்டுமல்ல ஏற்கனவே இதுபோல 63 பிக்குகள் சிறையில் உள்ளனர். சிறைச்சாலை விதிகளுக்கமைய அவர்களின் காவியுடைகளும் களையப்பட்டே உள்ளன. அந்தப் பிக்குகளின் காவியுடைகள் களையப் பட்ட போது புத்தசாசனத்துக்கு இழுக்கு ஏற்படும் எனக் குரலெழுப்பாதவர்கள் இப்போது மட்டும் பெரிதாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் நோக்கம் என்ன? இவ்விடயத்தில் புத்தர் போதித்த சமத்துவத்துக்கு என்ன நடந்தது?

சிறைச்சாலை ஆணையாளருக்கு மகாநாயக்கர்கள் எழுதிய கடிதத்தில் மட்டுமன்றி வேறு தரப்புகளாலும் பிக்குவின் காவியுடையைக் களைவதற்கு சிறைச்சாலை ஆணையாளருக்கோ அன்றி வேறெவருக்குமோ அதிகாரமில்லை என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. உண்மை நிலை தெரிந்திருந்தும் மக்களிடத்தே எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் பொருள் மயக்கமாக இவ்வாதம் அவர்களால் முன்வைக்கப்படுகிறதா என்ற ஐயம் இங்கு எழுகிறது. அவர்களால் முன்வைக்கப் படும் வாதம் என்னவெனில் பிக்கு ஒருவரின் காவியுடையை அப்பிக்குவினால் அல்லது அந்தப் பிக்கு சார்ந்திருக்கும் மகாசங்க சபையினால் மட்டுமே களையமுடியும் என்பதாகும். இது ‘வினய’ விதிமுறைகளில் சொல்லப்பட்டுள்ளது. இதில் அவர்களால் குறிப்பிடப்படும் காவியுடை களைதல் என்பது அச்செயல் மூலம் குறித்த நபரைப் பிக்கு என்ற தகுதியிலிருந்து விலக்குதல் அல்லது விலகுதல் எனப்பொருள்படும். ஆனால் சிறைச்சாலையில் பிக்குவின் காவியுடை களைந்தமை அவரை பிக்கு என்ற தகுதியில் இருந்து நீக்கியது என்று பொருளன்று. அவர் பிக்குவாகவே இருப்பார். ஆனால் சிறைச்சாலையில் இருக்கு மட்டும் சிறைச்சாலை விதிகளுக்கமைய உடைகளை அணிய வேண்டும் என்பதாகும்.

சிறைச்சாலைக் கட்டளைச் கட்டளைச் சட்டத்தின்படி மூன்று ஆண்டுகளுக்கு மேலான கடூழியச் சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் எந்தவகையான வேறுபாடுகளுமின்றி சிறையில் இருக்கும்போதும் உத்தியோகபூர்வமாக வெளியில் அழைத்துச் செல்லப்படும் போதும் சிறைச்சாலையால் வழங்கப்படும் அவற்றிற்குரித்தான உடைகளையே அணிய வேண்டும். இது ஆறு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானசாரதேரருக்குப் பொருந்தும். ஆனால் மூன்றாண்டுகளுக்குக் குறைவான தண்டனை பெற்ற ஒருவர் வெளியில் அழைத்துச் செல்லப் படும் சந்தர்ப்பங்களில் அவர் முன்னர் அணிந்திருந்த உடையை அணிய முடியும். இக்கட்டளைச் சட்டம் இந்த அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட புதிய சட்டமன்று. 1877 ஆம் ஆண்டிலிருந்து காலத்துக்குக் காலம் சில சீர்திருத்தங்களுடன் நீண்டகாலமாக நடைமுறையிலிருந்து வரும் ஒன்று. இச்சட்டத்தை

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**-க. அருந்தவபாலன் -**



முன்னர் உரியமுறையில் அமுல்படுத்தாது சலுகைகள் வழங்கி விட்டு தற்போது அந்தச் சலுகை வழங்காது சட்டம் உரியவாறு அமுல்படுத்தப் படுவதும் இப்பிரச்சினை எழுவதற்கு ஒரு காரணமாகலாம். நீதிமன்றுக்கு அழைத்துச் சென்றபோது முன்னைய அரசாங்கங்கள் செய்யாததை இந்த அரசாங்கம் தனக்குச் செய்து விட்டது என இது தொடர்பாக ஊடகங்களுக்கு ஞானசார தேரர் கூறியது இதனை உறுதிப்படுத்துகிறது. இவரைத் தான் முன்னாள் ஜனாதிபதி கோதாபய ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற செயற்றிட்டத்துக்கு தலைவராக நியமித்திருந்தார் என்றால் அத்திட்டம் என்ன நோக்கத்தைக் கொண்டது என்பது இந்நாட்டிலுள்ள சிறுபான்மை தேசிய இனங்களுக்கு நன்றாகவே தெரியும்.

சிறைச்சாலை ஆணையாளருக்கு மகாநாயக்கர் எழுதிய கடிதத்தில் இன்னொரு சட்ட ஏற்பாட்டையும் சுட்டுக்காட்டியிருந்தனர். சிறைக் கைதிகளைக் கையாள்வது தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் குறைந்தமட்ட விதிகளின் உறுப்புரை 17(3) இற்கமைய கைதிகள் வெளியில் அழைத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் முன்பு அணிந்திருந்த உடையை அணிய அனுமதிக்க வேண்டும் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். ஆனால் இது தொடர்பில் இரண்டு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். ஒன்று குறிப்பிட்ட 17(3) உறுப்புரையில் முன்னர் அணிந்திருந்த உடை அல்லது குறித்த நபரை தனித்து வேறுபடுத்திக் காட்டாத வேறு உடை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வடிப் படையில் பார்த்தால் காவி உடையை விட ஞானசார தேரர் அணிந்திருந்த உடையே கூடிய பொருத்தமானது எனக் கருதலாம்.

இரண்டாவது இதுபோன்ற சர்வதேச சட்டங்கள் இலங்கையில் நேரடியாகச் செல்லுபடியாவதில்லை. அவை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப் பட்டால் மட்டுமே இந்நாட்டில் வலிதுடைமை பெறும். நாட்டிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனங்கள் தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்காத இதே மகாநாயக்கர்கள தான் தமது மகாசங்க உறுப்பினருக்காக குறித்த சர்வதேசச் சட்டத்தைக் கையிலெடுத்துள்ளார்கள் என்பது அகமுரணானது. ஞானசார தேரரின் காவி உடை களையப் பட்டமை அரசியலமைப்புக்கு முரணானது என்ற கருத்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உட்பட சில (22ம் பக்கம் பார்க்க)

# சட்டங்களைக் காவிக்குள் அடைக்க விரும்பும் துறவிகளும் காவியைப் பிடித்து மீண்டெழத் துடிக்கும் அரசியல்வாதிகளும்!

(21ம் பக்கத் தொடர்ச்சி) தரப்புகளால் முன் வைக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. இவ்வாறு கருத்துரைப்போர் அரசியலமைப்பின் இரண்டாம் அத்தியாயத்திலுள்ள உறுப்புரை 9இல் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட முதன்மை இடத்தைச் சுட்டிக் காட்டுகின்றனர். பொதுச்சட்டம் அல்லது துறை சார்ந்த சட்டமொன்றுக்கும் நாட்டின் அரசியலமைப்புக்கும் இடையில் முரண்பாடு ஒன்று தோன்றுமானால் அரசியலமைப்பு சட்டவிதிகளே மேலோங்கும் என்பதே நியதி. எனினும் அது தொடர்பான பொருட்கோடலும் முடிவும் உச்ச நீதிமன்றம் சார்ந்த தொன்றாகும். இதனை தனிப்பட்டவர்களோ அன்றி அரசாங்கமோ தீர்மானிக்க முடியாது.

அவர்கள் சுட்டிக் காட்டும் அரசியலமைப்பின் உறுப்புரை 9 இல், 'இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும்' எனக் கூறுகிறது. உண்மையில் அரசியலமைப்பின் இந்த உறுப்புரை தான் இந்தப் பிரச்சினைக்கு மட்டுமன்றி நாட்டில் வேறுபல பிரச்சினைகளுக்கும் அடிப்படையாக இருந்து வருகிறது.

இவ்வுறுப்புரையில் கூறப்பட்டுள்ள முதன்மைத்தானம் மற்றும் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தல் என்பது இந்நாட்டில் மகாசங்கத்தினருக்கு மட்டுமன்றி அம்மதம் சார்ந்த துறையினருக்கும் தாம் சட்டத்துக்கு மேலானவர்கள் அதனால் எல்லை கடந்து செயற்படலாம்என்ற எண்ணங்களை உருவாக்கியுள்ளது. இந்த எண்ணங்களை நீரூற்றி வளர்த்ததில் அரசியல்வாதிகளுக்குப் பெரும் பங்குண்டு. இவ்விடயத்திலும் கூட இன்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் அதனையே செய்கின்றனர். ஆனால் இந்த உறுப்புரை அவ்வாறு பிக்குகள் நாட்டின் சட்டங்களுக்கு மேலானவர்கள் என்றோ அதனால் சட்டத்தை மீறி நடக்கமுடியும் என்றோ பொருளைக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் பிக்குகளின் மோசமான நடத்தைகளை அனுமதிப்பதன் மூலமாகவன்றி அவற்றைக்




கட்டுப்படுத்துவதன் மூலமே அவ்வுறுப்புரை எதிர்பார்க்கும் பௌத்த மதப் பாதுகாப்பைப் பெறமுடியும். இந்நோக்கத்துக்காகவே பிக்குகளுக்கான ஒழுக்கநெறிகளை வகுத்துக் கூறும்' வினய' உருவாக்கப்பட்டுள்ளதாக அதிலேயே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை சும்மா வாய்களை மென்று வந்த எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளுக்கு இப்போது ஞானசார தேரரின் காவியுடை களைந்த விடயம் அவல் கிடைத்த மாதிரி ஆகிவிட்டுள்ளது. இவர்களின் கடந்தகால அரசியல் மூலதனமே பௌத்தமும் சிங்களமும் தானே. மதம் என்பது இலங்கையில் மட்டுமன்றி எல்லாச் சமூகங்களிலும் போதைப்பொருள் மாதிரித் தான். அதிலும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் அதனைக் கொடுத்து மக்களை இலகுவாக வசியப்படுத்த முடியும் என்பது கடந்தகாலம் அவர்களுக்கு கற்றுத்தந்த பாடம் .

அந்தவகையில் எதிர்கால இருப்புகள் கேள்விக்குறியாகி நிற்கும் இன்றைய எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் இதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிராக மக்களைத் திருப்பி அதில் குளிர்காய முயற்சிப்பது ஆச்சரியமானதொன்றல்லவே. இதற்கு எவ்வாறு அரசாங்கம் எதிர் வினையாற்றவுள்ளது என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

இவ்விடயம் அரசாங்கம் முன்னர் கையாண்ட விடயங்களைப் போல இலகுவாகக் கடந்து விடமுடியாதது என்பதை மகாநாயக்கர்களின் பிரதிநிதிகளை உடனடியாக ஜனாதிபதி அழைத்து கலந்துரையாடியதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

அக்கலந்துரையாடலில் தற்போதுள்ள சட்டங்களுக்கு அப்பால் தனிப்பட்ட ரீதியில் சலுகைகள் எதனையும் தன்னால் வழங்க முடியாது என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருந்தாலும் சட்டங்களில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான பரிந்துரைகளை இருபது நாட்களுக்குள் வழங்குவதற்கான குழுவொன்றை உடனடியாக நியமித்திருப்பதையும் காணமுடிகிறது. எனினும் இது தொடர்பாக புதிய சட்டமொன்றைக் கொண்டுவருவது இலகுவானதாக அமையப்போவதில்லை.

ஏனெனில் இவ்வாறானதொரு முயற்சி இருபுறமும் கூர்மையான கத்தியில் நடப்பதைப் போன்றது. ஒருதரப்பினருக்காக சட்டத்தை வளைப்பது பல்வேறு கேள்விகளை எழுப்பும். இவ்வாறான சட்டம் பௌத்தத்துக்கு முதன்மை அளிக்கும் அரசியலமைப்பு உறுப்புரையை மேலும் வலுவுள்ளதாக மாற்றவே வழிவகுக்கும். மேலும் சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் மற்றும் மத அடிப்படையில் எந்தவொரு குடிமகனுக்கும் இடையில் வேறுபாடு காட்டப்படக்கூடாது என்ற அரசியலமைப்பின் உறுப்புரைகள் 12(1),12(2) என்பவற்றால் குறிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தொடர்பாக கேள்வி எழுப்பப்படும். மறுபுறத்தில் தேசிய மக்கள் சக்தி இதுவரை போட்டிருக்கும் மதச்சார்பற்ற அரசாங்கம் என்ற முகப்பூச்சு கரைவது தவிர்க்க முடியாததாகி விடும். ஆட்சியைத் தக்க வைப்பதற்காக அனுர மகாசங்கத்தினருடன் சமரசம் செய்து போட்டிருப்பது முகப்பூச்சு என்பதை வெளிப்படுத்தப் போகிறாரா அல்லது அவர் கூறுவது போல சட்டத்தின் முன் யாவரும் சம்மானவர்கள் என்பதை வெளிப்படுத்தி போட்டிருப்பது முகப்பூச்சல்ல உண்மையான முகம் என்பதை நிரூபிக்கப் போகிறாரா என்பது விரைவில் தெரிய வரும்.

## நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்திற்குள்...

(16ம் பக்கத் தொடர்ச்சி) பயன்படுத்தி கொண்ட ஒரு ஊழல் மிகுந்த வழக்கறிஞரை நியாயப்படுத்தியதுதான் அவரது (நவநீதம் பிள்ளை) சாதனையாகும்.

தன்னுடன் பணியாற்றிய சர்வதேச குற்றவியல் நீதிமன்ற ஊழியர்களாலேயே பாலியல் குற்றஞ் சாட்டப்பட்ட கரீம் கான், இஸ்ரேலுக்கு எதிராக நவநீதம் பிள்ளை பொய்களின் மூலம் ஒரு போலியான வழக்கை உருவாக்கினார். பிள்ளை பொய்களை வழங்கினார்.

கான் அவற்றை ஆயுதமாக்கினார். இப்போது தவறான வழிகாட்டுதல் பெற்ற நோபல் குழு உறுப்பினர்கள், நீதிக்கு எதிராகச் செயல்பட்டு யூதர்களை அரக்கர்களாகச் சித்தரித்த ஒரு பெண்ணை கௌரவிக்கிறார்கள் எனக் கூறியுள்ளார்.



# அமெரிக்காவில 100 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மக்கள் முன்னிலையில் மரண தண்டனை! ஏன் இந்த முடிவு?

அருகிலிருந்தும் தொலைதூரப் பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் அங்கு திரண்டனர். அமெரிக்காவின் கென்டக்கி மாகாணத்தில், கணவரை இழந்த வயதான வெள்ளையின பெண் ஒருவரைப் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட கறுப்பின ஆண் ஒருவரைப் பொதுவெளியில் தூக்கிலிடுவதைக் காண ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பலரும் ஆற்றங்கரையில் வரிசையாக நின்றனர்.

1936 ஆகஸ்ட் 14ஆம் தேதி, கென்டக்கி மாகாணத்தின் ஓவன்ஸ்பரோ நகரில் இந்தச் சம்பவம் நடந்தது. வரலாற்றில் குறிப்பிடத்தக்க வெப்ப அலையின் நடுவே வெப்பம் தகித்துக் கொண்டிருந்த வெள்ளிக்கிழமை அது. தூக்குமேடைக்கு அருகில் சிலர் தங்களுக்கான இடத்தைப் பிடித்து வைத்துக் கொள்வதற்காக முந்தைய இரவே வந்து உறங்கினர். வேறு சிலர் முந்தைய மாலையில் 'நெக்டை விருந்துகள்' நடத்தினர். மது அருந்தியதால் ஏற்பட்ட மயக்கம் தெளியாத நிலையில் அவர்கள் அங்கு வந்தனர். பார்வையாளர்களுக்குப் பதின்ம வயதினர் பாப்கார்ன் மற்றும் குளிர்பானங்களை விற்றுக்கொண்டிருந்தனர்.

அதிகாலை 5 மணிக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படும் நேரத்தில், அங்கு திரண்டிருந்த கூட்டம் சுமார் 20,000 பேராக அதிகரித்திருந்தது. அப்போது தான், இருபது வயதுகளில் இருந்த ரெய்னி பெத்தேயா தூக்குமேடையை நோக்கிச் சென்றார். பெற்றோரை இழந்த அவர் 70 வயதான பெண்ணைக் கொள்ளையடித்து பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்ததாகக் கூறப்படும் குற்றத்தை ஒப்புக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தார்.

மரணதண்டனைக்கு முந்தைய நாள் பிற்பகலில் அவர் தனது கடைசி உணவைச் சாப்பிட்டிருந்தார். அதில் பொரித்த கோழிக்கறி, பன்றி இறைச்சித் துண்டுகள், மசித்த உருளைக்கிழங்கு, ஊறுகாயிட்ட வெள்ளரிக்காய், சோள ரொட்டி, எலுமிச்சை பை மற்றும் ஐஸ்கிரீம் ஆகியவை இடம்பெற்றிருந்தன.

சிகாகோ, நியுயார்க் போன்ற தொலைதூர நகரங்களில் இருந்தும் செய்தியாளர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்களில் பலர், ஒரு பெண் தூக்கிலிடும் பணியை செய்ய உள்ளார் என் பரவிய வதந்தியை காணவே வந்திருந்தனர்.





அந்தப் பகுதியின் ஷெரிஃப் நான்கு மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அவருக்குப் பதிலாக, அவரது மனைவி எதிர்பாராத விதமாக அந்தப் பொறுப்பை ஏற்றிருந்தார். ஆனால், தூக்குமேடையின் லிவரை இழுக்க அவர் மறுத்து விட்டார். அதற்குப் பதிலாக பணியமர்த்தப்பட்ட தூக்கிலிடுபவர்கள் பெத்தேயாவுக்கு மரணதண்டனையை நிறைவேற்றினர்.

இந்தச் சம்பவம் அமெரிக்காவில் பெரும் கவனத்தைப் பெற்ற கடைசிப் பொது தூக்கிலிடலாக அமைந்தது. பெத்தேயாவின் மரணதண்டனையைச் சுற்றி அரங்கேறிய கேளிக்கை நிகழ்ச்சியைப் போன்ற சூழல் கென்டக்கி மக்களில் பலருக்கு அவமானத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, 18 மாதங்களுக்குப் பிறகு அந்த மாகாணத்தின் ஆளுநர் பொது வெளியில் மரணதண்டனை நிறைவேற்றுவதற்குத் தடை விதித்தார்.

அதற்குள் பொதுமக்கள் முன்னிலையில் மரண தண்டனை நிறைவேற்றும் நடைமுறையைப் பெரும்பாலான மாகாணங்கள் கைவிட்டிருந்தன. சமூகத்தின் பார்வையில் மரணதண்டனை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, மேலும் மனிதாபிமானமான, தனிப்பட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றிருந்தது.

இருப்பினும் 1937ஆம் ஆண்டு மிசூரி மாகாணத்தில் நடந்த மற்றொரு தூக்கிலிடலைச் சில நூறு பேர் நேரில் பார்த்தனர். அந்தச் சம்பவம் பெரிதாகப் பேசப்படவில்லை என்றாலும், அதுவே அமெரிக்காவின் கடைசிப் பொது மரணதண்டனையாக அமைந்தது இப்போது வரை.

பெத்தேயா தூக்கிலிடப்பட்டு 90 ஆண்டுகளுக்கும் சற்று அதிகமான காலத்துக்குப் பிறகு, அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்செத், 2009-ஆம் ஆண்டு டெக்சாஸில் உள்ள ஃபோர்ட் ஹுஜீட் ராணுவத் தளத்தில் ஆயுதமற்ற 13 சக ராணுவ வீரர்களைக் கொன்ற நிடல் ஹசனுக்கு ராணுவம் பொதுமக்கள் முன்னிலையில் மரண தண்டனையை நிறைவேற்றும் என அறிவித்தார். இதையடுத்து, துப்பாக்கிச் சூடு மூலம் நிறைவேற்றப்படும் அந்த மரணதண்டனை நேரலையில் ஒளிபரப்பப்படும் என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை தெரிவித்தது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு மிகக் கடுமையான விளைவுகள் ஏற்படும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்,' என்று ஹெக்செத் கூறினார்.

மரணதண்டனை குறித்து நீண்டகாலமாக ஆய்வு செய்து வரும் கொலராடோ பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் மைக்கேல் ராடெலெட் இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார். மீண்டும் ஒரு பொது மரணதண்டனை நடைபெறும் என்று நான் ஒருபோதும் கற்பனை செய்ததில்லை,' என்று அவர் தெரிவித்தார். மரணதண்டனைக்கு பொதுமக்கள் மத்தியில் நிலவும் ஆதரவு தொடர்ந்து குறைந்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார். உதாரணமாக, 1994ஆம் ஆண்டில் மரணதண்டனைக்கு ஆதரவு 80 சதவீதமாக இருந்தது. தற்போது அது 52 சதவீதமாகக் குறைந்துள்ளது. குறிப்பாக, பரோல் இல்லாமல் ஆயுள் தண்டனை வழங்குவதற்கான மாற்று வாய்ப்பையும் முன்வைக்கும்போது, மரண தண்டனைக்கான ஆதரவு மிக வேகமாகக் குறைந்துள்ளது,' என்று அவர் கூறினார்.

மரணதண்டனையை நேரலையில் ஒளிபரப்பும் யோசனை குறித்து அமெரிக்க மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள இன்னும் காலம் ஆகலாம். ஆனால், இந்த ஒளிபரப்பைக் காண மில்லியன் கணக்கானோர் அல்லது அதற்கும் அதிகமானோர் இணையலாம் என்பது கிட்டத்தட்ட உறுதி.

ஹெக்செத்தின் அறிவிப்பு குறித்து ராடெலெட், 'இதனால் மரண தண்டனைக்கான நியாயப்படுத்தல் ஒரு பொழுதுபோக்காக மாறுகிறது... பாப்கார்னைக் கொண்டு வாருங்கள், நண்பர்களை அழையுங்கள் என்பதுபோல ஆகிவிடுகிறது,' என்றார்.

பெத்தேயாவின் மரணதண்டனை குறித்து கடந்த ஆண்டு தான் ஒரு புத்தகத்தை வெளியிட்ட சோன்யா லீ, துப்பாக்கிச் சூடு மூலம் நிறைவேற்றப்படும் மரணதண்டனை நேரலையில் ஒளிபரப்பப்படும் என்ற அறிவிப்பைக் கேட்டபோது, 'நமது எதிர்காலத் தலைமுறையினரை நினைத்து மிகுந்த அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தேன்' என்றார்.

'1936ஆம் ஆண்டு இதை 'கொடூரமான வன்முறையின் கேளிக்கை நிகழ்ச்சி' என்று அழைத்தனர். அப்போது கென்டக்கி மாகாணத்தின் ஓவன்ஸ்பரோவில் இதைப் பார்ப்பதற்காக 20,000 பேர் திரண்டனர். இப்போது அந்தக் காட்சியை இன்னும் அதிகமான மக்களிடம் கொண்டு சேர்க்கும் தொழில்நுட்பம் நம்மிடம் இருக்கிறது. இது நிலைமையை இன்னும் கொடூரமானதாக மாற்றுகிறது,' என்று அவர் கூறினார்.

1936ஆம் ஆண்டு அந்தக் கூட்டத்தில் சோன்யா லீயின் தாத்தா, பாட்டியும் இருந்தனர். அப்போது அவர்கள் பதின்ம வயதிலேயே திருமணமானவர்கள். தனது பாட்டி 2002ஆம் ஆண்டு இறந்த பிறகு தான் இதைப் பற்றி சோன்யா லீ தெரிந்து கொண்டார். தனது பாட்டி உயிருடன் இருந்த போது எழுதி வைத்திருந்த பதிவைப் படித்தபோது, பெத்தேயாவின் கழுத்து முறியும் சத்தத்தைக் கேட்கும் அளவுக்கு அவர்கள் தூக்குமேடைக்கு அருகில் நின்றிருந்தது தெரியவந்தது.

அந்த மரணதண்டனை குறித்து அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர் மேற்கொண்ட ஆய்வுகள், அந்தச் சம்பவம் கென்டக்கி மக்களில் பலரின் மனதில் நீங்காத பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததை வெளிப்படுத்தின.

'இது போன்ற கொடூரமான நடைமுறையை நாம் கடந்த காலத்திலேயே விட்டு விட்டோம் என்று முழு மனதுடன் நம்பினேன். இரான், வட கொரியா, ஆப்கானிஸ்தான் போன்ற உலகின் மிகச் சில நாடுகளில் தான் இத்தகைய கொடூரங்கள் நடைபெறுகின்றன என்று நினைத்தேன். அமெரிக்கர்களான நாம் இப்போதும் அத்தகைய ஆட்சி முறையின் ஒரு பகுதியாக இருக்கிறோமா என்று கருதிக்கொள்கிறோமா? இது மிகவும் கொடூரமானது,' என்று அவர் கூறினார்.

(18ம் பக்கம் பார்க்க)



Secure. Grow. Protect.
Your Future, Your Terms - Protect What Matters
KRISHNA SABARATNAM
Insurance & Investments
I'm here to help! Call now
416-846-2685
Krishna.gsabaratnam@gmail.com
10 Thornmount Drive, Scarborough, ON, M1B 3J4.

# சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்கு முதலிடம்!

வட மாகாணத்தில் உள்ள அனைத்து மாற்று வலுவுடையோர் பாடசாலைகளிலும் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை தரப்படுத்தலில் மிகச் சிறந்த பாடசாலை எனும் விருதினை பெற்றுக் கொண்டுள்ளது.

வட மாகாண சமூக சேவை திணைக்களம் ஒவவொரு ஆண்டும் பாடசாலைகளை தரப்படுத்தி சிறப்பாக இயங்குகின்ற பாடசாலைகளை கௌரவிப்பது வழமையாகும்.

அநத வகையில் இந்த ஆண்டும் தெய்வக் குழந்தைகளின் சிவபூமி பாடசாலை முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற்ற மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றி பதக்கங்களை பெற்று சாதனை படைத்த சிவபூமியின் இந்த தெய்வக் குழந்தைகளை அமெரிக்க அரசாங்கம் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஏற்றி அமெரிக்க நாட்டின் வீதிகளில் அழைத்து வந்த போது வீதிகளில் நின்ற அமெரிக்க மக்கள் தங்கள் கைகளை தட்டி உற்சாகப் படுத்தினார்கள்.

இந்தக் காட்சிகளை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த தெய்வக் குழந்தைகளின் பெற்றோர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்து, எங்கள் பிள்ளைகளுக்கு இப்படி ஒரு உயர்வான வாழ்க்கையா? ... என வியந்து கண்ணீர் வடித்தார்கள்.

இந்த தெய்வக் குழந்தைகளுக்கு அப்படி என்ன எதிர்காலம் உள்ளது என பலர் ஏளனம் செய்த போது சிவபூமி மனவிருத்திப் பாடசாலையும் ஆசிரியர்களும் இந்த தெய்வக் குழந்தைகளின் திறமைகளை இந்த உலகம் அறிய செய்தார்கள்.

தங்கள் பிள்ளைகளின் திறமைகளை எண்ணி வியந்து பார்த்த பெற்றோர்கள் மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

பிற உயிர்களுக்கு எந்தவொரு தீங்கும் செய்யாத மனித உருவில் வாழும் இந்த தெய்வக் குழந்தைகள் நமது சமூகத்திற்கு என்றும் பெருமைக்குரியவர்கள்..

நற்பண்புகள் நிறைந்த இந்த குழந்தைகளின் மறுவாழ்விற்காக பணியாற்றுகின்ற ஒவ்வொருவருக்கும் சிவ புண்ணியம் கிடைக்கும் என்பது திண்ணம்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாவச்சேரி மண்ணில் ஆரம்பிக்கப்பட்ட மாற்று வலுவுடையோருக்கான மனவிருத்திப் பாடசாலையில் தற்போது 45 மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளிவாய்க்கால் மண்ணில் தற்பொழுது புதிய பாடசாலை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கிளிநொச்சி மண்ணிலும் 65 மாணவர்களுடன் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை சகல வசதிகளுடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

நன்றியுணர்வும் நற்பண்பும் நிறைந்த இந்த தெய்வக் குழந்தைகள் குறைவின்றி வாழ நீங்களும் மனதார வாழ்த்துங்கள்.

நல்ல மனம் படைத்த மனித உருவங்களை பார்க்க வேண்டும் என யாராவது விரும்பினால் இந்த தெய்வக்குழந்தைகளை ஒரு தடவை வந்து பாருங்கள்.

யாராவது தங்களின் பிறந்த நாளுக்கு இந்த தெய்வக் குழந்தைகளுக்கு ஏதாவது உணவுப் பொருள் வாங்கி கொடுத்தால் ஒவ்வொரு தெய்வக் குழந்தையும் எனைய குழந்தைகளின் கைகளில் அந்த உணவுப் பொருள் இருக்கிறதா? ...

தன்னைப் போல மற்ற குழந்தைகளுக்கும் உணவுப் பொருள் கிடைத்துள்ளதா? என பல தடவைகள் பார்த்து உறுதிப்படுத்தி கொண்ட பின்பே ஒன்றாக உண்ண ஆரம்பிப்பார்கள்.

நடந்து செல்கையில் யாராவது ஒரு தெய்வக் குழந்தை விழுந்து விட்டால் ஏனைய குழந்தைகள் ஓடிச் சென்று அந்த குழந்தையை பத்திரமாக தூக்கி வருவார்கள். ஒரு தெய்வக் குழந்தை அழுதால் ஏனைய குழந்தைகள் ஆசிரியரிடம் ஓடிச் சென்று தங்கள் கவலையை வெளிப்படுத்துவார்கள். தற்கால உலகில் சாதாரண மனிதர்களிடம் எதிர்பார்க்க முடியாத உயர்ந்த பண்புகள் எல்லாம் இந்த தெய்வக் குழந்தைகளிடம் நிறையவே உள்ளது. இலங்கையின் தேசிய ரீதியில் மேற் கொள்ளப்பட்ட தரப்படுத்தலில் முதலாம் இடத்தைப் பெற்ற ஒரே ஒரு மனவிருத்தி



பாடசாலை, என்ற பெருமை எங்கள் தெய்வக் குழந்தை களின் சிவபூமி மனவிருத்தி பாடசாலைக்கு மட்டுமே உண்டு.

மாற்று வலுவுடையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றி பதக்கம் வென்ற பெருமை இந்த சிவபூமி பாடசாலைக்கு மட்டுடே உண்டு.

நாள்தோறும் பல்கலைக்கழக மாணவர்கள், அரச அலுவலர்கள், கல்லூரி மாணவர்கள், சமய நிறுவனங்களின் அங்கத்தவர்கள் என பல தரப்பினரும் வருகை தந்து இந்த தெய்வக் குழந்தைகளின் ஆற்றல்களை கண்டு ஆனந்தம் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு தெய்வக் குழந்தைக்கும் இந்த உலகில் இடமுண்டு என்ற உண்மையை உலகிற்கு சொன்ன பெருமை சிவபூமி அறக்கட்டளைக்கே உண்டு.

இங்கு கல்வி கற்ற தெய்வக் குழந்தை ஒன்று தற்பொழுது நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தில் பணியாளராக கடமையாற்றுகிறார். இங்கு ஆரம்பக் கல்வி மற்றும் தொழில் கல்வி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றது.

இலவச பேருந்து வசதி, காலை மதிய உணவு, இலவச சீருடை என அனைத்து வசதிகளும் எவ்வித கட்டணங்களும் இல்லாமல் இலவசமாக வழங்கப்படுகின்றது.

இன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பற்றி பரிசுகளை பெற்றுக் கொண்ட காட்சியை பார்த்த தெய்வக்குழந்தைகளின் பெற்றோர்கள் கண்ணீர் விட்டு அழுது தங்களின் ஆனந்தத்தை வெளிப்படுத்தினார்கள்.

இந்த தெய்வக் குழந்தைகளின் நல்ல எதிர் காலத்திற்காக நீங்களும் இவர்களைகளை வாழ்த்தி ஆசீர்வதியுங்கள். அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு (குறள்)

பொருள் - இவ்வுலகத்திலே இன்பம் அடைந்தவர் அடையும் சிறப்பு, அவர் அன்புடையவராகப் பொருந்தி வாழ்ந்த வாழ்க்கையின் பயனே என்பர்

# ஜனாதிபதி செயலகம் நோக்கி வந்த பிக்குகள் பேரணி! நீதிமன்றத் தடை உத்தரவையும் சிறைச்சாலை வாகனத்தையும் பார்த்த 24 மணி நேரத்திற்குள் கூடாரங்களை அகற்றிக் கொண்டு ஓட்டம்!

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரரை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, கண்டி தலதா மாளிகைக்கு அருகிலிருந்து 'சுதந்திரப் பாத யாத்திரையாக கொழும்புக்கு வருகை தந்த ஆயிரக் கணக்கான பௌத்த பிக்குகள் உள்ளிட்ட குழுவினர், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக 15 ஒக்டோபர் 2026 வீதியில் அமர்ந்து தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஞானசார தேரரின் விடுதலை விவகாரத்தில் ஜனாதி பதி தீர்க்கமான முடிவை எடுக்கத் தவறி வருவ தாகவும், நாட்டில் மதச் சமத்துவத்தை உறுதி செய்யவில்லை என்றும் குற்றஞ் சாட்டி கொழும்பு ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக பௌத்த பிக்கு கள் மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து இக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தன.

15 ஒக் 2026 நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலக த்தை வந்தடைந்த பிக்குகள், ஜனாதிபதியின் செயலா ளர் தலைமையிலான அதிகாரிகளைச் சந்தித்து தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இப்போராட்டத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த 'ஜன அரகலயே புரவசி சங்கவிதானய'வின் (மக்களின் போராட்டப் பிரஜைகள் அமைப்பு) செயலாளரும் சமூக ஆர்வலருமான சானக்க பண்டார, ஞானசார தேரரின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி எவ்வித உறுதியான முடிவை யும் எடுக்காமல் மாதக்கணக்கில் காலம் தாழ்த்தி வருவதாகக் கடுமையாகச் சாடினார்.

இதன்போது மகா சங்கத்தினரின் கோரிக்கைகள் தொடர்பில் சுமார் ஒரு மாத காலத்திற்குள் பதிலளி க்கப்படும் என ஜனாதிபதி செயலக அதிகாரியொரு வர் தெரிவித்துள்ளார். எனினும், பதிலளிப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ள பிக்குகள், தமது கோரிக்கைகளுக்குப் பதிலளிப்பதற்கான உறுதியான திகதியொன்றை அறிவிக்குமாறு வலியுறு த்தி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகத் தரையில் அமர்ந்து போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

போராட்டம் இடம்பெறும் பகுதியில் தற்காலிகக் கூடாரமொன்றை அமைப்பதற்கு பிக்குகள் முயற்சித்தபோது, அவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதுடன், பின்னர் பொலிஸாரின் உத்தரவுக்கமைய குறித்த கூடாரம் வீதியின் ஓரப்பகுதிக்கு நகர்த்தப்பட்டது. தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக பிக்குகள் நன்மை வேண்டி பிரித் பாராயணத்திலும் ஈடுபட்ட போதிலும், தமது கோரிக்கைகளுக்குத் தெளிவான பதில் வழங்கப்படாத நிலையில் அங்கிரு ந்து வெளியேறாமல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் விசேட பொலிஸ் குழுக்கள் பல பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு ள்ளன.

இப்போராட்டம் குறித்து ஊடகங்களுக்குக் கருத் துத் தெரிவித்த வணக்கத்திற்குரிய பலாங் கொடை கஸ்ஸப்ப தேரர், புத்தபிரானின் தருமத்தையும் சீவரப் பாரம்பரியத்தையும் அழிக்க முற்படும் அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்திற்கு எதிராக, வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி ஆறு நாட்கள் வெயில் மற்றும் மழையைப் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான பிக்குகள் கொழும்பில் ஒன்று கூடியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

நேற்று (15) வியாழக்கிழமை ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் சுமுகமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், நியாயமான தீர்வுகள் எது வும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அவர், ஞான சார தேரரை விடுதலை செய்யாமல் மகா சங்கத்தினர் இங்கிருந்து செல்லும் எண்ணத்தில் இல்லை என் றும், மாரனாலேயே தோற்கடிக்க முடியாத துறவி களை அரசாங்கத்தால் தோற்கடிக்க முடியாது என்றும் வலியுறுத்தினார்.

அரசியலமைப்பின் 34(1) பிரிவின் கீழ் ஜனாதிபதிக் கென வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படு த்தி ஞானசார தேரருக்கு உடனடியாக பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிய அவர், அவ்வாறு செய்யத் தவறினால் ஜனாதி பதி தனது பதவியை விட்டு விலக நேரிடும் அல்லது ஞானசார தேரரை விடுதலை செய்ய நேரிடும் எனத் தெரிவித்ததுடன், கோரிக்கைகள் நிறைவேறும் வரை பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவே தொடர்ந்து தங்கியிருப்போம் என்றும் எச்சரித்தார்.





## நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

கொழும்பு ஜனாதிபதி செயலக வளாகத்தில் உலபனே சுமங்கல தேரர் உள்ளிட்ட 55 பேர் தங்கியிருப்பதைத் தடுக்கும் வகையில் கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன இன்று (16) வெள்ளிக்கிழமை நீதி மன்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வியாழக்கிழமை (15) மாலை ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற பல பிக்குகள் இரவு முழு வதும் அப்பகுதியில் தங்கியிருந்தனர். ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபடுவ தைத் தடுத்து கொழும்பு கோட்டை நீதவான் நீதி மன்றம் தடை உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து, காலி வீதிக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களை போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் அகற்றியுள்ளனர். அகற்ற மறுத்தால் பலவந்த




மாக வெளியேற்ற பொலிசாரால் சிறைச்சாலை பேருந் தும் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பலர் போராட் டத்தை கைவிட்டு சம்பவ இடத்திலிருந்து கலை ந்து செல்ல ஆரம்பித்துள்ளனர்.

## பிரதமர் வெளியிட்ட அறிவிப்பு

கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பில், பொருத்த மான நேரத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாய க்க தகுந்த முடிவை எடுப்பார் எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். நேற்று 15 ஒக் 2026 கண்டிக்குச் சென்ற பிரதமர், மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா விகாரைகளுக்குச் சென்று மகா நாயக்க மற்றும் அனுநாயக்க தேரர்களைச் சந்தித்தார். ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கு வது குறித்து அரசாங்கம் பரிசீலிக்குமா என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையது எனக் குறிப்பிட்ட பிரதமர், நீதி மன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ள நிலையில், மேலதிக நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் ஆலோ சனையின் அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் தெரிவித்தார். ஜனாதிபதி நீதித்துறை, நாட்டின் கலாச்சாரம் மற்றும் அரசியலமைப்பை மதிப்பவர் என பிரதமர் ஹரிணி குறிப்பிட்டுள்ளார். அவர் தற்போதைய சூழலைக் கருத்தில் கொண்டு சரியான தீர்மானத்தை எடுக்கும் திறன் ஜனாதிபதிக்கு இருப்பதாகத் தனது நம்பிக்கையையும் பிரதமர் வெளிப்படுத்தினார்.

இதேவேளை, ஆரம்பத்தில் ஞானசார தேரர் சிறை உடைகளை அணிய வேண்டும் என்ற நிபந்தனை க்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பேரணி, பின்னர் அவருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையாக மாறியது குறிப்பிடத்தக்கது. (இச்செய்தி கனடா நேரப்படி 16 ஒக்டோபர் 2026 அதிகாலை 4.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது)